223 : 226
M 84
115960.

ஸ்ரீ.

# அரிச்சந்திரன்சரிதை.

வாய்மையின்மேன்மையையுணர்த்துவது.

இஃது,

சென்னை இராஜதானிவித்தியாசாலைத்

தமிழ்ப்பண்டிதராகிய - திருவல்லிக்கேணி

சுதரிசனம்.

கிருஷ்ணமாசாரியரால்,

ஸ்ரீவேதவியாசபகவான் அருளிச்செய்த

பதினெண்புராணங்களில் ஒன்றாகிய

ஸ்காந்தபுராணத்திலிருந்து

மொழிபெயர்த்தெழுதப்பட்டு

திருவல்லிக்கேணி:

ஸ்ரீசரஸ்வதிபண்டார அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1884

All Rights Reserved.

| | | | | பக்கம். |
|---|---|---|---|---|
| க | ஆவது. | அத்தியாயம். | நூல்வரலாறு. ... ... ... ... | 1 |
| உ | ,, | ,, | அரிச்சந்திரன்வரலாறு. ... ... ... | 3 |
| ந | ,, | ,, | அரிச்சந்திரன் சந்திரமதியைமணம்புரிதல். ... | 5 |
| ச | ,, | ,, | இந்திரசபையில் வசிட்டவிசுவாமித்திரர்விவாதம். ... | 8 |
| ரு | ,, | ,, | அரிச்சந்திரனிடத்தில் விசுவாமித்திரமுனிவர் பொருள்பெற்றது. ... ... ... | 13 |
| சா | ,, | ,, | விசுவாமித்திரமுனிவரேவலால் பஞ்சமும்பன்றியும் சேர்கை. ... ... ... | 16 |
| எ | ,, | ,, | அரிச்சந்திரன் வேட்டைக்குச்செல்லுதல். ... ... | 18 |
| அ | ,, | ,, | அரிச்சந்திரன் தீக்கனவுகண்டு இரங்குதல். ... | 23 |
| கூ | ,, | ,, | அரிச்சந்திரன் விசுவாமித்திரருக்கு இராச்சியம்கொடுத்து வனம்புகுதல். ... ... ... | 26 |
| க0 | ,, | ,, | விசுவாமித்திரமுனிவர் பணம்வாங்கும்படி நக்ஷத்திரகனைக் காவல்அனுப்புதல். ... ... | 31 |
| கக | ,, | ,, | அரசனுக்கு வழியெல்லாம் துன்பம்விளைத்தல். ... | 33 |
| கஉ | ,, | ,, | முனிவர்கற்பித்தகாட்டுத்தீயைச்சந்திரமதிகற்பினால் கடத்தல். ... ... ... ... | 42 |
| கந | ,, | ,, | நக்ஷத்திரகன்சந்திரமதிக்குத் துர்ப்போதனைசெய்தல். | 46 |
| கச | ,, | ,, | அரிச்சந்திரன் கங்கையில்ஸ்நானம்செய்து காசிக்குச்செல்லுதல். ... ... ... | 49 |

| | | | | பக்கம். |
|---|---|---|---|---|
| ௧௫ | நான்கா. | அத்தியாயம். | நக்ஷத்திரகன் அரிச்சந்திரனைப் பணத்திற்காக இடிப்படுத்திதல். ... ... ... ... | 52 |
| ௧௬ | ,, | ,, | அரிச்சந்திரன் மனைவியை விலைசெய்தல். ... ... | 56 |
| ௧௭ | ,, | ,, | காலகௌசிகன் சந்திரமதியை விலைக்குவாங்கிச்செல்லுதல். ... ... ... ... | 61 |
| ௧௮ | ,, | ,, | நக்ஷத்திரகனுக்குப்பொருள்தரல். ... ... | 63 |
| ௧௯ | ,, | ,, | நக்ஷத்திரகன் அரிச்சந்திரன் கொடுத்ததைத் தானே வைத்துக்கொண்டு மீண்டும் முனிவர்பொருளைக்கொடுக்க இடிப்படுத்திதல். ... ... ... | 67 |
| ௨௰ | ,, | ,, | நக்ஷத்திரகன் அரிச்சந்திரனைவிலைகூறல். ... ... | 68 |
| ௨௧ | ,, | ,, | வீரவாகுவென்னும்புலையன் அரிச்சந்திரனைவிலைகொள்ளுதல். ... ... ... ... | 75 |
| ௨௨ | ,, | ,, | அரிச்சந்திரன் புலையனுக்கடிமையாய் மயானங்காத்திருத்தல். ... ... ... | 78 |
| ௨௩ | ,, | ,, | சந்திரமதி காலகௌசிகன் மனையில் பணிசெய்துவருந்துதல் ... ... ... ... | 82 |
| ௨௪ | ,, | ,, | லோகிதாசன் அரவுதீண்டி இறத்தல். ... ... | 84 |
| ௨௫ | ,, | ,, | சந்திரமதி மயானத்தில் புத்திரனுக்குத்தீக்கடன் இயற்றப்புகுதல். ... ... ... ... | 90 |





| | | | | பக்கம். |
|---|---|---|---|---|
| ௨௬ | ஐந்தா. | அத்தியாயம். | சந்திரமதியைக்கொலைபாவியென்று தலைவாங்கத்தீர்மானித்தல். ... ... ... ... | 95 |
| ௨௭ | ,, | ,, | அரிச்சந்திரன் தன்மனைவியின்சிரந்தனைத்துணிக்கவாள்வீசுதல். ... ... ... ... | 99 |
| ௨௮ | ,, | ,, | திரிமூர்த்திகளும் பிரத்தியக்ஷமாய் அரிச்சந்திரன் மனைவியைக் கொலைசெய்யாதுதடுத்துச் சத்தியவிரதத்தை மெச்சுதல். ... ... ... | 102 |
| ௨௯ | ,, | ,, | தேவர் அநுக்கிரகத்தால் குமாரனும்பிழைத்தல். ... | 104 |
| ௩௰ | ,, | ,, | அரிச்சந்திரமகாராசன்மீண்டும் அயோத்தியில் அரசாளுதல். ... ... ... ... | 103 |

ஸ்ரீ

கடவுள் துணை

# காப்பு

சீர்திகழும் தில்லைச் சிற்பரத்தசபாநடேசனால்
செந்தமிழ்த் திருத்தலையுடையோனென்னும் — பார்புகழும்
வாய்மையரிச்சந்திரன் நல்ல சரிதைசெப்புதற்கும்
வாய்மையிலத்து அன்னையே கிருபை.

வாய்மையின் மேன்மை

அரிச்சந்திரன் சரிதை.

## க - ஆவது அத்தியாயம்.

நாட்டுவளம்.

திருவும் செங்கோலும் திரிமூர்த்திகளும் திகழ்ந் தருளும் திருப்பதியாய், அமரர்களெல்லாம் அமலன் அடிபணிந்து அகமலம் அறுக்கும் இடமாய், மல [illegible] லால்வைகுண்டம் என்னும் பேரோடு பொலிவதாய், முனிவர்க்கு முனிவர்கள் முனைவரும் [illegible] பொருந்திய தேவர்களுக்கிடமாய், நில மெங்கும் புகழும் [illegible] பிரசித்தியாகியதில்; அந்நாட்டில் நற்றவமுனிவர் கள் சேர்ந்து கூடி ஆராதித்து அவர்கள் முன் நடக்கிறதாயின், அவ்வாறாய் சிறந்த வாசஸ்தானமாகிய அயோத்தியில், ஸ்ரீ வேதவியாசபகவான் வெளியிட்டருளிச்செய்த புராணங்களுள் பொருள் விளங்கப் பெற்றவராகிய ஆசிரியர் எழுத் தருளிய நூல்களைக் கொண்டு எழுந்து எடுத்துக்கொண்டு அருகிய முதலானோர் கள் எழுந்து எடுத்துக் கொண்டு அருகியமுதலானோ.

பசாரம்புரிந்து ஆசனமீந்து எழுந்தருளப்பண்ணிப்பரிவொடு சேமமுசாவி, "ஆரியனே! தேவரீர் எழுந்தருளியதனால் அடியோங்கள்தவமும் வேள்விகளும் பயனடைந்தன; இப்பதியும்புனிதமாயிற்று; பிறவிப்பயன்பெற்றேம்; எனப்பலவாறுபோற்றித், தேவரீர் அறியாத அறங்களும் ஆரணங்களும் இதிகாசங்களுமில்லை; ஆகலின், இம்மண்ணுலகில் "அம்பரீஷன்பகீரதன்முதலியமுடிமன்னா பதினறுவரும் சகரன் நளன்முதலாஞ்சக்கிரவர்த்திகள் அறுவரும் புண்ணியபுருஷர்கள்; அவர்கள் சரிதம்கேட்பின் பாவம்தொலையும்; என்னும் இப்புனிதர்களுள் அரிச்சந்திரன்சரிதை செவியுறின் புலைக்குற்றமும்போ"மெனவும் புலமையுடையோர் புகலக்கேட்டனம்; வாய்மைவலியுறுத்தியவள்ளலாகிய அவ்வரிச்சந்திரன் விருத்தாந்தம் விளங்கஉரைத்தருள்கவென விண்ணப்பஞ்செய்யச், சுகமுனிவர் உரைக்கலாயினர், முனிவிர்காள்! அமர்ந்துகேண்மின்; முன்னம் ஓர்காலத்தில் எழிலையும் நரம்பிசைக்கும் மகதியென்னும்யாழ்கொண்டு ஆரோகண அவரோகண மூர்ச்சனைகளில் தெளிய விரல்தடவந்து, கேட்போர்மனமுருகிக்கண்பனிப்ப உடல்வேர்த்துப் புளகம்போர்ப்பமெய்பரவசமாம்படி இரசமொழுக இன்னிசையில் இறைவன்குணம்பாடும் வித்தகனும், ஆத்துமஞானம் உபதேசிக்கையாலும், பங்கத்துக்கேதுவாய் நரர்களுக்குள்ள ஒற்றுமையை ஒழித்தலாலும் நாரதனென்னும் பேர்பெற்ற தேவமுனிவர் ஓர்காலத்தில் எவ்வுலகுக்கும் மேலான சத்தியஉலகஞ்சென்று, தன்தந்தையாகிய நான்முகக்கடவுளையடிபணிந்தெழ, அவ்வயன் அன்போடு அருகில்இருத்திச், சுகசெய்தி வினவி, ஆங்கு அவனாயிருக்கையில், நாரதமாமுனிவர், தாதையாகியபிரமதேவனைநோக்கி, அத்தனே! உலகங்களில்



உள்ளநற்குணங்களில்உத்தமம் எது? அக்குணமுடையோனுமுளனோ? எனவினவ, அன்னவூர்தி அருளிச்செய்யலானன்.

---

## உ - ஆவது. அத்தியாயம்.

### அரிச்சந்திரன் வரலாறு.

கேளாய் புதல்வனே. நீராழியுடுத்தநிலமகளுக்கு நுதல்போன்றகோசலம் என்பதோர்நாடுளது. அது - சான்றோர் மனமெனத்தெளிந்தும் அமுதம்போலினிமைபயந்தும், ஆழிபோல் ஆழ்ந்தும், மன்னுயிர்உய்யச்சீவனமளித்தலால் தாய்போலும், நாட்டைக்காலால் அளத்தலால் நெடுமால்போலும், கங்கைதோய்தலால் முக்கண்மூர்த்திபோலும், மானசசரசிற்பிறத்தலால் சரயுஎன்னும்பேர்பெற்றும், பெருகாநிற்குமாநதி பாயப்பெற்றதாய், நெய்தல்குவளை ஆம்பல்முளரி முதலியமலர்ந்துபெருகும் நறைத்துளியுண்டளிபாடவும் களியன்னம்நடையாடவும், புனற்புள்ளினங்கள் புளினங்களில்உலாவவும், சைவலம்படர்ந்து தாழ்ந்துதெளிந்து தண்ணென்றபுனல்நிறைந்து சிறப்புற்றபொய்கைபலசூழ்ந்து, வருக்கை மா அரம்பை முதலியபயன்தருந்தருக்கள்கனிந்தும் கோங்கு செண்பகம் குருக்கத்தி பாடலம்முதலிய மலர்தரும்மரங்கள்பூத்தும், குயில்கூவ மயிலாலவானோங்கிப் புயல்தவழும் படப்பையும், செந்நெலும் கன்னலும்வானுறவோங்கும் வளம்பெற்றபண்ணைகளும், தேனுறுபீரமும் தினைப்புனங்களும்வாய்ந்து, பலவளம் செறிந்துள்ளது. அம்மாண்புள்ள நாட்டிக்குத் திலதமெனத்திகழுஞ்சிறப்புள்ளதாய்நேமிமால்வரைபோலும்நிரைந்தோங்கி நவமணிகுயிற்றி நாஞ்சில்அமைந்து பொ

ங்கொடங்கிக் கதிரவனுங்கடக்கவரிதானமாமதிலுடையதாய், பாதாளஉலகத்தின் அளவாய், ஆழ்ந்து பெரும்புறக்கடல்போல் அகன்று கராக்களும் சுறுக்களும் திரிவதனால் பார்ப்பவர்கள் நெஞ்சுஉருக்கப் பயம் விளைப்பதான அகழிசூழ்ந்ததாய், மலைகளுங் காடுகளும் அடர்ந்து அடர்க்கொண்ணா அரணுடைத்தாய், உம்பருலகங்கடந்து ஒளிவீசும் மணிச்சிகரமணிந்த எழுநிலைக் கோபுரங்களுள்ளதாய், செம்பொன்னினும் செம்மணியினும் சமைத்துப் பகலவனொளிகெடப்பாய் கதிர்பரப்பும் பன்னிலைமாடங்களடுக்கியதாய், மன்னர்எனத்தகும் மன்பதைநிறைந்ததாய், இருநிதிக்கிழவனும் இணையல்லன் எனத்தகும் செல்வம் மிக்கவணிகமாக்கள் நிறைந்த ஆவணமுடையதாய் மும்மதவாறு பெருக்கும் நால்வாய்க்கூடமும் பரவைத்திரையிற்பாயும் பரியின்மந்துரையும் பற்றலர்நடுங்கும் படைக்கலச்சாலையும், பல்வளனுஞ்செறிந்தபண்டசாலையும் நிதிகள் நிறைந்தநீள்பண்டாரமும் அளவிட்டரிய அணிகல உறையுளும் கலைகள்பயிலும்கல்விக்கழகமும் கஞ்சனம் கருவியமஞ்சனச்சாலையும் முதலவாப் பலசாலைகளமைந்ததாய், அமராவதியினும் ஐசுவரியம் சிறந்துடையதாய் அமர்புரிதற்கு அணுகவொண்ணாமையின் அயோத்தி எனப்பேர்பெற்ற ஓர்மாநகரமுண்டு. ஆதியில் இம்மண்ணுலகைப்பலகண்டங்களாகவும் நாடுகளாகவும்பகுத்து இந்நகரமும் சமைத்துச்சாதியொழுக்கமும் மதாசாரமும் அரசநீதியும் நவமுறுநிலைபெறச்சூரியபுத்திரனும் ஞானியாகியவைவஸ்வதமனுஎனபவன் செங்கோல்செலுத்தினன்; பின்பு; இக்ஷ்வாகுவும் இந்திரன் இடபமாகத்தாங்க இமையவன்மிசைஇவர்ந்து ஊர்ந்து இமையவர்பகைவர்களைக்கடிந்து வெற்றிதந்துபுகழ்பெற்றககுஸ்தனும் விசுவாமித்திரமுனிவர் அருள்



பெற்றுத் தனுவோடுசுவர்க்கமுற்ற திரிசங்குவும் அரசாண்டனர்; அத்திரிசங்குமன்னவன் மகன் அரிச்சந்திரன்; அவன் தன்னுரியனாய் அருந்ததிகணவனாய் அருந்தவமுனியான வசிட்டபகவான் அருளால்சவுளம் உபநயனம் முதலிய சற்கருமங்கள் செய்விக்கப்பெற்றுப் பலகலைகளும் கற்றுச்சத்தியமே நித்தியமென்றுணர்தலுற்று, வேதம்ஆகமம்புராணம் இதிகாசம்முதலிய நூல்களபயின்று மெய்ப்பொருளுணர்ந்து சிறப்பரான சான்றோரோடும் முனிவரோடும் அருங்கலை ஆய்ந்துஅமைந்த உள்ளத்தவனாய், தோள்வலியால் ஆள்கொண்டநீள்கடல்சூழ்ந்த பூமண்டலமுடையனாய், ஆதுலர் அவாக்கெடவழங்கும் வண்கையுடையனாய் மன்னர்மணிமுடிதேய்கருங்கழற்காலினனாய், செவியளவுநீண்டுசெவ்வரிபரந்துகருணையொழுகுங் கண்களுடையனாய் நூற்பொருள் கேட்கும் நேர்மையான செவியுடையனாய்க், கண்கவரும் வனப்புள்ளோனாய்த் திசையெங்கணும் சீர்த்தியாம் நிலவெறிக்கத் திங்கள்போலவிளங்கலின்அரிச்சந்திரன் எனப்பேர்பெற்றனனாகிப்புகழ்பூண்டு உலகாண்டுவந்தனன்.

---

## ௨ — ஆவது அத்தியாயம்.

### அரிச்சந்திரன் சந்திரமதியை மணம்புரிதல்.

இவ்வாறிருக்கையில் கனோசிநாட்டில் கண்டகிநதிதீரத்தில் கன்னமாபுரிமன்னவனாகிச் செங்கோல்செலுத்தும் சந்திரவம்சத்தில் உதித்தோனாகியமதிதயன் சந்ததியில்லாமல் சர்வேச்வரனை இதயகமலத்தில் இருத்தித்தவஞ்செய்து அத்தேவின் அருளால் சந்திரமதியென்னும் பெண்ணைப்பெற்றனன். அப்புதல்வி திருமகள் ஒத்தவடிவ

றும் கலைமகள் அன்ன அறிவும் நிலமகள் நிகர்த்த பொறையும் உடையளாய் வளர்ந்து வருங்காலத்தில், மன்னவர் அனேகர் அம்மாதரசை மணங்கொள்ள மனவிருப்பத்தோடு மதிதயமன்னவனைக் கண்டு மணஞ்செய்ய விளம்ப, மதிதயன் அவர்களை நோக்கி அப்பெண்மணி பிறக்கும்போதே கழுத்தில் திருமங்கலியத்தோடு இருக்கக்கண்டு உளந்தடுமாறி; என்செய்வோம் திருமங்கலியம் பூண்டிருப்பதனால் விவாகமானவள் என்று கருதி யாரும் வரியார்களே என்று ஏக்கங்கொண்டிருக்கையில், வியன் மூவுலகும் படைத்து அளித்து அழிக்கும் விமலன் விட்புலத்தில் விமலையொடு கட்புலத்திற்கு எதிர் எய்தி மன்னவனே; மதிமயங்கல்! இவள் கழுத்தில் விளங்கும் மாங்கலியசூத்திரம் இனிக் கொழுநனுக்கே அன்றி மற்றெவர்க்கும் காணப்படாது; என்று அருள்புரிந்து மறைந்தனர்; ஆகலின் அது யார்கண்ணுக்குப் புலப்படுமோ அவனே கணவன் என்று மறுமொழி தந்தனன்; பின் அநேக நாள் வரையில் விவாகமில்லாமையின் மதிதயன் மனமறுக்கத்தோடிருந்தனன். இன்னணம் நிகழச் சிலதாபதர் அயோத்திநகரம் எய்திச் சந்திரமதியின் வடிவழகும் குணமும் வர்ணிக்க, அதுசெவியுற்ற அத்திரிசங்குமகன் காதல்கொண்டு, சதுரங்கசேனை சூழப்புறப்பட்டுக் கன்னோசிநாட்டில் கன்னமாபுரியில் வசிட்டர் முதலிய முனிவரோடும் மந்திரிகளோடும் வந்து ஓர்பொழிலையின் இறுத்தனன்; இச்செய்தி மதிதயன் உணர்ந்து, மகிழ்ந்து எதிர்கொண்டு மன்னவர்க்குச் செயத்தகும் முறை மரியாதை செய்து, முனிவர்களையும் தொழுது உபசரித்துத் தவிசிட்டு இருந்து சுகமோவென்னச் சேமம் உசாவி மகிழ்ச்சியோடு இருக்கையில், வசிட்டப்பகவான் சந்திரமதியின் விவாகத்தைக் குறிப்பித்து விளம்ப அதற்குடனே



மதிதயன் இம்மன்னவன் என்மகளைப்பார்த்தபின்பே மணம்புரிதல் நிச்சயிக்கவேண்டும் ஆகலின் மணம்புரியுமுன் என்மகளைப்பார்க்கவேண்டுகின்றேன் என்றனன். உடனே அரிச்சந்திரனும் முனிவர்களோடு மண்டபம் ஒன்றில் எய்த, மதிதயன் தன் தனயையைக் கன்னிகாமாடத்தினின்றும் மணிச்சிவிகையேற்றி மகளிர் சூழக்கொணர்ந்து நிறுத்த, அரிச்சந்திரன் அவள் வனப்பும் கழுத்தில் மாங்கலியமும் விளங்கக்கண்டு, மகிழ்ச்சியும் சினமும் ஒருங்கெழுந்து, மயக்கமுற்று ஒருவண்ணம் தேறி, மதிதயமன்னவனை நோக்கி மன்னவ! ஈதென்ன புதுமை? ஒருவற்கு விவாகம்செய்தளித்துப் பின்னும் வேறொருவற்கு அளிப்பதும் உண்டோ? என்று இகழ்ந்து உரைத்துப், படையுருவிப் போர்க்கெழுந்தனனாக, உடனே மதிதயன் மகிழ்ச்சியும் அச்சமும் கொண்டு உரைக்கலாயினன். அயோத்திமன்னவனே! கேள்; இம்மங்கலசூத்திரம் இவள் உடலோடுபிறந்தது; எவரும் கட்டினதல்ல அத்திருமங்கலியம் கணவன்கண்ணுக்கே தெரியக்கடவதா எனக் கருத்தன் வரமுளது; அது உமது கண்ணுக்குப் புலப்பட்டமையின் அவளை நீர் மணம்புரியவேண்டுமென வேண்டிக்கொள்ள, அரிச்சந்திரன் ஒன்றும்தோன்றாமல் மனம்மருண்டிருக்க, அவையிலுள்ளோர் அனைவரும் அறிய அசரீரி "அவள் கன்னிகை; தேவனருளால் மாங்கலியத்தோடுபிறந்தாள்" என்று அறைந்தது. பின் யாவரும் கலக்கந்தெளிந்தனர். அரிச்சந்திரனும் மணம்பூண்டு மகிழ்ச்சியோடு இருந்து மதிதயன் விடைகொடுக்கப்பெற்று, மனைவியோடு அயோத்திசென்றனன். பின்பு அரிச்சந்திரன் தன்காதலியுடன் பொன்மாளிகைகளிலும் மணிமண்டபங்களிலும் நானமெழுகிப் பனிநீர் தெளித்து அகில் புகைத்து மணங்கமழும் மாளிகைகளிலும் மந்த

மாருதம்வீசக் கோட்டுப்பூவும் கயப்பூவும் கொடிப்பூவும் கனிவர்க்கமும் சிங்காரவனங்களிலும் பூக்கொய்தும் புனல்குளித்தும் பலவண்ணமாய் இன்பம்நுகர்ந்தும் வாழாநிற்கையில், சந்திரமதி கருவுற்று உடலும் சந்திரனொப்பவிளர்த்துத்தோன்ற, மன்னவனும் மகிழ்ந்து வசிட்டமாதவன்பணியால் புஞ்சவனம்முதலிய சற்கருமங்கள்புரிந்து சின்னாளிருந்தபின், சந்திரமதி இளங்கதிர்போலும் கான்முளையை இனிதிற்கருவுயிர்த்தனள். உடனே வேந்தர்வேந்தனும் அளப்பரிய மகிழ்வுடன் அந்தணர்முதலிய அனைவர்க்குமமாதானங்கள்வழங்கித், தன்னாரியன் அருளால்ஜாதகருமம்முதலிய வியற்றி லோகிதாசியனென நாமகரணமும் செய்துமுடித்தனன். இவ்வாறு அரிச்சந்திரன்மகிழ்ந்து அறநெறிதவறாது புலிப்போத்தும் புல்வாயும் ஓர்துறையில் நீருண்ணப் பகைகடிந்து மாற்றரசர்மணிமுடி பணியக் கடவுளர்களிக்க மகதவர்மகிழ வையமுழுதும் தனிக்குடைநிழலில் ஓர்திகிரி உருட்டி மன்னுயிரைத் தன்னுயிரென ஓம்பி ஆளுகைசெய்தனன்.

---

## ௪ - ஆவது. அத்தியாயம்.

### இந்திரசபையில்வசிட்டவிசுவாமித்திரர்விவாதம்.

[illegible] இன்னணமிருக்க; எண்ணியவெண்ணியாங்களிக்கும் வன்மையுடையவாய் மெல்லிய தளிரும் நறையொழுகும்மலரும் இனியகனியும் தண்ணிழலும் நல்கி கனகமயமாய் ஒளிரும் கற்பகக்காவும் காமதேனுவும் சிந்தாமணியும் பாற்கடலிற்பிறந்து திக்கயங்கட்குத்தலைமைபூண்ட ஐராவதம்எனும்வெண்ணிறயானையும், அவ்வண்ணமே உற்பவித்த உச்சைச்சிரவம் என்னும் வெண்புர



வியும், உடையதாய்மந்தாகினியாய் சூழ்ந்திடமாய் அமுதமுண்டுபிணி, மூப்பிறப்பு முப்பத்துமூக்கோடி. தேவர்களுக்கும் பாற்கடலில் பிறப்பால் அப்சரசுகளுள் பேர்பெற்ற அரம்பை மேனகை உருப்பசி முதலிய தெய்வமகளிரும் இயக்கர். கந்தருவர் விச்சாதரர் முதலிய தேவசாதியரும் மிட்டும், நாப்புக்குழலினக்கருவி முதலியவும் வேற்றுமை தோன்ற இசைபாடி நட்டமாடிக்களித்து இருக்கும் இடமாய், எல்லாப்போகமும் அமர்ந்திருத்தலால் சுவர்க்கம் எனப்படும்பொன்னாட்டில் வேதசாலை வெள்ளிச்சாலை யோகசாலை கீதசாலை இன்னரமுதலியபரிவும் நாதசாலை ஆடகத்தமைந்தநாடகசாலை வியப்பமைந்தவிநோதசாலை முதலியவாம் அளவிறந்தசாலைகளையுடையதாய், யோகமண்டபம் போகமண்டபம் கொலுமண்டபம் முதல்வாப்பலமண்டபமடங்கியதாய், மந்திரசபைமணிச்சபை ஞானசபை மௌனசபை தவக்காருசசபைகள் பலநிறைந்ததாய், ஏழுலகிலுமுள்ளநகரங்கட்கு உவமைசெடுத்தாளுமிடமான அமராவதி என்னும் மாநகரில் பொன்றிணிந்ததிலமும் வைடூரியமடுக்கியபித்தியும் மரகதத்தூணும் பவளப்போதிகையும்வைரத்துலாமும்பதுமராகத்தாற்பரப்பும் வேய்ந்தமுகடும் மூவுலகும் அடங்கும் அகடும் உள்ளதாய்விளங்குமகர்மை என்னும் அவைக்களத்தில் அஷ்டவசுக்களும் சப்தமருத்துக்களும் ஏகாதசருத்திரர்களும் துவாதசாதித்தரும் திக்குப்பாலகர்களும் சப்தருஷிகளும் சூழக்கந்திருவர்பாட, அரம்பையர் ஆடத் தெய்வமகளிர்கவரிவீச, சித்திலக்குடைநிழற்ற, நவமணிகுயிற்றிஒளிரும் அரியணையில் காசிபமுனிவர்மனைவி அதிதிக்குமகனும் அமரர்தலைவன் ஆயிரம் இரவிகலந்து எரித்தல் போலக்கதிர் வீசும் மணிமுடிகவித்து, மகரக்குழையிட்டு, வாகுவல

யம்பூண்டு, வச்சிரகடகமும் அரதனகங்கணமும் முத்துமாலையும் நவரத்தினமாலையும் அணிந்து, பொற்பூணூல் தரித்துப், பவித்திரம் அரசமுத்திரை முதலிய ஆழியிட்டு; பொன்னாலும் வீரகண்டையும்கட்டிப் பூம்பட்டாடையும் பீதாம்பரமும் உடுத்து, உத்தராசங்கம்தரித்துக், கலவைச்சாந்துபூசி மந்தாரமுதலிய கற்பகத்தம்பமாலை சூடி மகாலக்ஷ்மிபோன்ற சவுந்தரியமுடையளாகிய அரிராணியோடு மேவி அழகுபெறவீற்றிருந்து வசிட்டர் விசுவாமித்திரர்முதலியமாமுனிவரோடுமகிழ்ந்து உரையாடிக்கொண்டிருந்தனன்; அக்காலத்துக்குணங்களிற்சிறந்தது எது? எனப்புரந்தரன் வினவ, முனிவர்கள் "வாய்மையே மேன்மையது" என அருளிச்செய்து அமைந்திருந்தனர். பின்னும் ஆகண்டலன் தபோதனர்களைநோக்கி, மாமுனிவர்காள்! நீவிர்அறியாதது ஒன்றுமில்லை ஆதலின்? அவ்வாய்மைதவறு ஒழுக்கத்தவனுளனோ? உளனாயின் அம்மகாபுருஷன் யாவன்? யாண்டுளன்? தெளிய உரைத்தருள்கவென விருப்பத்தோடுவேண்ட வசிட்டமாமுனிவர் ஓ புண்ணவர் அண்ணலே! கேள்; விரிபுனல் சூழ்ந்த பூவுலகில் சரயுநதித்தென்கரையில்பிரமனும் மகிழ்த்தக்கதாகலின் கோசலம்எனப்பேர்பெற்ற நாட்டில் வைவஸ்வதமனுவால் ஏற்படுத்தப்பட்ட அயோத்தியென்னும் தொன்னகரத்தில் எத்திசையும் புகழ்விளங்கும் அரிச்சந்திரன் என்னும் அரசர்க்கரசன்வாய்மையே தூய்மையெனக்கடைப்பிடித்து அறநெறிதவறாது அரசாட்சிசெய்கின்றனன் என அருளிச்செய்தனர் அதுசெவியுற்ற கௌசிகமுனிவர் அழுக்காறுகொண்டு பொருக்கெனவெழுந்து, புருகூதனைக்கண்ணுற்று, அமராதிபதியே! அமர்ந்துகேள் இவ்வசிட்டன் அவ்வேந்தனுக்குப்புரோகிதன்; அம்மன்னவன் மனையில் அவன்



அளித்த அடிசிலும் கருணையும் அயின்று, இனிய நல்லுணவும் உண்டு கன்னல்முதலிய இனிய இரசங்கள் பருகிக்கனிகள் அருந்திப் பீதாம்பரமுடுத்துச்சிவிகைஊர்ந்து மணித்தவிசிருந்து அச்செம்மலோடொப்பச்செல்வமும் சுகமும் நுகர்பவனாதல்பற்றிப்பொய்யேபுகழ்கின்றனன்; ஆனாலிவ்வசிட்டன் இத்தேவராச சபைக்கண் இருக்கவும் தகுதியுடையன் அல்லன்; அந்நராதிபன் வாய்மைதவறுவன் அல்லன்; சாமதானபேததண்டம் என்னும்உபாயம் நான்கினாலும்பிறர் நாட்டையும் செல்வத்தையும்கவர்வதேதொழிலாய்அமைந்து அதிகாரச் செருக்குற்றுப், பொருள் நசையால்பலவாறு எளியகுடிகளைவருத்தி, இறை கொண்டு புன்கண்மைகண்டும் இரங்காதவன்கண்மையும் நிராக்கோபமும் மிக்ககாமமும் கொண்டுபூபாரம் சுமந்து பலவழியிலும் மனமுரண்டு கொலைவதைத் தொழில் பூண்ட காவலற்குச் சத்தியம் எப்படி அமையும்? சிறிதும் பொருந்தாது; ஆகலின் அக்குரிசிலுக்குச்சத்தியவிரதமே இல்லை, என்று விசுவாமித்திர முனிவர் அறைந்தனர். அவ்வுரைகேட்டு ஞானம் தன்னிடத்துக்குடி கொண்டமையால் வசிட்டர் எனப்பேர்பெற்றதபோதனர்! மகபதியை நோக்கா, இமையோர்க்கிறைவா அப்புரவலன் வாய்மைதிறம்பின் யான் பிராமணியத்தைத்துறந்துசிகையும் உபவீதமுமில்லாதேனாய் மதுப்பருகி நாயின் ஊன் உண்டுவேசரி ஊர்ந்து தென்புலநோக்கிச் செல்லக்கடவேன்; எனச்சபதஞ்செய்தனர். உடனேவிசுவாமித்திரர் பொள்ளெனவேர்த்து, அவ்வரிச்சந்திரன் வாய்மைதிறம்பாக்கால்யான் சித்தாச்சிரமத்தில் பலவாயிரமாண்டுவேனிலில் ஐந்தீநடுவணும் பனிநாளில் தண்புனலினும் உறைந்துகாய் கிழங்கு இலை சருகுசாம்பர் அருந்தியும்நீர்பருகியும்காற்றை அயின்றும்

விராசாரனையும் கோரமாகமுயன்று பெற்றதவத்தி
றபாதியைக்கொடுத்து எழுநிலைகட்டும்அவனைப்போகா
தபடியாக்கிப்பலயுகங்கள் அரசாளும்படிஇன்றுகு
மறுகாலமனையும் இவ்விந்திரசபையில் நின்றே
டொக்கசிறப்புற்றிருக்கவும் புரிகுவல்லனைச்சப
தஞ்செய்து, என் அகவலவியால் அவனேறினவர்
யுரைக்கிமனைவிமக்கள் கினைகள் இழந்து பசிதுற
ந்துபூமியைப்,மிடித் தன்பமமிகறாகராய்துவித்து
உண்மைநிறம் பசசெய்து கன்மப்பிரஷ்டனுக்கு
விப்பேன்; என்றுசையோடு கையறைந்து சபிதக்
கினை செய்தார். அதுசெவியுற்ற வசிட்டமுனிவர்
கௌசிகமுனிவரை நோக்கி; எவ்வளவு துயர் உறி
னும் தலைதுரவு கலியினும் உயிர் இறுதியா நேர்பி
னும் இன்னும் மிக்கக்கொடிய துயர் வருவதாயி
னும், அவ்விறைவன் இறையும் உரைதவிரான்;
சத்தியமேதிக்கொள்ளுந்த் கொள்கைநீங்குமுடை
யோன்; முதன்மைபெரியனுக்கு அருதிளானோன்;
[illegible]
டையிலன்; அரிணிஉணர்ந்து மறங்கடிந்தான்;
கல்வியின் மிக்கதெளிந்தோன்; அறத்துக்கு
வேலி; தத்துவங்கள் அறிந்தவன்; எவ்வுயிர்க்
கும் அன்பன்; எப்பொழுதும் முகமலர்ச்சியுடை
யவன்; சகலசற்குணநிதி; பெருங்கடல்போன்ற
பெருமையும் இமயமலை போன்றநிரத்துவமும்
சந்திரன் போலினியதோற்றமும். திருமால்போ
ன்றதிறலும் கடையுகத்திப்போன்றசினமும் நிலம்
போன்றபொறையும் குபேரன்போன்ற செல்வமும்
உடையவன்; அறமேஉருவெடுத்தது போன்றவ
னுதலால் மூவுலகாளவரினும் ஏழ்வரினும் மகிழ்
வினும் மெய்ம்மறந்தும் பொய்ம்மைபிறழான்; பிற
ப்புமுதல்பிராமணரையும் மறையினையும் மெய்
ப்பொருள்உணர்ந்தும் மகிழ்ந்தும் ஆதிமூர்த்
தியை ஆராதித்துவரும் பிரமமுனிவன் நான்;



நீயோமுன் க்ஷத்திரியசாதியிற்பிறந்து அரசாண்டு வேட்
டையாடி உயிர்வதைபுரிந்து என்றுச்சிரமத்தில் விருந்து
உண்டுபோகவாவால் காமதேனுவைக்கவர்ந்து சேனையொடு
பங்கப்பட்டுப் பின் அந்தணன்வலியேசிறந்ததென அறி
ந்து என்னைவெல்லவேண்டும் என்று முனிவரால் அரசா
ளுகைதனைவிட்டு நான்குதிக்கினும் கோரமானதவம் இய
ற்றி உட்பகையாறும்தெறப்பலவாக நெறிபிறழ்ந்து நடை
யில் பிரமன்அருளால் முனியான உன்னைப்போல் நான்
பொய்புகலேன் என்வாக்கினும் அசத்தியம் வாராது; என்
று உறுதிக்கூற, விசுவாமித்திரமுனிவர் சினந்து வசிட்
டரைநோக்கி, நின்மக்களை எல்லாம் நாசம்செய்தும் என்
திறல்தெரிந்து கொண்டிலைபோலும்; என்னினி, அத்திரு
பனை இதோபுலையனுக்கு அடிமையாக்கிப் பொய்புகலச்
செய்கிறேன்; எனவஞ்சினங்கூறி, ஒன்றுக்கொன்று
தீயெழவிழித்தனும் இருவரும்தண்டகமே ஏந்திக்கொ
ண்டெழுந், தெய்வநாயகனும்நீங்கி அந்தப்புரஞ்சென்று
ன். மற்றைத்தேவர்களும் திசைக்காவலர்களும் முனிவர்
களும் குலைந்தனர்; திக்கயங்கள் தியங்கின; பூமிசலித்தன;
சேடனும் முடிதாக்கின்கோள்கள் திமிர்ந்தன; ஆகா
யம் இருள்மூடியது. அதுகண்டு அமரர்கள் அனைவரும் அ
வ்விருவரையும்அடிபணிந்துஅருகுவைத்தார்! நும்
சினம் ஆறுக என அடைக்கலம்புக்கனர். உடனே முனிவர்
கள் இருவரும் மண்ணுலகுசென்றனர்.

---

## ௫ - ஆவது அத்தியாயம்.

### அரிச்சந்திரனிடத்தில் விசுவாமித்திரமுனிவர் பொருள்பெற்றது.

பின்பு விசுவாமித்திரமுனிவர் அயோத்திமாநகரத்தில்
அரிச்சந்திர பூபாலன் அளவிடலரிய வேள்விகள் வேட்டு

முனிவர்களுக்கும் அந்தணர்க்கும் அறவிகட்கும் ஆதுலர்க்கும் காவலர்க்கும் பாவலர்க்கும் நல்கூர்ந்தவர்க்கும் அவரவர் வேண்டியவாறு, வரையாது வழங்கி, வண்மையோங்கவிற்றிருக்கும் அற்றம் நோக்கி வெளிப்புரிந்து வெறுக்கையுள்ளிருக்கும் வேலை என்று உன்னி, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வதுபோல் இப்போதே நம் கருத்தை முற்றுவிக்கவேண்டுமென வலித்துத், தன் சீடர்களோடு அந்நகர்க்கோபுரவாயில் கடந்து, உட்சென்று, அரசன்கோயில்வாயில் எய்தி, வாயில்காவலாளரைக் கூய், "விசுவாமித்திரமுனிவன் நின் கடைத்தலைக் குறுகினன்" எனவும் வேந்தன் மாட்டுரைவழியின்; அன்னார் அவர்கள் அக்கணமே விரைந்து ஏகிப் புரவலனைப் பணிந்து "போற்றி மன்னவர் மன்ன! கௌசிகமுனிவர் நம் வாயிற்கடை உற்றனர்" என விண்ணப்பஞ்செய்ய, மன்னவன் மகிழ்ந்து, மந்திரிகளோடு எழுந்து, மாதவனை எதிர்கொண்டு, மலர்ப்பதம் பணிந்து, சோடச உபசாரஞ் செய்து, மணித்தவிசிட்டு மன்னியிருக்கச்செய்து; அடிகேள்! "தேவரீருடைய ஆச்சிரமங்களும் வேள்விச்சாலைகளும் பசுக்களும் நன்கு இருக்கின்றனவோ? வித்தியார்த்திகள் மறையுங் கலையும் ஓதிவருகின்றனரோ? நித்திய நைமித்திக கருமங்கள் முட்டின்றி நடைபெறுகின்றனவோ?" என்று திரிகரணங்களும் ஒத்துப் பணிவோடும் பரிவோடும் முகமன் கூறித், "தேவரீர் எழுந்தருளியதினால் என் செல்வமும் பதியும் பயன் அடைந்தன; பிறந்ததற்குப் பயன் பெற்றேன், அமரர் அனைவரையும் ஆராதித்த பலன் அடைந்தேன் பிறவிப்பெருங்கடலும் வற்றியது;" என்று மகிழ்ந்து மெய்புளகம் போர்ப்ப, ஆனந்தக்கண்ணீர் பெருகவும் பணிவாய் அடிகள் இன்று எழுந்தருளியது யான்செய்த மாதவத்தினாலோ என்தொல்குலஞ்செய்த தவத்தினாலோ இப்படிச்செய்த தவத்தினாலோ அறிகிலேன் என்று வியந்து கூறி அடியேனுக்கு ஆவதென்ன என்று விண்ணப்பஞ்செய்ய, அத்தபோநிதி இரவிகுலதிலகனே நின் அன்பும் அருச்சனையுங் கண்டு அகமகிழ்ந்த



றேன்; எல்லாவேள்விகளுந் தமக்குடலாக உடைய எந்தேவுக்குரிய சிறப்புடைய வேதசாஸ்திரவிதிவழுவாமல் வேள்விகள் இயற்றிப்புரிந்து வல்லவரும் மன்னவரும் வியக்க விசேஷதக்ஷிணைகள் கொடுக்கவேண்டும் எனச்செய்யுற்று, நின்னைக் காண்பான் அணுகினேன்; நின்னைக் கண்டு களித்தேன்; உரைப்பதும் ஒன்றுண்டு; உற்றுக்கேள் ஸ்ரீசர்வேசுவரனைக் குறித்து ஓர் பெருவேள்வி செய்யக்கருதியுள்ளேன்; அம்மகத்துக்கு, இராஜசூயத்திற் பிறந்த ஜயந்தம் என்னும் பொருத்தமிக்க சிறந்த வேள்வியுள் ஒருவன் இவர்க்கு அன்று, இத்தினமொன்று உயர்வுடைய அச்செல்வமும் உயர்ந்த சிறப்பும் வெறுக்கை இராசிக்கைப்பின் அதுமுற்றுப்பெறும்; அதன்பொருட்டு நாம் நாடிவந்தேம்; என்று அறிவிக்க, அரசர்க்கரசனாகிய அரிச்சந்திரனால் அக்கணமே கொடுக்கப்படும் பொருளை யாசித்து இம்மாமுனிவர் விரும்பியவாறு பெறுக எனக்கொள்க என, அவர்களும் அங்ஙனமே மொழிந்து மிக்கு உயர்ந்து ஒளிவிட்டு, காவியணிந்த மார்பின் முனிவர் அதுகண்டு விசுவாமித்திரமுனிவர் மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்து வேந்தனை நோக்கி, மன்னவ! தருமத்தால் உன்னைக் காட்டிலும் சிறந்தவர் இல்லை; உன்னைப்போல் வாய்மையுடையவரை இதுகாறுங் கண்டிலேன்; இவ்வளவாய் ஆளுடைமைத் தருமம் பொருந்திய அரசில்லாத ஆரணியத்தில் அறிவின் மிக்கவர்க்கு அமையாது. ஆனமோதம் அத்தனையும் அடைந்து ஓம்பும் திறல் ஏது? வருந்தியும் காக்கப்படும் வேதவிதித்திறத்தால் கட்டுப்படுவரும்; நீவிர் ஒப்பிலும்; தனமும் அவமாம்; அதன் இன்மையின் இருக்கவியலாத தீயின் மாட்டுக் காப்பாற்றுவை. யான் விரும்பியவாறு கொடு என்று அறைந்து, அப்பொருட்குன்றை அருகு வைத்து அரசனுக்கு ஆசிகூறி அமர்ந்திருந்தனர். பின்னர் அரிச்சந்திரனை நோக்கினர். "விசுவாமித்

திரமுனிவர் வெறுக்கைவேண்டியதேன்? மீண்டு மென்னிடத்திலேயே அடைக்கலம்வைத்ததேன்? என்று சிந்தித்துக்கலங்கி. "ஏதுவரினும்எம்பெருமானிணையடியேதுணை' யென்று துணிந்து ஒருவாறுமனந்தேறி அறநெறிதிறம்பாது அரசாளுகைசெய்து வந்தனன்.

---

## ௬ - ஆவது. அத்தியாயம்.

### விசுவாமித்திரமுனிவர் ஏவலால் பஞ்சமும் பலன் அழிவும்நேர்தல்.

இன்னணமிருக்கையில் விசுவாமித்திரமுனிவர் தன்னாச்சிரமத்தில் இருந்து, அரிச்சந்திரன்நாட்டில் முகில்துளிக்காமல் வறக்கவும் பிணிபீடிக்கவும் நியமித்து, விலங்குகளையும் பறவைகளையும் வரவழைக்க,அவைபோந்துபணிகேட்ப,முனிவர்-குன்றிலும் கானிலும்உள்ளமிருகங்களே! பறவைகளே! நீவிர் அரிச்சந்திரன் ஆளும் அயோத்திநாடு சூழ்ந்து, பைங்கூழ்களையும் பொழில்களையும் மன்னுயிர்களையும் அழித்துவாருங்கள் என்று ஏவினர். உடனே அக்கோசலநாட்டில் வறுமைக்குவித்தாய் வானம்வழங்காது வறக்க "விசும்பிற்றுளிவீழினல்லான்மற்றாங்கே பசும்புற்றலைகாண்பரிது" என்றபடிப் பசும்புல்லுங்காண்பரிதாய், ஆறுகளிலும் குளங்களிலும் மடுக்களிலும் நீர்வற்றி, நீர்க்கேணிகளில் ஊற்றுக்கண்களும்மாறின; நிலங்கள்வெடித்து அரவுகள் எங்கும்சிதறிப்பரவின; சிலவிடர்களில்தீயெழுந்துபொங்கின; பழனங்களிலும் வேலிகளிலும் தருக்கள் தீப்பற்றி எரியத்தலைப்பட்டன; நாயும்நரியும் ஊளையிட்டுச் கழுகுகளும் பருந்துகளும் அச்சமுற எங்கும்ஒலித்தன; வானத்திற் செந்நீர்துளித்தல; கொள்ளிவீழ்தல்முதலிய உற்பாதங்களுந்தோன்றின; ஆங்குள்ளோர் யாவர்க்கும் மனக்கவலையும் பிணியும்தொடர்ந்துநாளுநாளும்வளர்ந்தன



அச்சமுறத்தரும் காட்டுப்பன்றி முள்ளம்பன்றி சவரிமான் கலையமா காட்டுப்பரி காட்டுக்கரி கலை மரை செந்நாய் வரிவேங்கை வயமாகொல்லும்அரிமா முதலிய பலகொடிய விலங்குகளும் கழுகு பருந்துமுதலியவெருட்சிதரும் பறவைகளும் நாடுகளிலும் நகரங்களிலும் திரள்திரளாய்ப்புகுந்து அசனிபோலும் ஆர்ப்போடும் ஒலமிட்டுத், தானியங்களையும் பயிர்களையும் கன்னல்களையும் கதலிகளையும் பொழில்களையும் புறவுகளையும் அழித்து, எளிய உயிர்களைக்கொன்று,சனங்களையும் துயர்உறுத்த,அங்குள்ளவர்அனைவரும்துயராற்றாராய் அயோத்திநகர்புகுந்து மன்னவ!யாமிதுகாறும்பட்டிலாக்கொடும்பாடுபடுகின்றோம் இத்துணைநாள் நின்னருளால் எட்டுணையும் இடரின்றி நின்னுயிர்போல் ஓம்பினை; இப்பொழுது எங்கள் தீவினைப்பயனால் இடிபோன்றமிடியும் கொடும்பிணியும் உயிர்ச்சேதமும்பலனழிவும் பயிர் அழிவும் உடற்சிதைவும் உற்று, எவ்விலாக்கிடங்கள்போல் துடிக்கின்றனம். இத்துயரத்தை ஆற்றாச்சோரா கனைகளிலம்கடைக்கணித்துக் காத்தருளுக. எனக்கொற்றவன்கோயில்வாயிலில்அபயமிட்டனர். அதுசெவியுறலும் மன்னன் துணுக்குற்றுத், தியங்கிச்செயலற்றுநின்று நெடுந்தூரம்நினைந்து. ஏதுவரினும் இறைவன் திருவுள்ளம் என்றும் "ஊழிற்பெருவலியாவுளமற்றொன்று சூழினுந்தான் முந்துறும்" என்னும் ஒருவாறுமனந்தேறிஎன்குடிமக்களே நீவிர்அல்லலுற்றீர்கள் இதுநம்குற்றம் அல்லவென்றுகூறிஅவர்களை அஞ்சன்மின்எனஅச்சம்தவிர்த்து, ஈராண்டு இறைப்பணமும்தவிர்த்து, நம்அல்லலுக்குஎல்லையிலொழிவு தேடுகிறேனென்றுதேற்றி,நிதியும்நல்கிநும்பதிசெல்கென விடுக்க, அவரவர்தத்தம்உறைவிடம் உற்றனர். பின்பு அரசன்மந்திரக்கிழவரையும் மறைக்கிழவரையும்அழைத்துமதிவல்லோரே! இவ்விடர் கெடஎன்செய்யலாம் என்றுவினவ,அவர்கள்பரிகாரம்ஆராய்ந்து வேள்விதேவபூசைமுதலியசெய்வித்துப்பின் வேட்டைக்கும்செல்லவேண்டும் என

தியம்ப, அந்நேரத்தில் மன்னனாலோசித்து, ஆலயங்களிலும் தருமசாலைகளிலும் வேள்விகளுஞ்செய்வித்துச் சதுரங்கசேனையோடு வேட்டைக்குச்செல்லத்துணிந்தனன்.

---

## ௭ - ஆவது. அத்தியாயம்.

### அரிச்சந்திரன் வேட்டைக்குச்செல்லுதல்.

பின்னர்க்கொற்றவன் சேனைத்தலைவனை நோக்கி நாளை வேட்டைக்குச்செல்லத்துணிந்தமையின் குன்றுகளிலும் காடுகளிலும் பாலைவனங்களிலும் உள்ள பிராந்தியவனா முதலியமறவர்களை வருவித்துச் சேனைகளையும் போர்க்கு ஆயத்தப்படுத்துவனை ஆணைசெய்ய, அப்படைத்தலைவன் வனநேவர்களைக்கொண்டு எங்கும் பறையறைவித்து, வேடர்களே முதலியோரெல்லோரும் தத்தம்படைகளோடு வேட்டைக்கு வருகவெனக்கட்டளையிட்டனன். உடனே வனங்களினின்றும் இருண்டநிறமும் சுருண்டகுஞ்சியும் சுளித்தமுகமும் நெறித்தபுருவமும் தடித்த உடலும் வரையோடொத்தமார்பும் மல்லிநெத்ததோளும் வில்லெடுத்தகையும் எரிகக்கும் விழியும் உருமஞ்சுமொழியும் உடையராய்ப் பாசங்கைக்கொண்டு இடுகழுக்கி அரையிற்சச்சைக்கட்டி காலில்வீரக்கழல் அணிந்து வாள்விசித்து இருப்புக்கவசமணிந்து பொருப்பைக் கண்பொடியாகவிலங்கெடுக்க எயினர் பலகோடியரும் விடம்திரண்டன்ன மெய்யராய் வாள், தண்டு, சூலம், குந்தம், முதலிய ஆயுதங்களோடும் சிங்கங்களையும் வேங்கைகளையும் கடித்துத்தாக்கும் ஆண்மையுள்ள சங்கிலிகள் பிணித்துவரும் சத்தகோடி நாய்களுடன் சூழ்ந்துவரவும் மலைமலைவாரும் பரிவாரத்தும் பலகோடி படைவீரர்களோடும் கேடகம் காளம் முதலிய பண்டைக்கலைமேகத்துப் புல்லிடம் இன்றி எங்கணும் பரவினார்; சேனைத்தலைவர்கள் பிரியாவிடையோடு எழுந்தனர். மன்னவனும் பொற்சச்



சக்கட்டி வைரக்கவசமணிந்து சக்கரமுதலிய படைக்கலத்திரள்கொண்டு சமர்க்கோலம்பூண்டு வேட்டைக்குப் புறப்படக் கருதிக்காரியமாகிய மனைகளிருந்தும் செல்வப்புதல்வனும் மதிவல்லோனுமாகிய சத்தியகீர்த்தியென்னும் அமைச்சனும் பரிவாரமும் பின்தொடர, அவர்களோடும் பொற்சிவிகையும் மணிக்கொடிகளும் பதுமராகக்கேதனமும் முத்துக்குடைகளும் பூண்டு மாகம்முட்டும் முடியுள்ள தேர் மதங்கொண்ட மான்கள் பூட்டிய இரதம் இவர்ந்து, சங்கமும் காளமும் முரசம் முழங்கிட, மாணிக்க மகுடம் கதிர்வீச, முத்தவெண்குடை மதியைமருட்டச் சாமரையிரட்ட, மங்கையர் வாழ்த்தெடுப்ப, மறையவர் ஆசிகூற, மாகதர் புகழ்பாட, மன்னவர் இருமருங்கும் மணிமுடிதாழ்த்து வணங்கிச் செல்லச் சேனைத்துகள் பொன்னுலகம் புகப் படர மன்னுலகாக்க, விரைந்து வேட்டைக்குச் சென்றனன், அவ்வெயினர்படையில்சென்ற நாய்கள் ஆளிகள் போற்சென்று அங்குங்காட்டு மான்களையும் நரிகளையும் காட்டெருமைகளையும் முள்ளம்பன்றிகளையும் சிங்கம் முதலிய மிருகங்களையும் கடித்துத்துண்டங்களாக்கின; வேடர் விட்ட வெருச்சரங்களாலும் வேல்முதலிய வெம்படைகளாலும் வேங்கைகளும் சிங்கங்களும் கரடிகளும் கவயங்களும் கைம்மலைகளும் பலகோடிகள் மாண்டன. கொக்கு முதலிய பறவைகள் ஒன்றொழியாமல் மாய்ந்தன. அன்னணங்கொன்ற வேடர்கள் மெல்லிய மான் புலி கரடி முதலியவற்றின் தோல்களையும் கூர்மையான அழகுள்ள நகங்களையும் சமரிமுதலியவற்றின் மயிர்களையும் அழகிய மென்மையுள்ள பறவையின் இறகுகளையும் யானையின் தந்தங்களையும் முத்துக்களையும் அழகுள்ள விலங்கின் கொம்புகளையும் கஸ்தூரி கோரோசனை புனுகு முதலிய மென்மையான மணமுள்ள பொருள்களையும் அரசனிடம்கொண்டுவைத்து, இப்பொருள்கள் அரசருக்குரிய திறையென அங்கீகரித்திடவேண்டுமெனவணங்கினர்.

அரசனும் அவர் வேண்டுகோளின்படி அங்கீகரித்து, அவ்
வெயினர்கட்குத் தூசும் அணியும்நிதியும் அவரவருக்கேயி
வடைதந்தனன். அவர்களும் தந்தமிடம்சென்றனர். மன்ன
வன் அநேகம் மலைதோறும்திரிந்து முழைஞ்சுகளிலுள்ள
கேசரிகளையும் மலைச்சாரலிலுள்ள கைம்மலைகளையும்கண்
டங்களாக்கிக்காடுகளெங்கும் தேடித்தேடி விலங்குகள்பற்
றறக்கொன்றது. இன்னணமாக எஞ்சியவிலங்குகள் அஞ்சிச்
சென்று அருந்தவ முனியையடைந்து உற்றது கூறலும்,
கௌசிகமுனிவர் மிகச்சினந்து தவப்பெருமையால்பொன்
னிறமெய்யும் வெண்ணிற உகிரும்புட்பராகம்போலும்மிட
றும்பவளம்போன்றகாலும் பதுமராகம்போன்றகண்ணும்
மரகதமொத்தமுகமும்வச்சிரம்புரையுமெயிறும்நீலமணிநி
கர்க்கும்குரம்பும் உள்ளதாய்வயிறுமண்படவும்வெரிநவிண்
புகவும்நமனும்நடுங்கும்தோற்றமுள்ளதோர்பன்றியைச்சி
ருட்டித்துவிட, அவ்வேனம் மன்னவன்சேனையைக் கலக்கி
க்காலிறவும்பிடறுதுணிபடவும்,குடர்சரியவும்சிதைத்துத்
துகளாக்கி அழிக்கத்தலைப்படச், சேனையர்வெருண்டுகால
விசையாயோடி வேந்தனிடம் குறுகிவேதனைபட்டவெல்
லாமுரைக்க அரசனும் எதிர்சென்று வராகம்-வேழத்தை
யும் பரியையும் பதாதியையும்அழித்துக்கொண்டுநீதேவ
ரக்கன்றூற்று,க்கோதண்டம்குனித்துநாணேற்றிக்குணத்
தொனிசெய்து கூரியபகழிஎய்யஅக்கணைஅவ்வராகத்தின்
தலையிற்பட்டு உருவிச்சென்றது. அவ்வேனம் குருதியாறு
ய்ப்பெருக, நிற்கவாற்றாதாய் விரைந்தோடுதலும், சேனை
களோடுவேந்தனும் குன்றுகளும் வனங்களும்திரிந்துபுகா
தகுழல்களெல்லாம்புகுந்துதுருவிஉடலெங்கும்பொடியா
கமெலிந்து, மனைவியும் மகனும் மந்திரியும்தானுமாய்க்கங்
கைக்கரைகுறுகி, ஆண்டு எழுந்தருளியிருந்தகுலகுருவா
கியவசிட்டமாமுனிவரை வணங்க,அவர்ஆசீர்வதித்து அரி
ச்சந்திர ! என்இவ்வளவு அச்சமுறத்தகும் ஆரணியத்தில்
மனைவியோடும் மகனோடும் படைகளோடும் அணுகினை ?



அறநெறியிற்றும்நீயும் இவ்வாறுவேட்டைக்குவந்து அனை
த்துயிரும் அழிப்பது முறையோ ? இதுகாறும் வேட்டம்
செய்யும் மன்னவரெவரும் துயர்க்கடல் ஆழ்ந்தது அறி
யாயோ ? பெருமையும்வாய்மையும் கருணையும் உள்ளஉத்
தமனுனையும் எவ்வண்ணம் இக்கொடியதீச்செயலில்முய
ன்றனை ? மீண்டு நின்நகர்க்கேகுக என,அரசன் அகமஞ்சி அது
தன்னகர்க்கண்ணும் நாட்டின்கண்ணும் நேர்ந்தவற்றைமு
ற்றும் ஒழிவறவிண்ணப்பஞ்செய்ய, அருந்தவர்நகைத்து
இந்திரசபையில்விசுவாமித்திரமுனிவர் உன்னைச்சத்தியம்
தப்புவிக்கவஞ்சினம் அறைந்துஇன்னணம்புரிகின்றனர். இ
தனின்றல்லஇன்னும்எவ்வளவோஇடர்கள்உனக்குறும். நீச
த்தியவிரதனாகையால் நின்னிலைவிற்றலைவரேல் " இனைவெரி
தோயவன்ன வின்றுசெயினும்" வெருளேல் இக்குறைப
ப்பொழுதும் இசேல்.பெருந்தவமுள்ளவிசுவாமித்திரமுனி
வர் கொடுஞ்சினம் உடையராய் எப்பொழுதும் உன்னிட
த்தில் தவறுதேடிக்கொண்டேதிரிகின்றனர் என்று இதம்
சொல்ல, அவர்பாதபங்கயம்பணிந்து, மீண்டு ஏகுதிஅர
சன் திரிந்ததனால் வருத்தமுண்டாய் இளைத்துநாற்றிசையு
ம்நாடிநீர்கிடையாமல் அலைந்துவருகையில், குளிர்ந்தகா
ற்று தாமரைமுதலியமலரின்மணமுள்ளதாய்வீச, அந்நெ
றிபிடித்துச்சென்று, தேவேந்திரனுடைய நந்தனவனம்
போல் மெல்லியதளிரும் விரைநாறும் மலரும்இனியகனி
யும் உள்ளதாய்த்தண்ணிழல் தந்துகிளிகொஞ்சிக்குயில்கூ
விமயில்ஆடும் சோலைகண்டு, அதினுட்புகுந்து,செண்பகம்
மல்லிகை அரம்பைபலாமுதலியவற்றின்சிறப்பும்இனிமை
யும் கண்டுமகிழ்ந்து, தாமரைமுதலிய கருவலப்பூத்துச், சு
ரும்புகளையுண்டு பண்மிழற்ற, அன்னமும்வண்டானமும்
திரியச்சக்கிரவாகமொலிக்கப்பாற்கடலபோலும்பரவி, நி
றைந்து தெளிந்து குளிர்ந்த நீரும் உள்ளதாய், முனிவர்கள்
மகிழ்ந்து நீராட மிக்கிலம்கொழித்துப், பவளக்கொடிகை
யொதுக்கித்,திரைதரும்புனலறைகளுள்ளதோர்சிறந்தவா

விகண்டு, அருகுசென்றிழிந்து கன்னல்போலினியபுனிதப் புனல்பருகிக்குடைந்து நீராடியயர்வுதீர்ந்துபெரியதோர் ஆலமரநிழலில மெல்லியதளிர் தழைத்துப் பூமலிந்தகொடிச்சூழலிடைத்தென்றல்வீசிமென்றல்கமழ மனைவி மக்களோடு இருந்து செறிந்தளர்ச்சி நீங்கியிருந்தான்; சேனைகளும் அவ்வாறே சோலையைச்சூழ்ந்து காய்களையும் கனிகளையும் உண்டு, கிளைகளையொடித்துக், கொடிகளைக்குழைத்தும், தண்ணீரைக்கலக்கிக், குளித்துப்பருகி அயர்வுதீர்ந்தன. இவ்வனமிருக்கமன்னவன் ஆண்டு எய்திய ஓர் அந்தணனைக்கண்ணுற்று அருந்தவ! எல்லாச்சம்பும் விளையதாய் எல்லாத்தருவும் போக்குவதாய் எப்பருவமலரும் ஒருங்கலர்வதாய்ப் பல்லுயிர்களும் பகையற்றுப்பயிலுமிடமாய் விசித்திரவிலங்குகளும்பறவைகளும் உடையதாய் கனிகளுதிரும்மரங்கள் அடர்ந்துகாவிதழ்நீர்நிலைகள் நிறைந்து கண்ணுக்கினிமை பயந்து மனங்கவரும்இவ்வனம்யாருடையது; என இறைஞ்சிவினவ, அவ்வந்தணன்விசுவாமித்திரமுனிவருடையது; இதறுகருகில்அவரும்தவம் இயற்றுகின்றனர்; நான் அவர்மாணாக்கன்; சமித்தும்குசையும் பூவும் எடுத்துச்செல்லுகிறேன்; என்று சொல்லிப்போயினன். பின்னர் அரசன் அமைச்சனைநோக்கிஇவ்வந்தணன் கூறியதுசெவியுற்றதோ? அவ்விசுவாமித்திரர்மிகக்கொடிய சினங்கொண்டு சமயம்பார்த்திருக்கின்றனர். சேனைகள் இவ்வனத்தில் இறங்கி, மரங்களையொடித்துக்கொடிகளை அழித்துக்கனிகளைத்தின்று பொய்கைகளையுங்கலக்கிமிருகங்களையும்பறவைகளையும்கொன்றுஇடையூறுசெய்தன; இதற்கு எனசெய்வேன்அம்முனிவர்யாது செய்வரோ என்றுபயந்து பரிதபிக்கச், சத்தியகீர்த்திகண்டு அரசேமன்னவ! தபோதனரிக்கிறைந்தவெளிகர்யாதும்செய்யார்; அரசர்வேட்டையாடிக்கொடியவிலங்குகளை யழிப்பதும் சேனைபோடுவனங்கள் புகுவதும் அறமே; ஆதலினசினங்கொள்ளார்; இங்கதைஒழி, இந்தக்கொடிச்சூழலில்



தூங்குபொழுது இருந்து, இளைப்பாறிச்செல்; என அமைச்சன்றவுகூற. வேந்தன் சிறிதுமனந்தேறிமனைவியின்மடியில் தலைவைத்துச் சின்னேரந்துயின்று நியமந்தோகவுகண்டு எழுந்து. மயங்கிமனைக்கிழத்தியைநோக்கிக்கூறலுற்றனன்.

---

## ௮-ஆவது. அத்தியாயம்.

### அரிச்சந்திரன் தீக்கனவுகண்டுஇரங்குதல்.

என்னுயிர்க்காதலி! யான்கண்டகனவுகேள்! அயோத்தியாநகரில்யான் அரசாளும் அவைக்களத்தில் அரியணையிலிருந்து, அந்தணரும் அரசரும் சுற்றத்தவரும்சூழ ஏவன்மாக்கள் பணிகேட்ப, வியன் மணிசிறைந்தமுடியும் மகரந்தலைமகரக்குழையும் வயிரமழுத்தியவாகுவலயமும்முதலமைந்த பக்கலன்கள் அணிந்து மகாராஜனென் கேட்டுமகிழாநிற்கையில், ஓரந்தணன்சடைமுடியனுமக்கதம் விருப்பங்கொண்டு அடிக்கவந்துகாலாலுதைத்துக்கதிர்முடிகழற்றிப்பிடர்பிடித்துத் துரத்தி மகனோடும்உன்னோடும் நகரவாயிலுக்குப்புறமேதுரத்தி எல்லாப்பொருளும் கவர, மதியெனும் அடிமை பூண்டு, அன்பமே அரசர்க்கீண்டும் உன்னோடும் புதல்வனோடும் நகரம்புகுந்து செங்கோன்மேவிச்செங்கோல்செலுத்தினேன்" என்றுபுகலச், சந்திரமதியுள்ளநொந்து, என்னுயிர்க்காவலனே இறையும்இரங்கேல் கடுக்கமொழி; எல்லாம்எம்பெருமானருளாலன்றியேயாகும் விதியையார் வெல்லவல்லார்! கண்டகனவின்வண்ணம் கௌசிகமுனிவரேனும் நாடும் மற்றுமுள எல்லாப்பொருள்களும் கவர்ந்துகொள்ள,மனைமக்களுடன்துறந்து,கனிவனம் இருந்து. எத்துயரும் அடைந்து எப்பொருட்கும்இறைவனருளால்மீண்டும்புத்திராமித்திரகளத்திராதிகளோடுபுவிக்கிறைவராய்மாற்றாசர்பணியப் பலமுறைவந்தரசாளும் அரசாள்வை; ஐயமில்லை; இதப்

கே இக்கனவுதோன்றியது ; அன்பம் சிறிதுவரினும் பின் இன்பமும் புகழும்பெரிது பெருகும் ; "ஒன்றா வுலகத்துயர்ந்தபுகழல்லாற்பொன்றாது நிற்பதொன்றில், படுமழைமொக்குளிற்பல்காலுந்தோன்றிக்கெடுமிதோர் யாக்கை, அடுதிறயார்மாட்டும்நில்லாதுசெல்வம் சகடக்கால்போல வரும்" எனப்புகழ்-அழியாத்தன்மையது;யாக்கையும்செல்வமும்நிலையில்லாதன;ஆதலினால்வருத்தமுறினும்வாய்மைதிறம்பேல்: உண்மையுரைத்துக்கேடுற்றவரும்பொய்ம்மைபேசிப்பேறுற்றவரும் இவ்வுலகில்லலை "மனத்தொடுவாய்மைமொழியின் தவத்தோடு தானம் செய்வாரிற்றலை, பொய்யாமையன்னபுகழில்லை-யெய்யாமையெல்லாவறமுந்தரும், யாமெய்யாக்கண்டவற்றுளில்லையெனைத்தொன்றும்வாய்மையினல்லபிற" எனவாய்மையொன்றேயெல்லாவறத்தினும் எத்தவத்தினும் சிறந்தது ; இதனினுங்குமாண்புடையது ஒன்றுமில்லை ஆதலின் ; வேறுசிந்தையுறாது வாய்மை கடைப்பிடி ; என்றுவிண்ணப்பஞ்செய்துதேற்றினாள். இன்னணம் இருக்கையில் மிருகங்களைவதைத்ததுநிமித்தமாக, விசுவாமித்திரமுனிவர் சினந்து கண்கள்சிவக்க, உதடுதுடிக்கப்பல்லைக்கடகடவெனக்கடித்துவடவைக்கனல்போல்பொங்கி நாகம்போற்சீறினார், அதுகண்டுபூமி நடுங்கிற்று ; திக்கியானை சலித்தன ; ஆகாயமிருண்டது ; விசுவாமித்திரர் அவ்வாறு ஓடிவரக்கண்டு, வேந்தன்கடிதெழுந்து, இல்லாளோடு அம்முனிவர் திருவடிகளைத்தொழுதலும், முனிவர் காலினால்கிரீடத்தை உதைந்துதள்ளினார். அரிச்சந்திரன் அடங்கிக்கைகூப்பிச் சுவாமி! என் சிலமானகற்கள் இழைத்த மருட்டம்பட்டு நும்மலர்த்தாள் என்னநோவுற்றதோ? எனவியத்தோடு விண்ணப்பஞ் செய்ய, அத்தபோதனர் உன்செய்கையால் என்பாதமாத்திரமல்ல ; எல்லாஉடம்பும் எரிகின்றன ; நீ அரசவேடம் பூண்ட அரக்கன். என்தபோவனம் நாசமானது உணர்ந்



திலையா ? யான்புத்திரன்போல்வளர்த்தமரங்களெல்லாம் ஒடிந்தன ; அன்பாய்வளர்த்தமிருகமெல்லாமிறந்தன ; என்னுடைய உயிர்க்குநிகரான சித்திரமிருகமும் கொல்லப்பட்டது. குளங்களிலுள்ள தாமரைமுதலிய பூங்கொடிகளுமழிந்தன ; உன் அதிகாரச்செருக்கினால் இவ்வாறுபாழாக்கினை ; உன்மனையில் உன் அன்னமேஉண்ணும்பார்ப்பனன் என்று என்னையுங்கருதினையோ! இத்தீச்செயல்புரிந்த நின்னைக்குலத்தோடழித்துவிடுகிறேன்என்தவவலிகாண் ; உனக்குத்துணைசெய்ய வசிட்டன்வரினும் இந்திரன் எய்தினும் திரிமூர்த்திகள்நிற்கினும் அவர்களையும் ஒறுப்பேன் என்று உக்கிரத்தோடுஉரைக்க, அரிச்சந்திரன் அசைவற்று நின்றனன் ; அதுகண்டசத்தியகீர்த்திஅரசனைநோக்கி நீயெல்லாமுணர்ந்தவன் ; திடமானவிரதங்கொண்டவன் ; ஏக்கம் ஏனடைகிறாய்? "பரியினுமாகாவாம்பாலல்ல உய்த்துச் சொரியினும்போகாதம" எனத்துணிந்து ஊக்கங்கைவிடேல் ; என்று நினைவுறுத்தினஉடன் வேந்தன்மீண்டுந்தெளிந்து முனிவரைவணங்கி, எல்லாமுணர்ந்தமுனிவரே! அறியாமல்யான்செய்தபிழைமுற்றும்பொறுத்தருளுக ; எனது பிதாவிடத்தில்வைத்த தொல்லன்பைநினைந்துக் கருணைசெய்க ; பிழைசெய்தவரைப்பொறுப்பதன்றோ பெரியோர்கடமை ; புத்திரன்பிழைபொறுப்பதுபிதாவின்கடமை ; அடியேனிடத்தில்அன்புவைத்ததேவரீர் ஏதுசெய்யினுமதுவே நலம் ; என்றுஉரைத்துச்சரணம் அடைந்தனன், அப்படிச் சரணமடைந்தவேந்தனைஒருகையால்தூக்கியெழுப்பி உன் பேச்சினினிமையாலும் சாதுரியாலும் என்கோபம் ஆறியது ; உன்சேனைகளெல்லாம் அழித்ததற்குமாறு என்னவுதவிசெய்யக்கருதுகின்றனை! உன் இராச்சியத்தில் பஞ்சம் விஞ்சிப்பலன் அழிந்து தனமொழிந்ததே ? ஏது தருகிற்பாய் ? அறையென்று உறுத்திக்கூறினர்.

## ௯ - ஆவது. அத்தியாயம்.

### அரிச்சந்திரன் விசுவாமித்திரருக்கு இராச்சியம் கொடுத்துவனம்புகுதல்

அதுகேட்டு அரிச்சந்திரன் வணங்கிமுனிவர! தேவரீர்திருவுள்ளம் எதுவோ அதுசெய்கிறேன்; என்செல்வம் எல்லாம் வேண்டினும் தருவேன்; இப்பூமிமுழுமையும் வேண்டினும் வழங்குவேன்; நமதுதிருவுள்ளத்தின் உவப்பே அமையும்; என்று இவ்வாறு சொல்லக், கௌசிகமுனிவர்கோபம் மிகுந்து, என்பொருள் எல்லாம் அழித்ததோர் உதவியும்செய்ய மனமில்லாதவனாய் வீணே பூமியெல்லாந்தருகிறேன் என்றுமோசஞ்செய்யப்புகலுகின்றனை; இராச்சியத்தைக்கொடுக்கும் அரசனும் உலகில்உளனோ? இப்பொய்மொழியென்னைக்குச்சொல்லுகிறாய்! உன்கருத்துஎனக்குத்தெரியாதா? இராச்சியம் முழுமையும் ஈடுகொடுத்தால் தான் எனக்குச்சம்மதி; நீ சத்தியவிரதனாயின் சொன்னசொல்தவறுமேகொடு; உன்வாய்மைகாண்பேன்; என்று உறுத்திச்சொல்ல; அரசன்-நானும் இராச்சியமும் எல்லாம் உம்முடையவாயிருக்க நானோ கொடுக்கவேண்டும்? நமதுதிருவுள்ளப்படிக்கொள்ளுக; யான்மறுத்தொன்றும்புகலேன்; என்றுவிண்ணப்பஞ்செய்ய, விசுவாமித்திரமுனிவர் "எதுவேண்டுமானாலும்கொடுக்கிறேன் என்றாய் இப்பொழுது நீசொல் என்கிறாய் என்னசாதுரியம் பேசுகிறாய் நீகற்றகளவு நான்அறிவேன் என்று சினந்துகூற, அதுகேட்டுமனங்கலங்கிநிற்கும்வேந்தனைச்சந்திரமதிநோக்கி எம்பிரானைநாத! நின்னுரையின்படி விசுவாமித்திரமாமுனிவருக்கு இப்பூமிமுழுமையும் கொடுத்துவிடு; வாய்மைதிறம்பேல் "அடிசேர்முடியினராகி அரசர்கள்தந்தொழ இடிசேர் முரசங்கள் முற்றத்தியம்பவிருந்தவர் பொடிசேர்ந்து களாய்ப்போவர்கள்" "வாழ்ந்தார்கள் வாழ்



ந்ததுமாமழைமொக்குளின்மாயந்து மாயந்து ஆழ்ந்தார் என்றல்லால் அன்றுமுதல் இன்றுதியாவாழ்ந்தார்கள் வாழ்ந்தேநிற்பர்என்பதில்லை" "குடைநிழற்கீழ்ச்சேனைத்தலைவராய்ச்சென்றோரும்எனைவிளையுலப்பவீழ்வர்" என முன்னுண்டஅரசர் ஒருவரும் பூமியைக்கொண்டுபோகவில்லை; அவர்கள்செல்வம் அழியாமல்நிலையாயிருக்கவுமில்லை; சகடக்கால்போல்கீழ்மேலாய்மாறுமியற்கையது செல்வம் ஆதலின் அதை ஒருபொருளாய் நினையாமல் சத்தியத்தையேநினை; முனிவர்வஞ்சனையினால்மயங்கிவேறுமாற்றம் உரையற்க; சத்தியத்தினால் அறம்நிலைநிற்கிறது; எவ்வுலகும்நிலைத்திருக்கிறது; எவ்வுயிரும்சரிக்கின்றன; வாயுவீசுகிறது; நெருப்புஎரிகிறது; சூரியன்உதிக்கிறது; மழைபெய்கின்றது; கடல்கரைகடவாதிருக்கிறது; மலைகள்நிலைபெற்றிருக்கின்றன; பஞ்சபூதங்களும்காலசக்கிரமும்சோதிமண்டலமும் இயலுகின்றன; இறைவனும் அருள்புரிகிறான்; அன்னை-அத்தன்-புத்திரர்-தெய்வம்-வேள்வி-ஜபம்-தவம்-வேதம்-ஞானம்-மோக்ஷம் முதலியவும் அவ்வாய்மையே; இவ்வண்ணம் எல்லாநன்மைக்கும்வித்தாகியசத்தியத்தை விடாமல், எல்லாச்செல்வத்தோடும் இராச்சியத்தைக்கொடுத்துவிடு; எனச்சந்திரமதியும் சொல்ல, விசுவாமித்திரமுனிவருக்குப்பொன்னோடுநீர்த்தாரைவார்த்துஅத்தனக்குள்ள பூமிமுழுமையும் தத்தம்செய்தனன். முனிவர்களும் மன்னவனைமெச்சிமுடிதுளக்கினர்; அறம்ஆநந்தித்தது; வசிட்டர் வென்றார் என்னும்வாக்கு எங்கும்உண்டாயிற்று; விசுவாமித்திரபகவானும் மிகக்களித்துமன்னவனுக்குஆசிவழங்கி, வள்ளால்! "உன்னுள்ளம்போல் எங்கும்கண்டிலேன்" என்றுவியந்து, நீயுன்நகர்க்குவிரைவாகச்செல்; நாளைக்காலைவந்து உன்னிடத்தில்ஆவதொன்றுள்ளது; என்றுவிடையருளப்பெற்று, அரிச்சந்திரன்சேனையோடு முகில்போல்முரசங்கறங்கப்பல்லியங்கள்துவைக்க மனைவிமக்களோடு அ

யோத்திசேர்ந்தனன் - சூரியனும் அஸ்தமித்தான். மற்றை நாள்வைகறையில் அரிச்சந்திரனெழுந்து நித்தியகர்மானுட்டானம் முடித்துவிரைந்துவந்தவையுள் எய்தி வீறியசிங்காதனத்தில் வீற்றிருக்க, உடனேவாயில்காப்போர் விசுவாமித்திரமுனிவர் எழுந்தருளியிருக்கிறார் என்று கூறலும் உடனேஎழுந்துஎதிர்கொண்டு அழைத்துவந்து, அருக்கியமுதலியாந்து அருச்சனைசெய்து, ஆசனத்தில்வீற்றிருக்கச்செய்து, அடிகளே! தேவரீருக்குநெருநலேஇவ்வவனியைஅர்ப்பணம்செய்தேன்; இவ்வகலிடம் முற்றும்நுமது அதீனம்; மன்பதையெல்லாந் தேவரீர்க்கே அடிமை என்றுகூறியபின்னர் நகரியுள்ள அமைச்சர்முதலியவர் எல்லாரையும் அழைத்து இவ்வாளுகைமுற்றும்விசுவாமித்திரமுனிவர்க்குக்கொடுத்து விட்டேன்; நான் குடும்பத்தோடுகாடுசெல்கிறேன்; இனிஉங்களைஆள்பவர் அம்முனிவரே; அவரும் முன்அறம் வழுவாதுசெங்கோல்செலுத்தியவர்; அவர்ஆளுங்காலத்தில் பூமிஎங்கும்பயிர்கள் நிறைந்தும்எல்லாப்பயனும் விளைந்தும் எல்லாச்செல்வமும்மல்கியதாய், கள்வரின்கலக்கமும் பிணியின்பீடையும் பஞ்சத்தின்பருவரலுமின்றிப்பாங்காயிருந்தன; அவர்எனக்கும் உங்களுக்கும் இறைவர்; நீங்கள்முன்செய்ததவத்தினால்இவர்க்கடியவரானீர்கள்; ஆணைகடவாது அருள்பெற்றுவாழுமின்; என்று அறைந்து அடலிக்குத்திரும்ப, அங்குள்ளார் எல்லோரும் அரசனைப்பணிந்து அண்ணலே! இவ்விசுவாமித்திரர்கோபம் மிகுந்தவர் நிலையில்லாநினைப்புடையவர்; கடுமையான மனமுடையவர்; எவ்வண்ணம் அவர் ஆளுகையில் இருப்போம்; நாங்களும் நின்னோடுவனம்புகுதும் என்று புகல, வேந்தன் என்னுரைகடந்தவர்எனக்குப்பகைவர் அன்றோ? நீவிர்என்னிடத்தில் அன்புடையீரேல் என்வேண்டுகோளின்வண்ணம் அருந்தவர் ஆணைக்கு அமைந்து அருள்பெற்று உய்மின், என அவர்க



ளைப்பிரார்த்தித்துஅருந்தவனை ஆளுகையில்அமர்த்தி அரண்மனைவிட்டுப்புறம் போந்தனன். அவ்வண்ணம்சென்ற அரசனைமுனிவர்கையைப்பற்றிக்கொண்டு, அரசர்க்குரியஅணியும்பீதாம்பரமும் நீக்கொண்டு அகல்வது அறமோ? எனக்கூற, அரிச்சந்திரன்தன்னணியும் மனைவியின் அணியும் மகன்அணியும்கழற்றிக்கொடுத்துமெள்ளமெள்ள முனிவர் என்னஅருளிச்செய்வாரோஎன்றுபார்த்துக்கொண்டேசெல்ல, மீண்டும்முனிவர்தொடர்ந்து ஓ அரிச்சந்திர! நீ வயின் அடைக்கலம்வைத்தபொருள்தாராது வஞ்சனைசெய்து போகநினைக்கின்றனையோ? என்னை ஏமாற்றமுடியுமா? வசிட்டனையென்று வாசவனும்பணியப்பெறும் விசுவாமித்திரன்; பிரமன்முதலியோரும் வியக்கும்பெருமையுள்ளோன் என்று உணர்ந்திலைபோலும்; நான்வேள்விக்குவைத்தலித்தந்தைக்கொடாமையின் அந்தணர்பொருள்அபகரிப்பவனன்பது விளங்கியது; பசுவின்தோல்போர்த்தபுலிபோல் அறநெறிநடப்பவன் என்று வேடம்பூண்டு அறவோர்பொருள் அபகரிப்பவன்; விடம்-விழுங்கியவனையே கொல்லும், பார்ப்பனர்பொருள்பரம்பரையும்கொல்லும். கள்வரும் தாம்கொடுத்ததுபறிக்கார்; கொடுமைஎல்லாம் செய்பவரும் கொடுத்தபொருள் கொள்வதில்லை; இவ்வாறுசெய்கை கண்டதுமில்லைகேட்டதுமில்லை; நீஅரசக்கோலம் கொண்ட அசுரன்; என்பிராணனுக்குச்சமானமானபணத்தை அபகரித்தாய்; அப்பொருள்கொடு. புரியவிருந்தவேள்விகள் எல்லாம்பாவியாகியநின்னால்பாழாயின. நம்பினவர்களை நட்டாற்றில் விட்டவன் நீயே; என்று பலவாறஇகழ்ந்துபீடிக்கையில், வருந்தியும், வியர்த்தோடு வேண்டியுரைக்கும்வேந்தனைக் கண்டவர்யாவரும்கண்ணீர்பெருக்கக்கரைந்தும் மன்னன்முனிவர்மாயையால்பேய்பிடித்தாற்போல் பீடிக்கப்படுகிறான் நாம் இக்கௌசிகனை அடித்துத்துரத்தி அரசனையிருக்கச் செய்வோமென்றேலோ அரசன் இயலானே; என்செய்வோம் என்றும் கவ

லாப்பொருளும் ஈந்தவள்ளலைப்பிடிப்பவர்கள் வையகத்திலுமுண்டோ? இவன் முனிவேடம்பூண்டமடமன்; கடினசித்தமும் உலகமே எதிரில்லாச்செருக்கும்உள்ளவன்; என்று ஆற்றுகையில் அரசன்கையமர்த்த, யாவரும் "ஒல்லியடு தீற்றுற்றுவையவிந்தநாகம்போல்" வாய்பொத்தியொடுங்கினர். அரசன்நகர்விட்டுச்செல்லுமுன்பே அங்குள்ள அந்தணர் முதலியோர் அனைவரும் மன்னவனுடன் வனம்புகவிச்சயித்துச்செல்ல, அயோத்திவெற்றிடமாயிற்று; அரிச்சந்திரன் அவர்களைநன்மொழியுரைத்துத்திருப்பிவிட்டனன். பின்பு விசுவாமித்திரமுனியைப்பார்த்து, என்னிடத்திலேதாவது பொருள் உண்டோ? மனைவியும்மகனும் உடுத்தஆடையுமாயிருக்கின்றேமே? தேவரீர் எதற்காக இவ்வளவுகோபங்கொள்ளுகின்றீர்; நான் சர்வமுங் கொடுத்தமையால் கருணைகூர்ந்து கானகம்செல்லவிடைதருக; என்று அடியில்வீழ்ந்து வேண்ட, முனிவர்மிகச்சினந்து, அடா! அதம! நின்னிடம் பொருள் வைத்ததில்லையோ? சொல்; பிறர்பொருளை அபகரிப்பது பாவம்; பிராமணன் பொருளைக்கவர்வது அதினும் மிக்கபாவம்; முனிகளுடைய பொருள்கொள்வது அதினும்மிக்கது; முனிகளிற்சிறந்தவர்பொருள் அபகரிப்பது அதனின்மிக்கது, உன்தகப்பனுக்குஉபகாரியாகிய என் பொருளைக்கொள்வது அதனின்மிக்கது. வைத்த அடைக்கலம்கொள்வது மிகக்கொடியபாவம்; தான்கொடுத்ததைத் தானேஅபகரிப்பது அதினும்மிக்ககொடியமகாபாவம்; வசிட்டனிடத்தில் எல்லாக்கலைகளும் கற்றுணர்ந்தது இதுதானோ? யான்நின்னிடத்தில் அடைக்கலம்வைத்ததில்லை என்று சொல்லிவிடு; இப்பொழுதே இந்தஇராச்சியத்தையும் எல்லாவற்றையும் உனக்கேகொடுத்துவிட்டுப் போகிறேன்; என்று கோபித்துச்சொல்லுகையில் அரிச்சந்திரன். "பஞ்சம் உண்டான காலத்தில்சனங்களுக்கு அன்னம் கொடுத்தும் வரிப்பணம் வாங்காமலும்விட்டமையால் விசுவாமித்திருடைய தனம் செலவாய்விட்டதே என்



செய்வேம்" என்றுதனக்குள்கலங்கிப்பலவாறு சிந்தித்து, ஒருவாறுமனந்தேறி, முனிவரைவணங்கி, முனிக்கரசே! நும்வெறுக்கைகொடுப்பதற்கு ஓர்திங்கள் தவணைகொடுத்தருளுதி; சத்தியந்தவறாமல்தேடித்தருகிறேன். என்று விண்ணப்பஞ்செய்தனன்.

---

## ௧௦-ஆவது அத்தியாயம்.

### விசுவாமித்திரமுனிவர்பணம்வாங்கும்படி நக்ஷத்திரகனைக்காவல் அனுப்புதல்.

அவ்வண்ணமேசெய் என்று அநுமதியளித்துத்திரும்பினார். அரசனும் அவ்வாறேசெய்ய அமைந்து அடிவைத்துச்செல்லுகையில் அருந்தவர் மீண்டும் வந்து அரிச்சந்திர! இவ்விராச்சியம் முழுவதும் என்னது; என்னுடைய பூமியில் எங்குசம்பாதித்தாலும் என்னுடையதே; இவ்விராச்சியத்தில் உள்ளசனங்களையாசித்தாலும்அரசன் என்னும் மதிப்பினால் வேண்டிய எல்லாம் உதவுவார்கள்; அவ்வாறுபெறின் அவையும் என்னுடையவே; ஐயமில்லை என்றுஅறிவுறுத்த, நும்மாணைபின்வண்ணம்செய்யாநிற்பேன்; எனவலித்து மனைவியோடும்மகனோடும் செல்லப்புறப்பட, பின்னும்முனிவர் அணுகிவந்து, நீஎவ்வளவுதேடினும் மனைவிமக்களுக்கும் உனக்கும் உண்பதற்கே அமையாது; ஆதலின்நீ அறைந்தவாறுதருவாயென நினைக்கிலேன்; இவ்விடம் விட்டுச்சென்றால் இவர்கண்ணுக்குப்புலப்படாமலிருக்கலாமென்றும், தவஞ்செய்து உடல்வற்றியவன்யாது செய்கிற்பான்என்றும், கருதிச்செல்லவிரைகின்றனை; உன்விரகுயானுமறிவேன்; நின்னைத்தனிப்போகவிடுவதுமுண்டோ? விரையேல்; நில்; நில்; எனத்தடுத்துத், தன்சீடனாகிய நக்ஷத்திரகன்என்போனைவிளித்து, அருகுநிறுத்தி அரிச்சந்திர! நீதேடும்பொருள்யாவும் இம்மாணாக்கன்

வசம் கொடுத்துவிடு; இவனை உன்னுடன் அனுப்புகிறேன்; இவன் ஓதி ஓதி உள்களைந்து உடலம் மெலிந்தோன்; வருத்தங்கண்டறியாச்சிறுவன்; வழிநடந்து இளைப்புறின் நின்தோளில் எடுத்துச்செல்; முள்ளிருப்பினும் கல்லிருப்பினும் அவ்விடங்களில் அடிவருந்தாமல் தோளில் எடுத்துக்கொள்; முப்பொழுதும் உண்டி உதவி உபசரி; தூக்கம் கொண்டானாயின் அங்கேநின் செலவு துறந்திரு; அவன் துயிலொழிந்து எழுந்தபின் அவன் அனுமதிகேட்டு அப்புறம் செல்; நின்மகனாயினும் மனைவியாயினும் இவனை வருந்தாமல் போற்று; என்னிடத்திற்போல் அவனிடத்தும் பணிவாயிரு; இளையோன் எனஇகழேல்; என்றுஉரைத்து, அம்மாணாக்கனை அருகில் அழைத்து, அரசன் அறிவுறுவண்ணம் அவன் செவியில் கொடியமாச்சரியம் கொண்ட கோசிகமுனி வேந்தன் பொய்சொல்லும்படி எவ்வாற்றினாலும் துன்பமுறுத்து; வெவ்வுரையே வழங்கு; இல்லாளையும் புதல்வனையும் அருச்சினங்கொண்டு அருந்துயருறுவி; மனைவிமக்களை அகல்வி; மானங்கெட உரை; ஈனத்தொழில் புனைஇயற்று; இன்னும் பொறுக்கொணாப்புன்கண் புகுத்திப் பொய்மொழிபுகலச்செய்; எனவற்புறுத்தி ஓதிவிடுத்துப் பின்னும் வேந்தனை நோக்கி, நீகூறியவண்ணம் ஒரோமாதத்துக்குள் தாராவிடின், ஒருகணமும் பொறுக்கமாட்டேன் விரைவில் என்வெறுக்கைகொடுத்துவிடு; அல்லது கொடேன் என்றுசொல்; வேறு நீ என் செய்கிறாய்? உனக்குத் தனக்கொடுப்பார் யார்? எங்குசெல்வை? புத்திரனையும் பத்தினியையும் வருத்தப்படுத்தி என்செய்யத் துணிந்தனை? சுகத்துக்கேதுக்க உன்தேகத்தை ஏன் வருத்திக்கொள்கிறாய்? பரிசனமின்றித் தனியே கால்நடையாய்ச் செயல் ஆற்றுவாய்? இஃதொன்றும் நினக்கேலாது. ஆதலின் இப்பொழுது ஒன்றுசெய். யான் உன்னிடத்தில் தனம் வைத்ததில்லை யென்றுவது இராச்சியம் நீ எனக்குக் கொடுக்கவில்லை என்றுவது சொல்; நான் எல்லாம் கொடுத்துவிட்டுப் போகிறேன்; என்று பலவண்ணமாய்



க்கலங்கிக்கூறவும் சிறிதும் தவறாமை, விசுவாமித்திரமுனிவர் இவனைச்சத்தியம் திறம்புவித்தலொல்லாதென்று சிந்தித்துக்கொண்டே நகர்க்குள் சென்றார். வேந்தன் மனைவி மக்களோடும் நக்ஷத்திரகனோடும் நகர்ப்புறஞ்சென்றான். அவ்வழிக்கண் கண்ணீர்பெருகப்பின்தொடர்ந்துவரும் நகரப்பிரஜைகளுக்கு ஆறுதல்சொல்லிப், பின்பு அம்முனிவர் எல்லோரும் அறிந்து சிறப்புற்றவர். நீங்களும் உங்கள் முன்னோரும் செய்ததவப்பயனால் அவர் அடிக்கீழ்வாழ்ச்சி சேர்ந்தது. இவ்வரும் பேற்றை இழவன்மின்; யானுஞ்சிறிது திவசங்களுக்குள் முனிவர்க்குப்பொருள்தேடிக்கொடுத்துவிட்டு நகர்க்கு மீண்டும் வந்து நும்மோடும் அவர் திருவடிக்கு ஆராதனைசெய்துகொண்டிருப்பேன்; யான்வருமளவும் நீவிரும் அந்தணர்பிரானுக்கு வேண்டும் பணிவிடை செய்து உய்யுமின்; மீண்டு நகரஞ்செல்லுமின்; என்று அன்போடுதிருப்பி அனுப்பிவிட்டுச்சென்றனன், அவரவர் தத்தம் இல்லம் புகுந்தனர். அருந்தவர் நிலவுலகம் அரியணை அமர்ந்து அமைச்சர்முதலானோரை அழைத்து, அரிச்சந்திரமன்னவன் எவரெவர்க்கு எப்பணி இட்டனனோ அவரவர் அவ்வப்பணிகளை என்பணிமேற்கொண்டு இயற்றுமின்; யான்தவஞ்செய்யவனஞ்செல்வேன். நீவிர் நினைத்தபொழுது வருவேன் என்றியம்பி அரிச்சந்திரன் அறியாது மறைந்து அவன் பின்னரேகினர்.

---

## கக - ஆவது அத்தியாயம்.

### அரசனுக்குவழியெல்லாம் துன்பம்விளைத்தல்.

அரசன் செல்லுநெறியெல்லாம் புதருள்ளதாயும் முட்செடிமிடைந்ததாயும் நெரிஞ்சியும் பருக்கையும் நிரம்பியதாயும் நெருக்கமாய்க்குறுகியதாயும் இடுக்கண்விளைக்கவும், சூரியன் அக்கினிமழைபெய்வதுபோல் காயவும், காற்

று அசையாமலிருக்கவும், குளங்கள்முதலியவை நீர்வற்றவும், புல்பூண்டுகள் எல்லாம் உலர்ந்துபோகவும் மரங்கள் இலை உதிர்ந்து நிழலில்லாமலிருக்கவும் வறட்சியும் பசியும் மிகைப்படவும் முனிவர் தன்தவவலிமையாற்செய்து அருகில் அணுகி அரசன்சோர்வுபார்த்திருந்தனர். வேந்தனும் மெள்ளமெள்ளப் புத்திரனோடும்மனைவியோடும் நக்ஷத்திரகனோடும் செல்லுகையில் புல்வன்காலடி வைக்கலாற்று பதைக்கச் சந்திரமதி தன்மருங்கில் எடுத்துக்கொண்டுசெல்லாநிற்க, அவள்காலில் முள்தைத்துக் கல்லும் ஊன்றிச் செந்நீர்பெருகவும் இருமருங்கும் முட்செடிகளிலும் கொம்புகளிலும் அவள் முன்தானை சிக்கிச்செல்லாதொழியவும் அதை விடுவித்துக்கொள்ளவுமில்லாளாய்க் கூந்தல்சோரவேர்வையரும்பவெய்துயிர்த்தனளாய்க் கண்ணீர்பெருகக்கலுழ்ந்து துயருழக்க, மன்னவன் கண்டு என்னிமித்தம் உங்கட்கும் இத்துயர்நேர்ந்ததே என்று தன்னைவெறுத்துக்கொண்டு மனைவிமக்களின்துயர்சிறிது ஆற்றிச் சிறிதுநெறி செல்ல இளைஞன் தாகத்தினால் நாவறண்டு தண்ணீர்தண்ணீர் என்று அழ, அரசனும் மனைவியும்அவ்வாறே வெப்பமாற்றுதவராய் இறைவனே! ஆபத்தில் உதவும் அறமூர்த்தியே! என்று பலவாகச்சர்வேச்வரனைப் பன்னிக்கொண்டிருந்து, பின் அரசன் மனைவியின்தானைத்தலைப்பைவிடுவித்துப்புத்திரனைத்தோளில் ஏற்றிக்கொண்டும் அவள் கையைப்பிடித்துக்கொண்டும் வெங்கதிர்ச்சுடரால் வெப்பமுண்டு கொதிக்கும்கற்களில் கால்வைக்கக்கூசி நடுங்கி அடிவைத்துத் திகைத்துத்திகைத்து ஆறுவிடும்பையுடன்நடக்க, இதுதான்நல்லசமயமென்றுநினைத்து நக்ஷத்திரகன் உரக்கக்கூவிக் கண்ணீர்பெருகக் குருவே! கௌசிகமுனிவ! என்று புலம்பிவிழுந்தனன். உடனே மன்னவன் கடுகி நக்ஷத்திரகனை எடுத்து அந்தண! யான் என்செய்யவேண்டும் நும்கருத்தென்னெனவினவ; அதற்கு நக்ஷத்திரகன்



பசிதாகமடைகின்றது; தாகம்நாவையுலர்த்துகின்றது; பாதம்கொப்புளித்தன; கல்லும்முள்ளுந்தைத்துக் குருதிகுழம்பின; உறுப்பெல்லாமொடுங்கின; நிற்கநிழல் எங்கும் காணப்படவில்லையே; நீஎவ்வளவுகொடுமையுடையோன் இரக்கஞ்சிறிதுமில்லையே; உன்னால் இவ்வளவுதுயர்உறும்படிநேர்ந்ததே; என்று வெறுத்துச்சொல்ல, உடனே அந்த நக்ஷத்திரகனைமுதுகிலும்மகனைத்தோளிலும்ஏற்றிக்கொண்டு சமீபத்திலேயே தண்ணீர் இருக்கின்றது கொணர்ந்து தருவேன் என்று சொல்லிவிட்டுச், சந்திரமதியைநோக்கி இம்முனி சிறுக்கன்களைத்துப்போகிறான் அவன்களைதவிர்க்க எங்காயினுஞ்சென்று நீர்தருவதையேயல்லவுய்வன்; நீ புனல்தேடிக்கொணர்கவென்று உரைத்தனன்; அதுகேட்டு வேந்தன் அவர்களைவிட்டுத்தண்ணீர்தேடிக்கொண்டுசெல்லலுற்றான். மூவரும்பின்தொடர்ந்தனர். அச்சமயங்கண்ட விசுவாமித்திரர் தந்தகோடகன் என்னும் பெயரினனாகிய அசுரத்தலைவனை அழைத்து நீ என்னிமித்தமாய் முனிவேடம் பூண்டு புனல்தேடிவரும் அரிச்சந்திரனை வேதாளமிருக்கும் ஆலமரத்துக்கு அருகில்செல்லும்படிசெய்; இந்தநீரில்லாவனத்தில் என்திரிகின்றனை? நல்லநீர்வளமுள்ள தாமரைத்தடாகமும் தண்ணிழல்தரும்சோலையுமுள்ளது ஆகிய ஓரிடம்சமீபத்தில் இருக்கின்றது என்று ஆசைமூட்டியனுப்பு. அங்குவேதாளம் அவனைக்கொல்லும் என்று அத்தைத்தியனுக்கு அறைந்து சென்றனர். அரிச்சந்திரன்வரும் நெறியில் அத்தானவனும் மாயையினால் அந்தணனுருவங்கொண்டு வற்கலையுடுத்துச் சடைமுடி தரித்துத் தண்டமும் கைக்கொண்டுமரத்தின்அடியில்மானுரி ஆதனத்தில்உட்கார்ந்து தவஞ்செய்துகொண்டிருக்க மன்னவனுங்கண்டுமகிழ்வோடுபணிந்து முனிவர்தலைவ! கருணாநிதியாகியதேவதேவன் அருளால் இவ்வாபத்தில் உன்னைக்காட்டினான். நான்அயோத்தியரசன்அரிச்சந்திரன்; தாகத்தினால்நாவறண்டிடுக்கும் விசுவாமித்திரமுனிவர்மாணாக்க

ன்நக்ஷத்திரகனுக்காகத்தண்ணீர்தேடிச்செல்லுகின்றேன் எங்கும்தேடித்தேடிப்பார்த்தும் புனல் சிறிதும்கண்டிலேன், நீரெங்குள்ளது? விளம்புகவென, உரைக்க; அவன்செவியுறுதலன்போல்விடை ஒன்றும்தராதாக, மீண்டும் உரக்கக்கூவி அரிச்சந்திரனுரைக்க, அஃதும்கேளான்போலிருந்து எனக்குச்செவியுணர்ச்சியில்லை நான்ஞானதிருஷ்டியினால் “அயோத்தியரசன் அரிச்சந்திரன் விசுவாமித்திரமுனிவர்க்கு நாடுகொடுத்து விட்டுமுனிவர்க்குமுன்கொடுத்தஅடைக்கலப் பொருள்தேடிக்கொடுக்கத்தேயங்கள்செல்லுகைக்கு இந்நெறியில் மனைவியோடும் மகவோடும் அவர்சிஷியன் நக்ஷத்திரகனோடும் நடக்கையில் கதிரவன்வெப்பம் பொறுது அயர்ந்துவீழ்ந்தஅந்நக்ஷத்திரகனுக்குத்தண்ணீர் வேண்டித்துருவுகின்றனை” என்று அறிந்தேன்; பறவைகள் என்காதில் இருந்து இனமை அடைத்திருத்தலால் காதுகேட்பதில்லை; என்றும் சொல்லிவிட்டனன். மீண்டும் வேந்தன் அந்தரபத உருவனைநோக்கிச் சகதீச்வரன் சிரீமானுமேயமான இவ்வனத்தில்கனையாய்க்கற்பித்தநாம் மருங்கில் இன்றிரவுவதிந்து நாளைச்செல்லுவேன்; முனிவர்சிஷியனுக்குச்சிறிது கமண்டலத்தின் நீர்தருதிரெனவேண்ட, அதுசெய்கையாலுணர்ந்தவன் போல் அம்முனிவேடதாரன் வேந்தனைநோக்கிநீ இங்கு உறைவென்னெண்ணிருப்; என்கமண்டலநீர் தாகந்தருவதன்று; எல்லாந்துறந்த என்மாட்டுமனைவிமக்களோடு உறையின்தபோபங்கம் நேரும் இதற்கு அருகில் ஓர்பெரியபழுமரம் உளது; அஃதுபுனல்வளமும் நிழல்வளமும் உண்டு உன்றன்மனைக்காக இதுபுகன்றேன்செல்; எனவிடைகொடுத்துமறைந்தனன். இதுகண்டுவியந்து “எல்லாம்தேவன் அருள்” என்று உவந்துமனைவிமுதலாம் மூவரையும் அழைத்துக்கொண்டு அத்திசைநோக்கிச்செல்லலுறுகையில்சூரியன்அஸ்தமித்து இருள்மூடிக்கொள்ளக், கொடியவிலங்குகள் மலிந்து அச்சம்விளைக்கமன்னவன் சிறிதுமஞ்சா



மகனைத்தோளிலும் முனிசீடனை முதுகிலும் எடுத்துக்கொண்டு மனைவியைக்கையில் பிடித்துமற்றோர்காதத்தில் வாளற்றிச்சிறுநெறியில்அரிதிற்சென்று,அல்லி-நெய்தல்-கழுநீர்-தாமரைமுதலிய மலர்ந்து மணங்கமழும்பெரியதோர்பொய்கைகண்டு அதில்மூழ்கிமுன்னம்முனிகுமாரனுக்குநீர்அளித்துப்,பின்தன்சிறுவனுக்குநீரூட்டி மனைவியையும் புனல்பருகுவித்து மன்னவனும்மாலைக்கடன்கழித்துத் தண்ணீர்பருகி,வடவிருக்கத்தின்அடியிற்போய், நக்ஷத்திரகனுக்குமெல்லியபுல்லால்படுக்கைபரப்பிக்கால்வருடிஉறங்குவித்து அந்நக்ஷத்திரகனுக்காகமாட்டிப்புத்திரனைக்கிடத்திப்,பசியினாலவன்சந்திரமதியையும்தலைப்புவிரித்துப்படுக்கவைத்து,தான்வாள்உருவிப்பிடித்தவண்ணமவிழித்துக்கொண்டிருந்தனன். அந்தஅவாயில்மிகவும்பயங்கரமாய்ஓதரமனாவும்உருவமும்தியமிழுக்கீனசுரும்பிவந்கேசமும் பெரியமுழைஞ்சுபோன்றவாயும் உடையதாய் ஓர்வேதாளம் சினம்பொங்கி இடிஎனச்சுழுங்கும் ஆர்ப்பொடு விண்ணதிரமண்ணதிரத்தன்கனைமொழியும்துகொண்டுவெருட்டிதாக்ககாரகர்ச்சனைசெய்துஉரப்பி,விமூக்கிவிடுகிறேம்; அறைந்துவிழுக்கேறும்; பிசைந்துவிடுவோம்; யாரென்று; வீரவாதங்கள்கூறுகீயாவன்? இங்குனிரவில் எம்முறைவிடம் போந்ததெவன்? அறிவிலியே! எம்மிடம் விட்டோடிப்போ; நமாவேதாளம் உறையிடம் என்று உணர்ந்திலையோ? என்று கூறிவைசையுங்கொள்ளிகண்ணையும் கடுகளையும் எறிந்து மோதின; அரசனும்அச்சமுறப்போர்செய்யும் அடல்மிக்க அவைகளை அடர்த்துக் கூரியவாளெடுத்து, அவற்றின்கால்களையும் கைகளையும் தலைகளையும் மற்றுமுள்ள உறுப்புகளையும் துண்டு துண்டாகவெட்டி எறிந்து, தான் ஒரு வீரனே கணக்கில்லாக் கணங்களை அழித்து திறக அவ்வேதாளஅரக கண்டு,கூலம் கையில் தாங்கி நெருப்பெழவிழித்து,எயிறுதின்று, தெழித்து எனது அலகைகூட்டங்கள் எல்லாவற்றையும் கொலைத்தனையால் உன்னைக்குடம்பதோடுவிழுங்காமல் விடுவேன்

லை; என்று செவிசெவிபட முழங்கும் பேரொலிக்கு வேந்தன் சிறிதும் அஞ்சாமல் எதிர்த்து நின்று, வேதாளமே! முனிவர்சிடனும் என்மகனும் மனைவியும் அசந்து துயிலுகின்றனர். அவர்கள் துயிலுக்கு இடைஞ்சல் இயற்றாமே சேய்மையில் செல்; என்று புகல, அப்பூதம் வெருண்டு இதழை அதுக்கிப்பல்லைக் கடித்துத், திரேதாக்கினிபோல் எரியும் முச்சிகையுள்ள சூலத்தைச் சுழற்றி அவன் மார்பு இலக்காய் எறிய, அதைத் தன்வாளால் வெட்டி எறிந்து, என் வாள்வலி நான் யாரென நினைத்தாய் நான். அயோத்தியாதிபதி; அரிச்சந்திரன்; விசுவாமித்திர முனிவருக்கு இராச்சிய முழுமையும் தத்தம் செய்து அவர் வேள்விக்கு வைத்த வெறுக்கை தேட வனம் புகுந்தேன்; எனக்கு உயிர்விடுவதில் ஒன்றும் அச்சமில்லை நீ போருக்கிரு; இன்றிரவு இங்கு இருக்கவிடுத்தவாறே வேறுவனஞ்செல்லுதும்; என்று சொல்லவும் மீண்டும் சினந்து பெரியதோர் மரம் பெயர்த்து எடுத்து வீச, அரசன் கரவாளங்கொண்டு அதனையும் பிளந்து பாகமாய்ப் பறக்கக்கண்டு கடுங்கோபம் கொண்டு குன்றொன்றைத் தூக்கி எறிந்து, இதன்கீழ் நெரித்தோடி நாசமுறுவிக்குங் காண் என்று உரப்ப, அஞ்சாமல் அதைத்தன் தோளால் தட்டப், பொடிபட்டு நீறாய் நிலம் பரந்தது; வேதாளம் உடனே முன்னிலும் அதிக எதிர்பாய்ந்து வந்து நெருங்க, முதலில் வலக்கைத்தலையை அறுத்துத் தள்ளினன். இடக்கையால் மற்றோர் பாறையைப் பேர்த்து எடுக்க அச்சிலையோடு கையையும் துண்டித்து வீழ்த்தினன். பின் தலையால் எற்றப்புக, அதன் சிரத்தையும் சேதித்து ஒழித்தனன். அதுகண்டு தேவர்களும் மகிழ்ந்தனர். இன்னணம் கணங்கள் எல்லாம் மாண்ட செய்தியைக் கௌசிக முனிவர் உணர்ந்து தன் தவத்தின் வலியால் முகில்களை உண்டாக்கிவிடுக்க அவை ஆகாயமெங்கும் பரவி இடமின்றி மூடித் திசையெங்கும் இருண்டு மின்னி முழங்கி அம்புவெய்வது போல் விசையாய் ஆலங்கட்டிகளை அடைமழையாய்ப் பொழிய அதனால் எங்கும் ஊழிகாலத்தில் நாற்புறமும் கடல் கோத்துக்கொண்டது போல்



நீரேயன்றி வேறொன்றும் காணப்படாமல் வெள்ளக்காடாக, மனைவியும் மகனும் முனிவர் மாணாக்கனும் துயில்கெட்டு அலறி எழுந்து மழையில் நனைந்து விறைத்து சாலத் துயருழந்து அரசனைத் தழுவிக்கொள்ள, அவ்வேந்தன் முனிவர் சிடனையும் மகனையும் மனைவியையும் தேற்றி அம்மரத்தின் அடியில் இருந்து முனிசிடனை வலத்தொடையிலும் தன் மதலையை இடத்தொடையிலுமாக, மடியில் உட்காரவைத்துக் காதலியையும் அணுக இருத்திப் பெருமழை பொழிகையில் பரஞ்சோதியைத் தியானித்துப், பக்தவச்சல! நீ எந்நிலையில் வைத்தாலும் அதுவே எனக்குச் சுகம்; அந்தணச் சிறுவன் சிறிதும் வருத்தமுறாமல் காக்கவேண்டும் பகவனே! என்று பலவண்ணமாகப் போற்றினனாயிருந்தனன்; ஒரியாமம் கழிய மழையொழிந்தது. அதற்குள் அந்த மகாவிருக்ஷம் முறிந்து விழுமோசை மிகவும் அச்சுறுத்த நடுங்கித், தனக்குப் பிரமகத்தியை நேராமல் பூசுரகுமாரனைக் காக்க உலகநாதனை வழுத்தினன். அரி றே இறைவனருளால் அவ்விடர் தொலைய, நக்ஷத்திரகன் கண்டு எனதுவும் இவன் சத்தியத்துக்கு அஞ்சம்; என்று தனக்குள்ளே நிச்சயித்துக்கொண்டு, வேறுவகையில் இவனை வஞ்சனை செய்யவேண்டுமென்று கருதி, மன்னவனைச் சினந்து, அரிச்சந்திர! காலைமுதல் இந்நேரம்வரையில் உணவின்றி வருந்தினேன்; ஆகாரமில்லாமல் அரைக்கணமும் தரித்திரேன், பிராணன் துடிக்கிறது அன்னங்கொடாவிடின் இறப்பேன் உனக்குப் பிரமகத்தியையும் சேரும்; கால்தளர்ந்து கைசோர்ந்து இடுப்புவிழுந்து முதுகு உலர்ந்து காதடைத்துப் பல்சிலிர்த்துக் கண்ணிருண்டு முடிசாய்ந்து அறிவுமயங்கிப் போகின்றது; உடல் நடுங்கி வேர்க்கின்றது; ஒரு பிராமணனுக்கு அன்னந்தரவில்லாதாய் உலகங்காக்கும் வள்ளல் என்றுபேர் பூண்டாய்; உன் பிறப்பே பயனற்ற பிறப்பு. முனிவர்கடன் தீர்ப்பவன் நீதானோ! முனிவர் உனக்கு எதிரில் மூன்று வேளையும் பசியாமல் உண்டி உதவு என்று அனுமதித்ததில்லையோ? அதற்கு நீ சம்மதித்ததில்லையா! அவர்க்கு

எதிரில் ஆணைப்படிசெய்வல் எனஅறைந்து இங்கு என்னை
அனாதரமேசெய்கின்றனை ; நீபுகல்வதெல்லாம் பொய்யே
எனஇகழ்ந்து உரைக்க, வள்ளல்வணங்கி இக்கானில்
எவ்வாறு அன்னம்தர இயலும் ? இதுவோமகாரணிய
ம் ; இடரோ அளவின்றிப்பெருகுகின்றது ; அந்தணர்மை
ந்தனே ! கண்டிலேயோ? மக்குள்கழிந்துபுலரி அணுகிற்று;
உதயமானவுடன் உமக்கு நல்லஉண்டி உதவுகிறேன் பொ
றுத்தருள் ; என்று அச்சிறுவன் பாதபங்கயம்பற்றிப்போ
ற்றி, அவண் துறந்து, ஓர்சிறுநெறி அறிந்துபற்றிச்செல்ல,
நிலமெங்கும் நஞ்சுள்ளஅரவும் அரணையும் உடும்பும்அட்
டையும் தேளும் நண்டுந்தெருக்கால்களும் நெளியக்கண்
டு, சித்தம்சலியாதவனாய், நெறிபற்றிஏக, அந்தணர் சிறு
க்கன் குருவே ! முனிவனே ! என்று ஆற்றி அரசனை அலை
குலையச்செய்ய, வேந்தன் அடியனேன்செய்த அபராதங்
களைப் பொறுக்கவேண்டும் அவன்பாதம்பணிந்து தோளில்வைத்துச்
செல்ல, அருக்கனும் அருணன்கோல்கொண்ட ஏழ்பரிபூண்
ட ஒற்றையாழித்தேரோடு குணதிசையில் உதயபருப்ப
தக்குவட்டின்மிசை ஒளிவீசிஉதித்தனன். உடனே அரிச்சந்
திரன்காலைக்கடன்கழித்துப், பத்தினியையும்புத்திரனையும்
அந்தணனையும் நீர்பருகுவித்துச் சிறிதுஆற்றி, நக்ஷத்திர
னைமுற்கொண்டு தேவாதிதேவன்அடிபோற்றித் தியானித்த
னாய் நடந்தனன். விசுவாமித்திரமுனிவர்கண்டு சகலசி
த்தம்சலித்து என்னசெயலாயினர். யுகாந்தகாலத்தில் உல
கைவளைக்கொண்டுவிழுங்கும்ஊழித்தீப்போல்வெயிற்கா
ய்ந்தும் அரவுமுதலாம் விஷசந்துக்களும் கொடியவிலங்
குகளும் எங்கும் அச்சமுறுவித்தும் விடாமழைபெய்தும்
எதற்கும் அவன்சலிக்கவில்லை ; அவைகளனைத்தையும் ம
காவேதானத்தையும் அலக்ஷியமாய்க்கொள்ளுகிறான் ; நக்ஷத்
திரகன்செய்யுமிடும்பைக்கும் அவனைப்போற்றிப்பணிந்து
பரிகாரம்செய்தொழிகிறான் ; அவன்மனைவியோ கணவ
னிலும் எண்மடங்கு மனத்திட்பமும் அன்பும் உள்ளவளா
ய் இனியமொழிந்து நற்செய்கையேபுரிகின்றனள் ;



என்கட்டளையும் மீறிநடத்தாமல் தோளிலேயேசுமந்துசெ
ல்லுகிறான் ; எவராலும்செய்தாற்றலாகாச்செயல்களை எ
ளிதில் ஆற்றுகின்றான் ; இவனுக்கு நிகர் எவ்வுலகினும்இ
ல்லையே ; இமையமலைபோல் எதற்கும்சலித்திலனே இவ
ன்மனம் துயராற்றலில் வச்சிரத்தினும்திண்ணியதாயும்
அன்புடன்வழிபடுதலில் மலரினும்மென்மையதாயும் இரு
க்கின்றது. பிறவிச்செல்வமும் சுகமும்மேவுகின்றவன் இத்
துன்பநுகர்வதில் இதயம்திரியவில்லையே ; யான்என்செய்
யினும் இவனைவெல்லவரிது ; வசிட்டனதேவெற்றி ; என்றும
ன்கலங்கிநெட்டுயிர்ப்புவிட்டு, நானேன் இந்திரசபைக்
குப்போனேன்? அங்கு என்வாய்பொத்தியிராமல் வீணேவஞ்
சினம்பகர்ந்தேன்? இவ்வசிட்டனைநான் எப்பொழுதுதான்
வென்றேன்? இப்பொழுது மாத்திரம் எப்படி வெல்வேன்?
முயற்சிஎவ்வளவுசெய்யினும் விதியைவெல்லலாகுமோ? அ
வன்முற்பவத்தில் நற்றவஞ்செய்தவன் ஆதலினால் அறநெ
றிதவறான். என்தவமெல்லாம்அழியும் காலம் நேர்ந்துவிட்
டது ; வசிட்டனேபுகழ்பெற்றான். நானோவாய்மதம்பேசிக்
கெட்டேன் ; அநந்தன் ஆகியஆதிபகவன் அரிச்சந்திரனுக்குத்
துணைநிற்கிறான். என்னஇடர் இயற்றினும்பிரகலாதனுக்குஇ
ரணியகசிபு இழைத்ததுயரின்வண்ணம் தீயினிற்பெய்த
பஞ்சுப்பொதிபோலாவதே "இன்னாசெய்தாரையொறுத்
தல் அவர்நாணநன்னயஞ்செய்து விடல்" ஆதலால் நாமி
ழைத்ததிங்கெல்லாம் நன்று என்று கொண்டுமகிழ்ந்து
வென்றுவிடுகிறான். இதினும்பஞ்சம் எனக்குவேறுவே
ண்டுமோ ? என்றுநெஞ்சம்புண்ணாகநெடுந்தூரம்நினைந்து
நெட்டுயிர்ப்பு எறிந்து சிறிதுதேறி இனியும்நாம்விடலா
காது ஏதாவது வஞ்சனையால்வெல்வோமென்று அணிந்
துமறைந்து பின்னரே நீங்காமல்தொடர்ந்து வந்தனர்.
மன்னவன்மெல்லமெல்லச்சென்று புஷ்கரவநியும் ஒரு
கண்டு அவண் விரைந்து சென்றணுகி ஆற்றங்கரையில் அ
னுட்டானம்செய்து வீற்றிருக்கும் அந்தணனொருவனை
அடிபணிந்து, புருஷோத்தமனே ! இவ்வந்தணர்சிறுவன்

பசிக்களையால் அருந்துயர்ப்படுகின்றான் ; வழியில்அன்னம் கொடுக்கஇயலவில்லை. என்றுஇரக்க, அவ்வனதேவன் அக்கணமேசென்று அந்நக்ஷத்திரகனுக்கு அமுதினுமினிய அன்னமளிப்ப அந்நக்ஷத்திரகனுண்டபின் அப்பார்ப்பனப் பெரியோன் விடையருளப்பெற்றுப், புதல்வனுக்கும் புனலூட்டி, மனைவியையும்நக்ஷத்திரகனையும் நெறிக்கொண்டு செல்கையில்நக்ஷத்திரகனைநோக்கிஅப்பனே? ஆரஉண்டனையோ? அன்றிக்குறைஏதேனும் உளதோ? உண்மையைக்களக்கமின்றி உரையும் எனவிளம்ப, அவன்கோபித்து எவ்வாறு உண்டாலென்ன?நான் அவ்வந்தணனை இரந்துஉண்டேன் என்றாலென்ன? சாலஅன்னதானம் வழங்கினோய்போல் நாணின்றி உசாவுகின்றனை; நின்றுணைமேன்மையும் மனவன்மையும் செயற்கொடுமையும்யார் அறியார்? என்றுஇழித்துரைபகர, அரசன்பணிவுடன்எவ்வண்ணமாயினும் பசிதீர்ந்தனைக்குமிகவும்சந்தோஷம் என்முயற்சியால்அன்னம்வழங்கினேனென்றுபுகழ்பெறக் கருதினேனல்லேன்;பிறர்முயற்சியால்வருவதினும் தன்முயற்சியால்வருவது உத்தமமாகலின் நீவிர் உத்தமமானஅன்னமுண்டது மிகுதியும் உவப்பே என்று பணிந்துபகர்ந்தினமாற்றியபின்நால்வரும் ஆறு செல்கையில் ஊர்களையும்காடுகளையும் சோலைகளையும் பட்டிகளையும்கண்டு கடந்து கானகநடுவணேகாநின்றனர்.

---

## ௧௨ - ஆவது. அத்தியாயம்.

### முனிவர்கம்பித்த காட்டுத்தீயைச் சந்திரமதி கற்பினால் கடத்தல்.

விசுவாமித்திரமுனிவர் இதுதான்சமயமென்று கருவுகொண்டு அக்கினிதேவனைவிளித்து அவ்வனத்தின் நாற்புறத்திலும்சூழ்ந்துகொள்ளும்படிஏவி, வாயுவையும் உனக்குத்துணையனுப்புகிறேன் அரிச்சந்திரனைமனைவிமக்களோ



டுகொளுத்தித் துன்பம்விளை ; என்று வற்புறுத்திக்கூறி வாயுவையும் அவ்வண்ணமே ஆணையாகவிடுக்க அவர்தவத்துக்கு அஞ்சி, அக்கினியும்வழியின்றிச்சூழ்ந்து மிகக்கடுமையாய்பெருங்காற்றுவீசச் சுவாலைஎழும்பி மரங்களையும் வெதிர்களையும் எரித்து அங்குள்ள உயிர்களும் கரிந்துபோகளித்து,யோசனைதூரம் வெக்காடுஉறப் போகநெறியின்றிவளாக்கொள்ள, அரசன்கண்டு எத்திசையும் அகலும்ஆறின்றி எரிக்கும் அங்கியைக்கண்ணுற்று உள்ளமழுங்கி, “மின்னின்னிலையில மன்னுயிராக்கை” கூத்தாட்டவைக்குழாம்” அன்ன-மனைவிமக்கள்; ஆதலின் இறப்பின் தாபரம் ஒழியுமேயன்றி வேறுஇன்று; ஆயினும் இம்முனிசிறுவனிறப்பின் பிரமகத்தியைசேருமே முனிவர்கடன்செலுத்தாமற்பொன்றின்பழிபுகுமே என்செய்கேன் எனக்கவலையெய்தி இறக்கமதுய்ய விரகில்லையேயென மெலிந்து,ஆ! இளையோன் அந்தணன் முனிவர்கடன் இவன்என்னாலிறக்கின் யான் எந்நரகில்உழல்வேனோமகாபாவியானேனே செய்யற்பாலது ஒன்றுமறிகிலேன் பேதையேன் என்று நினைத்து நெட்டுயிர்ப்பெறிந்து நான்முன்னம் இறப்பின் அத்துயரங்களைக் கண்ணுற்காணுதிருக்கலாமென்று தீப்பாயத் துணிந்துதீக்குஅணுகச்செல்லுங்காவலனைக்கண்ணுற்றசந்திரமதிகாலில்வீழ்ந்துவணங்கி,அறமுணர்ந்தோய்!நின்செய்கைவிபரீதமாயிருக்கிறதே;உலகத்துக்கும்நீதிக்கும் உன்மைக்கும்ஒத்ததன்றே இதுசெயத்தக்கதன்று;நான் இறந்தால் எனக்குப் பதிலோகமும் பதிவிரதைகளின்சிறப்பும்உண்டாம்;நீதிக்கும்ஒத்ததாம் ; நீயிருப்பின்முனிவர்கடன்தீர்ப்பாய்;கான்முளையையும்காப்பாய்;எவ்வாறேனும்வாய்மைநிறுத்திவளரோடுஆளுவை;பத்தினிகளையும் புத்திரர்களையும் பெறலாம் ; வம்சத்திற்கும் அழிவில்லை; ஆதலின் எனக்கு அநுமதிகொடு; நான்தீப்பாய்கிறேன் ஆயிரம்பிறப்பாயினு பிறந்து உனக்கே மனைவியாவேன் முனிமாணாக்கனைக்காத்து உன்பிரதிக்கினையையும் நிறைவேற்று என்று உடை

யை இடையில் இறுக்கித் தனித்துதிப்பாயச்செல்ல,மன்
னவன்தடுத்து, " அதிசிறந்தவளாய் அன்புடையளாய்
பதிசொற்றவறாத " பத்தினியாயிருக்கும் நீ இறந்தபின்று
ம் நான் உயிர்பிழைத்திருப்பேனோ? மகன் எவ்வாற்றான்
உய்வன்? நீங்களிறந்தபின்பும் உயிர்சுமக்கும்வன்கண்ண
னேன் என்று அலமந்துகூறச், சந்திரமதி அவ்வலோ! நீதி
ராஜ! எத்துயர்வரினும் சத்தியம்தவறாது நிலைபெற்று,
இவ்வுலகு எல்லாம் ஒருகுடைக்கீழ் ஆட்சிசெய்வை; எல்
லாப்போகமும் உளவாம் அதன்றியும் பிறகும். உத்தம
மானபெண்கள் பதிக்குமுன்னேதான உயிர்துறப்பார்கள்
பதிஇறந்தபின் மனைவியிருப்பின் சற்காரியங்களுக்கும் தே
வபூசைக்கும் விலக்காவாள்; உடை அணியொன்றுமணி
யலாகாது;உணவும்சுவைபார்த்துஉண்ணலாகாது;ஒருவே
ளை அமங்கலியின் முகம்கண்டவர்கள் செல்வமும்மாறும்;
தீங்குநேரும்; கண்டவர்கள் பலபிராயச்சித்தங்களும்செய்
துகொள்ளல்வேண்டும். பதியைத்தெய்வமாகக்கொண்ட
பதிவிரதைக்குப்பதிஇறப்பின்உயிர்தங்குமோ? துய்யஅத
தலின் நான்முன்னே இறப்பது நன்முறை; எனச்சொல்
லிக், கனலில்செல்லமுயல்கையில்மகன் அவள்முந்தானை
யைப்பற்றிக்கொண்டுவிடேன்என்று அழ,அவனை மடியில்
ஏற்றித்தழுவியுச்சிமோந்து முத்தமிட்டுத்தந்தையால் இரு
உனக்குற்றவையாவையுங்கண்டார்க்கூறையும்கொண்
டேவென்,என உரைத்துமன்னவன்பால்விடுத்துத்தீயை
அணுகி,நான் கணவன்கட்டளைகடவாது அவனையேதெய்வ
மாகப்பூசித்ததுஉண்மையாயின் அம்முனிசிறுவனுய்க; அர
சனும்முனிவர்கடன்தீர்த்து மைந்தனொடுஅரசாளுக;மற்ற
வர்க்குக்காயங்களால் கற்பின்நிலைகடவாமைமன்னிடத்தி
ல்உண்டாயின் அவர்கட்குஇதில்வெப்பம்தாக்காதிருக்க; நான்
பதியின்பணிவிடையில் இறையும் தாழ்வின்றியிருந்தே
னாயின் அக்கினிசந்தனம்போல்அவர்களுக்குக்குளிர்ச்சிதரு
க;என்றுபிரமாணஞ்செய்துபணிந்து அக்கினிதேவனைஉன்னித்
துறப்படவுளோ! எல்லாத்தேவர்களுக்கும் முகமாயுள்ள நீ



மனங்குளிர்ந்தால் மற்றெத்தேவும்மகிழும்; சூரியனும்சந்
திரனும் எல்லாத்தீயும் உன்னுருவங்கள்தான். வைதிக
ரும் தவங்களும்பூசைகளும் உன்னலன்றி ஆவதில்லை. உ
ணவும் அணியுமெல்லாம் உன்னாலே அமைவன. என்னெ
னைகளினும்சிறந்த காட்சிப்பிரமாணத்தால் அறியப்படும்
நின்னையன்றித்தேவர்களும் உளரோ? என்கற்புக்கும் சா
க்ஷிநீயேயென்று போற்றிப்பணிந்து கனற்கொழுந்திற் பிர
வேசித்தனள்; தேவர்களும் ஆ! ஆ! எனப்பதறிக் குலைந்த
னர்; அரசனும் செயலற்றுநின்றனன்; முனிமாணாக்கனு
ம்உள்ளம்நடுங்கினன்; காட்டுத்தீயும் கமலப்பொய்கை
போல் தண்மையாயிற்று. சமைவனத்தில் விளையாடும்அன்
னம்போல் இவளும் அதிலுலவி முகமலர்ந்தனள்;
அத்தேவர்களும் வியந்தனர்; ஆடையும்கூந்தலும் அணிந்
தவாறே எரியால்கருகாமலும் வாடாமலுமிருந்தன;அங்கி
க்கடவுளும்அவள்கற்பின்வலுக்குஅஞ்சிக்கொண்டுஇரு
ந்தனன்; அமரர்கள் அந்தரத்தில் மலர்மழைசொரி
ந்துமங்கலமுரசுமுழக்கினர். அரிச்சந்திரனும் அகங்கு
மனைவியின்கையைப்பற்றிக்கொண்டு மகிழ்ந்து உன்னால
ன்றோ இவ்விடர்தொலைந்தது; நானும் உயிர்தப்பினேமா
யின் காதிசுதன்முனிவின்கடன் இறுத்தேனாயினேன்; இ
னி எவ்விடும்பைநேர்படினும் கடப்பேன்; உன்புண்ணிய
த்தினால் பூரணபுத்திரனுமுய்ந்தனன் உன்னால் சுவாமிக
ளோடுகூடி உலகையழிக்கும்வழித்தீப்போன்றதாகியகா
வாக்கினியேதணிந்துகுளிர்ந்ததனால் இனி எத்துயரெய்தி
டினும் அஞ்சேன்என்றுகொண்டாடிய தங்கணவனை அரி
ச்சந்திரனை மும்முறைவலம்வந்து இறைஞ்சினள்; பின்
மனக்கவலைநீங்கிமூவரும்நக்ஷத்திரகனைமுன்னடத்திச்செ
ன்றனர். முன்போல் அனைவரும் வாட்டந்தீர்தலின்
றிச்செல்ல விசுவாமித்திரமுனிவர்கண்டு மனக்கவலையுற்ற
யான் உக்கிரமான வெய்யில்தபிக்கச்செய்தும் முன்னும்ப
ரலும் உறுத்தச்செய்தும் விஷஜந்துக்களையும் கொடியவி
லங்குகளையும் ஏவியும் மிகக்கொடிய அசுரனைவிடுத்துவி

ர்ப்பு உறுத்தியும் வேதாளத்தை அனுப்பிவெருட்டியும் பெருமழைபெய்யவும் பெருங்காற்று அடிக்கவும் காட்டுத்தீச்சூழவும் இயற்றி விளைத்ததுயரெல்லாம் வெயிற்கதிர்முன்வீயும் பனிபோலாயின ; தேவர்கள்திறலினும்முனிவர்கள்தவத்தினும்சந்திரமதியின் கற்பேவலியதாயிற்று;என்தவம்இவர்இயற்கைக்குஎதிர்நிற்குமோ ? எற்று ஆகும் ? என்றும் என்பிரதிக்கினைதவறினேனே;எவ்வுலகும்படைக்கவல்லேன் இவர்கட்குத்தோற்றேனே; என்றும்நினைத்து நினைந்துநெஞ்சம்நைந்துகலங்கிச்சோர்ந்துநெட்டுயிர்ப்புஎறிந்துநிலத்தில்வீழ்ந்தெழுந்துபதைத்துக்கடுங்கதம்கொண்டுவெளிப்பட்டுவந்து தன்சீடனைவிளித்து எவ்விதத்தானும் இவ்வரிச்சந்திரனைவஞ்சித்துமனைவியையும் மதலையையும்பிரித்து நல்வாய்ப்பானவேலையறிந்துபொய்ம்மொழிபுகலவியற்று; உனக்குஎல்லாவித்தைகளும் கற்பிக்கிறேன் என்சபதத்தைக்காவென வற்புறுத்திக்கூறிமறைந்தனர்.

## ௧௯-ஆவது, அத்தியாயம்.

### நக்ஷத்திரகன் சந்திரமதிக்குத்துர்ப்போதனைசெய்தல்.

பின்நக்ஷத்திரகனும் சில்லாறுகடந்துசெல்கையில் அக்கற்புக்கரசியான சந்திரமதியைநோக்கி மதிதயன்நற்புதல்வியே அமர்ந்துகேள் வசிட்டமாமுனிவர் பத்தினியாகியஅருந்ததி அகத்தியமகாருஷியின்மனைவியாகிய லோபாமுத்திரை சதிக்ஷணமாதவர்இல்லாளாகிய அநசூயைஎன்னும் கற்பின்மிகுத்திகளும் உனக்குநேர் ஆவாரல்லராயின் மற்றுமுள்ளமாதர்களோநினக்கு நிகராவார்.ஆதலின் எவ்வுலகினும் உனக்கு ஒப்பாவார்இலர் ; உன்கற்பின் நிலையினைக்கடக்கவல்லவராற்றுவார் ?.ஜோதிதீபம்போல் உலகெல்லாமெரிக்கும்காட்டுத்தீக்கனலும் வலிதேற்றாது ; இத



னால் எவ்வுலகும் வெற்றிகொண்டாய்; நின்தூய ஒழுக்கங்கண்டு களிக்கமுற்றேன் ; உன்மனதுக்குச்சிறிதும் அயர்வுவேண்டாம்; என்பதிநீர அன்னமளிப்பின் அமையும் உனக்கு உணர்த்துவதின்றென்று உளது.விரும்பிக்கேள் இப்பொழுதோதானைக்கோ இங்கு கௌசிகமுனிவர்வருவார் உன்னோடும்மகனோடும் அரசனை வருத்துவார். அவரால்பீடிக்கப்படின் உன்னையும் மகனையும் அறவிலைசெய்து அவர்கடன் இறுப்பான்இவ்வுலகமுற்றும்ஆளும்அரசன்மனைவியாகிய நீ எவனோஒருவனுக்குத்தொழுத்தையாய் அவன்பணிதலைமேற்கொண்டு தொண்டுசெய்யநேருமே தொழும்பின்னுங்குதுயரும்உள்தோ ? இதற்கு இப்பொழுதே ஓர் பரிகாரம்செய்வதுநலம்.என்னென்பாயாயின் காலத்திற்கேற்றகோலம் என்பதாக இச்சமயத்துக்குத்தக்க வண்ணம் எம் ஆசானாகிய விசுவாமித்திரமுனிவர்க்கு மகள்முறைபூண்டவளாய் நின்காண்முளையையும்கொண்டு என்னுடன்வா முனிவரிடம்செல்வோம் இனிநீ வேந்துநெடுந்தூரம்பினைந்துஎன்பயன் ? இவ்வரிச்சந்திரனுக்கு அருந்தவன்திரவியம்இறுக்க ஆற்றலில்லை ; வேறுவழியில்லாதான் என்செய்கிற்பான் உன்னைவிற்றே பணங்கொடுப்பான்நீஉன்மேன்மையும் ஒழுக்கமும்கெட்டுஒருவனுக்குப்பணிப்பெண்ணாய் அடிமைபூண்டு அருந்துயரம் எல்லாம் நுகரநேரும். ஆதலின் மன்னவனைவிட்டு மைந்தனோடுமுனிவரைச்சரணம்புகின் நின்மதலைக்கு அரசும் செல்வமும்தந்து அநுக்கிரமும்செய்வார் ; நீமுன்போல் அரசச்செல்வம் எல்லாம் நுகரலாகும். அரசன்கூறியதவனையோ இன்னும்பத்துத்தினசமேயுள ; இதுகாறும் ஓர்காசும்கொடுக்கவில்லை ஆதலின் இதனைநன்குஆய்ந்துதுணிந்து துன்பம்தீர்வழிமுற்றிக்கொள்; அரசன் மகளும்சக்கிரவர்த்தியின் மனைவியும் ஆதலின்நீ இவ்உபாயமும் நன்குபொருந்தஓர்ந்து துணிந்து புரி;நின்புதல்வனுக்குஅரசாட்சிகிடைப்பதில்ஐயம் சிறிது

யில்லை; நான்பட்டாபிஷேகம் செய்விக்கிறேன் ஐயுறவுபடேல் எனஆசைமூட்டி உரைத்தனன். அதுகேட்டுச்சந்திரமதிமனம்உட்கி, அறம்உணர்ந்த அந்தணர்திலகனே! நன்னெறிநெறியுணர்ந்து ஒழுகுபவனே! மறைநூற்கலைவிதிவிலக்குத்தெரிப்பவனே! நீயுமின்னணம்புகலலாகுமோ? பூமியையும்புதல்வனையும் பூஷணங்களையும் உறவினரையும் என்னுயிர்க்காவலனின்றி விரும்பேன். தாயும் தந்தையும் குருவும் தேவும் மகவும் சுற்றமும் மணியும் பொன்னும் தனமும் ஐயமும் புண்ணியமும் கதியும் பதவியும் மோக்ஷமும் தருமமும் நியமமும் வனப்பும் செல்வமும் சுகமும் அணியும் அமுதமும் இம்மையும் மறுமையும் கலைகளும் ஞானமும் உயிரும் மற்றும் முற்றும்கற்புடைமாதர்க்குக்கணவனே; கூனனாயினும் குருடனாயினும் செவிடனாயினும் அந்தனாகினும் முடவனாயினும் கள்வனாயினும் பித்தனாயினும் மடியனென்றாலும் மிடியனென்கினும் படிறனாய்விடினும் என்கணவனேயிருந்துழியும் “ஒருமகட்கு ஒருதெய்வம்கொழுநனே” என்றபடி கற்பினார்க்குக்கொழுநனேதெய்வம் அவனைவிடில் கதியும்உண்டோ? என்பிராணநாதனே வேணும்வென்கும் எனப்புகழ் அருள்ஒழுகுகண்ணும் எத்துயரினும் நீங்காமுகமலர்ச்சியும் கற்பகமும்நாணும்கொள்கொடையும் மறலிக்கும்அஞ்சாவீரமும் உயிரைப்போல் இரப்பினும்உதவும்அன்பும் உள்ளானாய் எத்தவஞ்செயினும் பெறற்கரியனாய் எவ்வுலகும்ஆளும் ஆண்டகையாய் அறமூர்த்தியனாய் அரசர்க்கரசனானவன்; ஆதலின் அவனைத்தவிர்ந்தென்னாவிதனையும் உயிர்போய் உடல்நிற்குமோ? அவன் உவந்ததுசெய்ய அமைவதே என்வேட்கை; அவன்விற்கினும் கொடுக்கினும் வதைசெய்யினும் அவனைக்கடப்பேனல்லேன்; புறவுக்காகத்தசையரிந்தசிபிச்சக்கரவர்த்தியின் மரபினனாய் வாய்மைக்கு உயிர்வழங்கும் என்கொழுநனுக்காக உடல்வருந்துவதும் தொழும்புபூணுவதும் அருமையோ? அம்மன்னவன் அறநெறிகாக்க என்னைவிற்பினும் அ



எனக்குப்பெருப்பேறன்றோ? அவன் தனக்கேயாகவென்னைக்கொண்டவனாதலின் இவ்வுடல்அவனுக்கே அற்றுத்தீர்ந்தபொருள், என்னைப்போன்றவளொருத்திகணவனைவருந்தித்தொழுகாள்; நீவிர் அவ்வுரையகற்றி அருள்புரிகவெனக்கூறித், கோபங்கொண்ட கௌசிகர்வரினும் யமனேநேர்வரினும் ஊழிக்கடையில் உலகைஅழிக்கும் உக்கிரசங்கார உருத்திரமூர்த்தியேவரினும் எனக்குச்சிறிதும் மனக்கலக்கமில்லை, ஜகத்காரணன் கருணையால் முனிவருக்கும் பொருள்கொடுத்து வாய்மைதவறாவள்ளலான வேந்தனும் உலகசாட்சிபெறுவன்; வசிட்டமாமுனிவரும் சத்தியப்பிரதிக்ஞையுடையரே ஐயமில்லை; விசுவாமித்திரமுனிவருடையமாயையென்செய்யும் என்றுசொல்லுகையில் ஆகாயத்தில் அசரீரிவாக்கும் சத்தியமேஜயம் அரிச்சந்திரனேவென்றுன் என்று அறைந்தது: அவ்வாகாசவாணியும் சந்திரமதியுரையும் செவியுற்றநக்ஷத்திரகன் தன்கருத்தை பயன்படாதென்று ஊக்கமிழந்து நாணமுற்றவனாய் உத்தரமுரையாது வாய்பொத்திக்கொண்டனன். அப்பொழுது வெகுதொலையின்முன்சென்றவேந்தன் மருங்கினில் மகனைச்சுமந்துகொண்டு மெல்லமெல்லவருந்திநடந்துவரும் மனைவியைவிளித்து விரைவாகநடந்துவா குழந்தையைச்சுமக்கத் திடனில்லாமையின் நான்தோளில் ஏற்றிச்செல்லுகிறேன் தாவென்று புத்திரனை அவள்மருங்கினின்றும்வாங்கித்தன்தோளில் ஏற்றிக்கொண்டு நடந்து ஏகினன்.

---

## கரு - ஆவது. அத்தியாயம்.

### அரிச்சந்திரன் கங்கையில் ஸ்நானம் செய்து காசிக்குச்செல்லுதல்

அவ்வண்ணம்செல்லும்நெறியில் எல்லாப்பாவங்களையும் போக்கிப்புண்ணியத்தைவிளைக்கும் பெருமையுள்ளதாய்க் குளிர்ச்சியும் மணமும் தெளிவுமுள்ள நீர்நிறைந்த

தான பகீரதியைக்கண்ணுற்று, மஞ்ஜரிகையைவிளித்துமடந்
தாய்! " தேவர்களும்தூய்மைபெறத்தகும் இக்கங்காந
தியைவணங்குவோம் நமது இடர்இடைந்து சீர்மைசெ
ழிக்கும்" என்று இயம்பி, பாரியாபுத்திரர்களோடுதொ
ழுது; " அலைகளாகியகரங்களால் பொன்னும்மணியும்
தருவல்லவே! நினைத்தவெல்லாம்வழங்கும்கங்கையே! பவ
ங்களைப்போக்கி உலகையெல்லாம் பரிசுத்தம் செய்ப
வளே! ஒருகால் நீர்தோய்ந்தவர்களுக்கும் பவமொழி
த்துப்பதவிதருபவளே! உலகுக்கோர்மங்கலமாயி
ருப்பவளே எனக்கங்காநதியைவணங்கிப்போற்றி, நீராடி
எல்லாத்தாபமும்நீங்கி நித்தியநைமித்திககருமங்கள் செ
ய்துமுடித்துத் தென்புலத்தார்க்கும் விட்புலத்தார்க்கும்
விதிப்படி அருச்சனைபுரிந்து, தேவரிஷிமுதலியவர்க்குத்த
ர்ப்பணமும்செய்து அங்கு தேவர்களும் முனிவர்களும் எ
ண்ணிடையின்றியிடைந்து, எல்லாவளங்களும் நிறைந்த
தாய்த், துன்பம் போக்கி இன்பமளிக்கும், மகிமையுள்ள
முத்திதரும் தலமெனப்பேர்பெற்ற வாரணாசியென்னும் ம
காநகரத்தையடைந்தனன். தன்மனைவியைப்பார்த்து, இணையற்
ச்சிறந்தவிந்நகரம் காசியென்பது இந்தக்ஷேத்திரத்தில்ஜக
ந்நாதன் ஜீவர்களும் உய்யும்வண்ணம் பிரசன்னனாய் முத்
திதருவான். எவ்வகைப்பாவம் செய்தாராயினும் சாதியா
லும் ஒழுக்கத்தாலும் இழிந்தோராயினும்இத்தலத்தினில்
எய்தின் எல்லாப்பாவமும் தொலைந்து முத்திபெறுவர்.
தேவர்களும் இத்தலத்தில்வந்து பணிந்துமுத்திபெறவி
ரும்பித் தொழும்புபூண்டிருப்பார்கள். பிராமணனைக்
கொலைசெய்தவனும் பெற்றோரைக்கொன்றவனும் குரு
வைக்கொன்றவனும் பசுவைக்கொன்றவனும், கருவைச்
சிதைத்தவனும், பெண்களைக்கொன்றவனும் மதுப்பருகல்
முதலியபஞ்சமகாபாதகங்கள் செய்தவனும் இந்தக்ஷேத்
திரத்தில் கங்கைத்துறையில் முழுகினாலும் இங்குவசித்
தாலும் இத்தலத்தை வலம்வந்தாலும் வழிக்கொண்டு செ



ன்றாலும் பாவக்காடெரிந்து புண்ணியவமுதவாறுபெருகு
ம். பிறவிக்கடல் வற்றிப்பேரின்பமுறுவர். பதவியெல்லாம்
பெறுவர். அயோத்தியை - மதுரை - மாயை - முதலியமுத்
தரும் தலங்கள் எல்லாவற்றிலும் இதுசிறந்தது. ஐந்
துகுரோசம் விசாலமாய் உள்ள இந்தக்ஷேத்திரத்தி
ல்விலங்குபறவை புழு முதலிய இழிவுள்ளபிராணிக
ளும் இறப்பின்முத்திபெறும். ஊரில்நெருப்பு வைத்துக்
கொளுத்தின கொடும்பாவியும் அன்னத்தில்விடம்வைத்
துக்கொன்ற அரும்பாதகனும் தாய்க்கொலைசெய்யும் த
கையிலியும் பசுவைக்கொன்றுசீவிப்பவனும் பொய்புகல்
வோனும். அழுக்காறுடையானும் உயர்ந்தோரைப்பழிப்
பவனும் பெண்கள்கற்பழிக்கின்றவனும் அலது
சொல்பவனும் ஆருயிர்சிதைத்தவனும் இன்னும் இழிதொழி
ல்புரிவோனும் இங்குஇறந்தால், அருந்தவம்புரிந்துஅகப்பற்
றும்புறப்பற்றும் விட்டு அமலன்அருள் பெற்றமாஞானிக
ளோடொப்பப்பவமழிந்து பரம்பொருளோடுசாயுச்சியம்
அடைந்து மீட்சியில்லாப் பேரானந்தக்கடலில்மூழ்குவர்
கள். இத்துறையில் குளித்தாலும் இதன் பேர்சொன்னாலு
ம் பேறு அடைவார்கள். காலையில்தியானத்தோடெழுந்து
குளித்து மூன்று அக்கினியும்பூசித்துமுறைவழுவாத ஒழு
க்கத்தவரும் அறமுணர்ந்த அருந்தவரும் யோகிகளும்பெ
ரியோர்களும் வதியும் இடம் ஆதலின் என் இயல்பு அறி
து அருள்புரிந்து எனக்குவேண்டும் பொருள் நல்கி விசு
வாமித்திரர் இரணம் ஒழித்துப் புனிதனாகப் புரிவார்
கள். இப்பெரியோர்களிடத்தில் அடைக்கலம் புகுந்து,
இரணம் தீர்த்து, எனவாய்மையை நிலைநிறுத்தவென
என்று உரைத்துச், சர்வேச்வரனுடைய பாதத்தில் பற்றி
னமனமுடையனாய், ஜகதீச்வரனுடைய காசிக்ஷேத்திரத்
தில்பிரவேசித்தான். உடனே அங்குள்ள மகிமையுள்ளதே
வாலயத்தில் தேவனைத்தரிசித்துவணங்கிவழிபட்டுப்போற்
றிவலம்வந்து மனம் தெளிந்துமகிழ்ந்தனன்.

## கரு - ஆவது அத்தியாயம்.

### நக்ஷத்திரகன் அரிச்சந்திரனைப்பணத்துக்காக நிர்ப்பந்தித்தல்.

பின்பு மனைவிமக்களோடும் நக்ஷத்திரகனோடும்காசி
வீதிகளில் மறையோதுமண்டபங்களும் கலைகளபயிலும்
சமசமும் வளம்பிடைத்த கதிர்மணியிழைத்த எழுநிலை
மாடங்களும் பூரணகும்பங்கள்பொலியும் பொன்மாளி
கைகளும் பண்டங்கள்நிறைந்த ஆவணங்களும் கண்குளி
ரக்கண்டு சென்று ஓரிடத்தில்நின்று ஓர்அந்தணன் மாளி
கைக்கு அருகச் சீடர்கள்சூழஒர்யோகியிருக்கும் மட
த்தில் சிலநாள் இருந்தார்கள். அவ்வாறிருக்கையில்நக்ஷத்
திரகன்றியெழுவிழித்து மன்னவனை உருத்துச்சொல்லலுற்
றனன். அரசனே! நீயென்முனிவர்தனம் கொடுக்கவில்லை
அறிவில்லையோ! நீயும்பெரிய அரசவம்சத்திற் பிறந்தாயே நா
ன் உனக்காகக் காத்திருப்பது மனதில் எண்ணவில்லையே
நீமுன் ஒருமாதம் தவணைவைத்துப் போந்தநாள் எல்லாம்
ஆய்விட்டன. இன்னுமிரண்டேதிவசந்தான் உள்ளன. உன
க்குப்பணம் எப்படிவரும்? எவ்வாறுன்கடன் தீர்ப்பாய்?
எருதுபோல்தலை யசைத்துக் கொண்டிருக்கிறாயே நீ முனி
வர்பொருள் கொடாமல் வஞ்சித்து ஓடிப்போகச் சமயம்
பார்த்திருக்கிறாய் என்னைஎளியனென்றுநினையேல் கௌ
சிகமுனிவர் மாணாக்கன். என்னைத் தேவேந்திரனும் வ
ஞ்சித்தலொல்லாது என்வியற்கைஅறிந்திலையோ வன்றிற
ல்யார்; எனக்குக் கோபமிருந்தால்நின்னைஎன்செய்வேன்
காண்; இயமனும் எனக்கு எதிர்நிற்கவில்லான்; நீசத்தியசந்
தனென்று பேர்வைத்துக்கொண்டுமாயம்செய்துபணிவுள்
ளாய் போல்நடித்து மோசஞ்செய்யக் கருதியிருக்கின்றா
னே! கழுத்திலும் காலிலும் அன்னைத்தான்பூட்டி முதுகெற்
பாறையேற்றிப்பலரும் நகைக்கப்பங்கப்படுத்துகிறேன்
இடும்பை ஒழியச்செய்கிறேன், காசியில் போனவுடன் மு



ற்றும் கொடுத்து விடுகிறேன் என்றுபச்சைப்பசும் பொய்
யேபேசினாய்; சீச்சீ நீஇப்படிப் பொய் சொல்லிவாழ்தலி
னும் உயிர்துறத்தல் நலம். உன்பிழைப்புவகைக்கு? இப்பொ
ழுதே கொடாயாகில் என்மண்டையை உடைத்துக் கொ
ண்டு உன்முகத்தில் உதிரம் இறைப்பேன்; கொடுப்பாயா
இல்லையா? சொல்; ஊமைபோல்பேசாமலும்கல்லுப்போல்
அசையாமலும் இருக்கிறாயேஎழுந்திரு; முனிவரிடம்வா
நான்ஒருநிமிஷமும்பொறுக்கேன் என்றுசொல்ல, அரசன்
கேட்டு ஒன்றும் தோன்றாமல்திகைத்து, "முனிவர் சீஷிய
ன், காதில்கனைகாய்ச்சியிட்டதுபோல்கூறுகின்றானே என்
னிடத்தில் காசுஅளவும் தனமில்லையே பாரியையும் புத்
திரனுந்தாமிருக்கிறார்கள் என்னசெய்யலாம்" என்று
சிந்தாக்கிராந்தராய்க்கண்ணீர் ஆறுப்பெருக்கலுற்றா
நிற்குங்கணவனைச்சந்திரமதிகண்டு, ஓ பிராணநாத மகா
ராஜகுலதிலகனே! சதுமேல்கவலையுறேல் ஆபத்துவரு
ங்கால் ஊக்கமிழக்கலாகுமோ? கலைகளில்பயின்றுகல
விக்கரைகண்டகாவலனே! சமயத்துக்குத்தக்கயோசனை
செய்து நேர்ந்ததுன்பத்தைநீத்தல் வேண்டும்; கெடுக்கா
ரம்சிந்தைசெய்வதற்கோ நாளில்லை; இனியுள்ளநாளோ
இரண்டுதான்; இந்நக்ஷத்திரகனோபிராணசங்கடமுண்டு
பண்ணுவான்; கேட்கரியகடுமொழிகளைக்கணக்கற உரை
ப்பான்; மேலும் அஞ்சலிவு உறுத்துவான்; ஆபத்துக்கு
தவத்தனத்தையும் மனைவிமக்களையும் பெறுவது; அம்மு
டைமைபரிசியடியோங்களைவிற்றுவது முனிவர்க்குக்கட
ன் இறுத்து வாய்மை நிறுத்தும்; உமக்குஉதவாதோயிருக்
கென்பயன்? வேறுசிந்தைபுரியற்க. இதனும் அவர்பொ
ருள் எய்தாதாயின் வேறுவிரகு ஏதேனும் விசாரியும்;
மனந்தளரவேண்டாம்; உண்மையுயிரினுஞ்சிறந்தது; வாய்
மையினால்தான் உலகமும் அறமும் நிலைத்திருக்கின்றன.
யதார்த்தத்தினாலேயே பரலோகம்கிடைக்கின்றது; எல்லா
ச்செல்வமும் சிறப்பும் முத்தியும் சித்திக்கின்றன; பொய்

சொன்னால் புண்ணியந்தடையாது, பொய்புகல்வதே பெரும்பாவம்; மீளாநரகமும் அடைவிக்கும் பொய்யொன்றே புலையருக்கும்; பிணியும் பிணையும் ஆக்குவிக்கும் ஆதலின் பொய்யினாற்குப் பகையும் இல்லை மெய்யினாற்கு நட்பும் இல்லை; எல்லாமுணர்ந்த அறிஞரே ஒன்றுமறியாதார்போல் மயங்கலாமோ? துணிந்துசெய்யவேண்டும். அடியேங்களிடத்தில் பற்றுவிட்டு இவ்விடங்கடக்கவேண்டும், மனைவிமக்களிடத்திற்பற்றுவிட்டவர்களே ஞானிகள். "யானெனதென்னுஞ்செருக்கறுப்பான் வானோர்க்குயர்ந்த உலகம்புகும்" ஆதலின் இழிவான உடல்பொருள்களிற் பற்றொழிந்து அழியாப்பொருளைத் தேடுதி; ஆயிபுடைத்திரும்பாரியையும் சரீரமும் நீர்க்குமிழிபோல நிலையற்றவை; தன்மாவொன்றே ஞானமயமாய் ஒளிவிட்டு என்றும் அழியாமல் பரம்பொருளோடு ஒன்றுவது; அப்பரஞ்சோதியைப் பற்றற்றே பற்றவேண்டும். மூவுலகிலுமுள்ள பெரியோர் அனைவரும் அமலன்தாள் பணிந்து உய்யப் பற்று அறத்தே புகுவர்கள். ஆதலால் மனைவிமக்களில் பாசம் வையாது அறவிலைசெய்து நின் பொய்யாவிரதம் போற்றுக "பொய்யாமையன்ன புகழில்லை எய்யாமை எல்லா அறமுந்தரும்" "பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று" அஃதொன்றேயன்றி "எல்லாவிளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யாவிளக்கே விளக்கு" அதினினாற்கு அறிவுமில்லை. இவ்விரதங்காப்பதற்கு எதையும் விடலாம். நிலைக்கே அற்றுத்தீர்ந்த பொருளாகிய வெம்மை விற்பது ஒருபொருட்டோ? என்றுரைத்தவேண்ட, அரிச்சந்திரன் ஒன்றும் தோன்றுமல் ஆசைவற்று நின்று சந்திரமதியின் அறிவுக்குறியப்பற்றிருந்தனாய், கெடுக்கும் நினைந்து பெருமூச்செறிந்து இல்லாளை நோக்கிக் காதலி! மன்னர்மன்னவன் மகளே! நீசொன்னசொல் என்செவியில் ஈயம் உருக்கி வார்த்ததுபோலாயிற்று; உடலும் ஆவியும் வேகின்றன; நெஞ்சமும் வெ



ந்து உருகுகின்றது; நீ முன் காட்டுத்தீயில் விழவும் மனந்துணிந்து உயிர்சுமந்து நின்றேன் கருணையில்லாதவன் நெஞ்சனேன்; இன்னும் என்செய்வேன்? என்னினும் கொடியவனும் ஒருவன் உள்ளனோ? என் அறிவும் அன்பும் அழிந்து அழிந்தன; எனப்புகன்றான். பின்னும் நான் வியே! வனத்தில் வருந்திடுங்கும் பொழுதும் பரியால்களுக்கும் வேலையிலும் குகைகளிலும் மரத்தின் அடிகளிலும் தங்கும் பொழுதத்தும் அடுக்கும் காயும் அருந்தும் அமயத்திலும் வெயிலில் கன்றியும் மாரியில் விறைத்தும் இருந்த தருணத்திலும் நின்னைப்பிரியாதிருந்தமையின்றித் தம் கவியாமல் சுகமே உற்று இருந்தேன். உயிர்க்குச் சாத்துணையாம் நின்னையும் விட்டு உறைகிறபடி நேர்ந்தது; ஐயப்பற்றியும் இழந்து பத்தினியையும் பிரிந்து மகவும் துறந்து இன்னும் உயிருக்கலாமோ? கண்டார் நகையாரோ! கடுமனம் உடையான் என்னாரோ? மாபாவி என்னும் மானமிலான் என்னும் மதியிலி என்றும் திருவிலி என்றும் செருக்கோடும் அறைகின்றாரோ? என்று கண்ணீர்பெருக்கி உள்ளம் நைந்து மறுகலுற்று நின்றான். பிறந்தமன்னவனும் மானதனுமாகிய அரிச்சந்திரன் மயங்கி அயர்ந்தனன். இவ்வண்ணஞ்சோர்ந்து உருகும் வேந்தனை நக்ஷத்திரன் கண்டு, ஏடா அரசப்பதரே! கற்றவிமோசனமே! மானமிலாயின் முனிவர் வெறுக்கைகள் காயோ? எவ்வாற்றானுக்குப் பொருளெய்தும் வந்தித்துப்போகக் கருதிச் சமயம் பார்க்கின்றனையோ? உன்னை உயிரோடு விடேன்; முனிவரிடம் வாவென்று கையைப்பற்றியீர்க்கக் கண்ட சந்திரமதி பிராணநாத! எழு எழு என்று விளம்பிக் கணவன் பாதத்தில் வணங்கி, நன்மையே நேரும் அஞ்சேல் என்று தேற்றவும், வேந்தனுமெழுந்து மனமழுங்கி நேரே மனைவிமக்களின் கையைப்பற்றி அழைத்துக்கொண்டு மறுகுதோறும் செல்லலுற்றனன்.

## ௧௫ - ஆவது அத்தியாயம்.

### அரிச்சந்திரன் மனைவியை விலைசெய்தல்.

அந்நகரிலுள்ளோர் அனைவரும் வெளிவந்து வியந்து நோக்கி "இவனோ ராமகாபுருஷன் வருகின்றான்; மலைபோல் உயர்ந்து எழுந்தாற்போல் திரண்டு பணைத்து முழந்தாள் தட்டுந் தடக்கையும், காதளவும் நீண்டு செவ்வரி பரந்து விசாலமாய்க் கருணையொழுகும் கஞ்சமலர்போன்ற கண்களும் உவாமதிபோன்ற முகமும் புன்னகைபொலியும் வாயும் மாதிரம் சிறிதெனஅகன்ற மார்பும் - சங்கு ரேகை கற்பகம் துவசம் கமலம் அங்குசம் வச்சிரம் ஆகிய அரசச்சின்னங்களாகிய வரைகள் அமைந்த அடிச்சுவடும் உன்னோருவனப்பே வடிவெடுத்தாற்போன்ற இராஜலக்ஷ்மி விளங்கும் மேனியுமுடையனாய் இந்நகரை அலங்கரித்து வருகின்றனன். பூமியில் பாதம் வருந்த நடக்கின்றனனே இஃதென்னோ? அவன் அருகில் மகாலக்ஷ்மிபோல் வருபவள் மனைவி போலும்; அவள் வனப்பு வருணித்துச் சொல்லவமையுமோ? அவள் மருங்கில் மகனைக் கண்ணுறுமின். மூவுலகிலும் நிகர் உண்டோ? யாம்செய்த தவப்பயனே இதுகாணக் கிடைத்தது; நுதல்விழியும் சடைமுடியும் புலியதளும் யானையுரியும் துறந்து இவ்வுருவெடுத்துச் சங்கரதேவனே விசாலாக்ஷியோடும் முருகனொடும் வருகின்றனனோ அன்றிச் சங்கும் நேமியும் துறந்து இரண்டு புயம் மறைத்து மகாவிஷ்ணுவே மகாலக்ஷ்மியோடும் மன்மதனொடும் வருகின்றனனோ? ஆயிரங்கண்ணை மறைத்து அயிராணியோடும் சயந்தனொடும் தேவேந்திரனே வருகின்றனனோ? என்று வியந்து ஒருவர்க்கு ஒருவர் பேசிக்கொண்டு இருக்கையில் மெல்ல மெல்ல நடந்து மனைவியோடும் மகனொடும் சென்று அங்குள்ள அந்தணர் முதலியவர் அனைவரையும் அரிச்சந்திரமன்னவன் பார்த்துப் புண்ணியப் பதிவதிவீர்காள் என்னுரை கேண்மின் கருணைபுரிந்து கேண்மின். நான் சூரி



யவம்சத்திற் பிறந்த திரிசங்கு மன்னவன் குமாரன்; பூமண்டலசக்கிரவர்த்தி; அரிச்சந்திரன் என்னும் பெயரினேன்; விசுவாமித்திரமாமுனிவருக்கு இராச்சியமும் பொருளும் முற்றும் வழங்கி மனைவியோடும் மகனொடும் காடே சரணமாகப் புகுந்தேன்; முன் விசுவாமித்திர முனிவர்க்கு வேள்விசகாகாரணம் கொடுத்த தந்தலைதனை என்னிடத்திலேயே அடைக்கலம் வைத்துப் போயினர்; இராச்சியமும் பொருளும் முனிவர்பாலதாயினபின் அவர் தம்தேசத்திற் பொருள்தேடிக் கொடுக்கல் ஆகாதென்று கட்டளையிட்டு நக்ஷத்திரகனையும் கடன் வாங்க அனுப்பி ஒருமாதம் காலவரையறையும் அளித்துவிடுத்தனர்; வைத்தநாள் வரையும் அணுகியது; அஃது இறுக்கவொண்ணாமையின் ஏங்குகின்றேன்; வருவாயும் இல்லேன் பொருள்வாய்ப்புக்கேதுவும் காண்கிலேன். இவ்வடிமைத்திறத்தை விலைசெய்தாயினும் முனிவர்க்குத் திரவியம் தேடமுயலுகின்றேன். அந்தணனுக்குப் பொருள் நல்குவேனென்று வாய்நேர்ந்து பிறழ்தல் அறமோ? மறமன்றோ? வைத்த அடைக்கலங்கொள்வது பெருந்தீவினையன்றோ? இருடிகள் பொருள் கொள்வேனேல் எச்சம் இழந்து ஏழெழுமையும் எரிவாய் நரகு எய்தவன்றோ நேரும். ஆதலால் தப்பாமே முனிவர்க்குப் பொருள் நல்கவேண்டும். ஐராவதவம்சத்திற் பிறந்த ஜயந்தம் என்னும் யானைமேல்நின்று இரத்தினம் எறிய அது செல்லும் உயரத்தின் அளவு விரப்பத்துச் சேம தமனியக்குவியல் அதற்குவேண்டுவது; அவ்வளவு பொருள் கொடுத்து இவளை விலைகொண்மின்; இவள் என்மனைவி; சந்திரமதிப் பெயரினள்; கன்னோசிட்டிக்கன்னமாபுரிமன்னவன்மகள்; அருந்ததிக் கற்பினள்; தம்மானை கட்டாது ஏவற்புரிவாள்; இறையும் ஐயுறவின்றிக் கொள்ளுங்கள்; கொள்ளுங்கள்; என்று விலைகூறினான். அதுகேட்டு நகரவாசிகள் அனைவரும் தம்தம் செவிகளைப் பொத்தி ஆ! ஆ! அவனிதனைத் தம் ஆளும் அரசர்க்கரசனுக்கும் என்ன ஆபத்து நேர்ந்தது "சூதாட்டவைக்குமாத்தற்றே பெருஞ்செல்வம் போக்கு

மதுவிளிர்தற்று'' "ஒருநாயகமாயுலகாண்டவர்பெருநாடு
காண இம்மையேபிச்சைதாம் கொள்வர்" என்பதாகச்செ
ல்வம் நிலைஇல்லை; எம்மாண்புள்ளார்க்கும் இடர்வரும் எ
ன்பது ஒருதலை. அறநிலைதவறின்றி ஒழுகும் அரசனுக்கு
ம்அருந்துயர் எய்துமோ?விதியையார்வெல்கிற்பார்? என்
றும், வரையாதவழங்கியவள்ளலுக்கும் வஞ்சகஞ்சூழ்
வாருண்டோ அவர்நெஞ்சு என்னகல்நெஞ்சோ? தவஞ்
செய்து அகங்காரமமகாரங்களை அறுத்து அனைத்துயிரினும்
அன்புபூண்டு அருளேமேனியாக்கொண்ட அந்தணர்க்குஅதி
பனாய்அருந்தவனான விசுவாமித்திரரும் உபகாரிக்கு அப
காரம்செய்தனராயின் அறநெறிநிற்பார் ஆர்?என்றும்இன்
னணம் கொடுமைபுரிவாரை இதுகாறுமெங்கும் கண்டி
லேம்என்றும் இவ்வரசன்கையில் இருந்த இராச்சியமும்
பொருளும் எல்லாம்வழங்கியும் இன்னும் வலிமைசெய்து
பீடித்துப்பொருள்கேட்கிறார்அவர்க்கென்னபேரவாவோ?
காதலியும் கான்முளையும் அன்றிக்காசளவும் காவலன்கை
த்திலனே. பதியிழந்துபணியிழந்து பதாதியாகப்பத்தினி
யோடுபழுவம் உற்றபின்னும்பருவரல்இயற்றுவதுஅறமோ
அம்முனிவர்க்கு என்னகதி அமையுமோ? யாமும்ஆனலர்
பலரையும் கண்டோம்; மானமில்லாராய்ப்பேரவாக்கொ
ண்டவர்களாய்மரியாதையறியாதாராய்க் கொடுந்தொழி
லராய்க் கையராய்ப்பிறர்உண்டியும்உடையுமேநுகர்ந்தும்
பொருள்வவ்வுவாருமுளர்; ஆயினும் ஆர்வமோங்கல்குவா
ர்க்கு இன்னல்புரிவாரை எங்கும் கண்டிலோமென்றும்
முற்காலத்தில் விரோசனன்மகன்பலிசக்கிரவர்த்திமூவுல
குங்கைக்கொண்டு இருமாந்திருக்கையில் இந்திரன் அரசி
ழந்துயரத்தினால் திருமாலிடம்சென்றுசரண்புக்குத்தன
க்குற்றதன்மையை நிகழ்த்த அவ்வரி அருள்புரிந்துகாசிப
முனிவர்பத்தினி அதிதிதேவிவயிற்றில்பிறந்துகுறள்மாணி
யாய்ப்படிவங்கொண்டு மாவலியின்வேள்விச்சாலையுள்
மூவடிநிலம் வேண்ட அவன் திருமால் என்று அறியாம



ல்கொடுக்கஇயன்று குண்டிகையின் நின்றும் நீர்த்தா
ரைவார்க்க அவற்கு ஆசிரியனாகியவெள்ளி தடுத்தும் கே
ளாமல் தானஞ்செய்ய அவ்வெள்ளி சிறிய உருவங்கொ
ண்டு குண்டிகை நீர்த்தாரையை அடைக்கக், குறள்
பிரமசாரி கண்டுதரும்பால் ஒளிறவெள்ளியின்கண் ஊறு
பட்டது. அதுகணிசியாதுமாவலி மூவடிவழங்கினன்.
உடனேநெடுமால் முடி அண்டங்கீண்டுமேற்செல்லவும், அ
டிபாதலத்தில் அழுந்தவும், வளர்ந்து ஓரடியால்மண்ணை
யும் ஓரடியால்விண்ணையும் அளந்துமற்றோரடிக்கு இடம்
இன்றாகஅம்மாவலியின்வேண்டுகோளின்படி அவன்தலை
யிலேயே அடிவைத்துப் பாதலத்தில் அழுத்தினான். பலி
சக்கிரவர்த்தி தேவர்களை அடக்கினான் ஆதலின் அவன்
உபகாரியாயிருந்தும்தேவர்களுக்காக அவனைப்பாதலத்தில்
அழுத்தினான் திருமால். மற்றோர்காலத்தில் ஜமதக்கினியக
வான் குமாரராகிய பரசுராமன் க்ஷத்திரியவம்சங்களைக்
கருவறுத்துமண்முழுதும் தன்அகப்படுத்துவேள்விசெய்
து காசிபமுனிவருக்குப்பூமிமுற்றும்வழங்கினான். உடனே
காசிபமுனிவர் எனக்குத்தானஞ்செய்தபூமியில் தாதாவா
யநீஇருக்கலாகாதென்று துரத்தப், பரசுராமன்கடலில்த
ன்குடாரத்தைவீசக் கடல்விலகிய இடமானமகேந்திரவ
ரைச்சாரலில் எய்தினார். பரசுராமன் சினமிகுந்தவனாத
லின்காசிபமுனிவர் உலகின்நன்மைக்காக உபகாரியைத்து
ரத்தினார். அவ்வாறின்றி அறமூர்த்தியாய் அருட்கடலாய்ஆ
றியமனத்தனாய் அமரர்பணிதலைமேல்கொண்டு ஒழுகுபவ
னை அரிச்சந்திரனிடம்இவ்வாறு அருந்துயர் இழைத்தல்
மிக்க அதிசயம். அவ்விசுவாமித்திரமுனிவர் அரசனாயிருக்
கையில் வேட்டைக்குவந்து இளைப்புஅடைந்தகாலத்தில்
உபசரித்த வசிட்டமுனிவரைக்காமதேனு கொடாமைக்கா
கஎதிர்த்துப்போர்செய்தார் - இப்பொழுதோ இவ்வரிச்ச
ந்திரன்செய்தஉதவியைமறந்து அவனுக்கேதீங்கு இயற்றுகி
ன்றனர். ஆதலின்உபகாரிக்குஅபகாரம்செய்வதேஅவர்இய

ப்பு என்றும் இம்மன்னவன் வேதாளத்தின்பிடியுண்டவன்போல் அம்முனிவர் ஆணைக்கு உட்பட்டு நீதியின்றி உழல்கிறான். தானம் என்பது தாதாவின் மகிழ்ச்சியால் கொடுப்பது. அஃதின்றிக் கைத்தொன்றுமிலனாய்க் கானம்செல்லும்போது எவ்வாறு கொடுவான்? பொருள் கிடைப்பின் தாராதொழியான் எனவெண்ணாது பொருள்வவ்வப் போவாரால் வருத்தின் அதற்கு உடைந்து சுகத்துக்கே தக்க மெல்லியலாய்த் துயர் உறப்பொருந்தன்மையளாய்க் கற்பின் சிறந்தியாய் அன்புடையள் ஆன பத்தினியை அடிமையாய் அருளின்றி விற்கத் துணிந்தனனே இவனுக்கு வேண்டும் பொருள் உதவி, விலைசெய்ய விடாமல் மன்னவனோடு மகிழ்ந்திருக்கச்செய்வாரை இந்நகரில் கண்டிலம் என்று இவ்வாறு அந்நகரில் வதியுமாக்கள் ஒருவர்க்கொருவர் சொல்லி இனி இங்கிருந்து இத்துயர் காண்பதினும் ஏகுவதே நலமென்று நெட்டுயிர்ப்பெறிந்து கண்ணீர் ஒழுகக் கலங்கி நின்று இச்சாணல் ஆற்றாராய் அவரவர் தத்தம் அகம்புகுந்தனர். அக்காசிநகரத்தில் உள்ள நான்கு வருணத்தவரும் பொருள் தரத்திறமில்லாராய் “யானையைப் படுகுழியேற்ற யானையே வல்லதாகுதல்போல் அரசர்க்கு வரும் இடர் அரசராலேயே நீக்கத்தக்கது நம்மாற்றலுக்கு இயலாதே” என்று துக்கித்து இரங்கினார்கள். இவ்வளவில் விசுவாமித்திர முனிவர் காசிநகரத்துக்கு வந்து அரிச்சந்திரனுக்கு வேண்டும் மிக்கபொருள் கொடுப்பார் ஒருவரும் இன்மையை நினைத்துக் கலிபுருஷனை அழைத்து “கலியே! காசிநகரத்தில் பஞ்சாங்கம் உரைக்கும் பார்ப்பன வடிவங்கொண்டு காலகௌசிகனென்ப்பெயர் பூண்டு என்கட்டளைப்படி அவன் மனைவியை விலைக்கொண்டு மிகவருத்திச் சத்தியம் தவறச்செய்” என்று ஆணைசெய்து அகன்று சென்றனர். பின்பு அவ்வண்ணமே கலிபுருஷன் விருத்த வேதியனாய்ப் பார்க்கவும் இன்னாப்படிவமுடையனாய் அக்குளில் பஞ்சாங்கம் இடுக்கிக் காயும் கறியும் கீரையும் அரிசியும் துணியில் இறுக்கிக்கட்டிச் சிரத்தி



ல் தாங்கித் தெருவீதிதோறும் நுழைந்து நுழைந்து மெல்லெனநடந்து நாற்புறமும் பார்த்துக்கொண்டு கோமறுகில் செல்லாநின்று அரிச்சந்திரனையும் சந்திரமதியையும் புத்திரனையும் கண்ணுற்று அரிச்சந்திரனை நோக்கி நீயார்? உன்வரலாறு என்ன? இப்பெண்யார்? இக்குழவியாருடையது? எனவினவி, அவன் நிகழ்ந்தவெல்லாமுரைக்கக் கேட்டு, மன்னவனை நோக்கி ஓ வேந்தே! உனக்குவேண்டும் பொருளின் அளவு கூறு; வாய்மைதவறாதாய்! நரபதித்திலகனே! மானதனமுடையோனே! நின்மனைக்கிழத்தியை எனக்கடியளாக அறவிலைப்படுத்தின் அப்பொருள் முற்றும் தருகிற்பேன் அவளைச் சேட்டெழுத்துக்கையொத்து இட்டு என்னுடன் அனுப்பிவிடு என்று உரைக்க, ஓம் என்று அமைந்து அவ்வண்ணமே புரிந்தனன்.

---

## கஎ-ஆவது அத்தியாயம்.

### காலகௌசிகன் சந்திரமதியை விலைக்கு வாங்கிச்செல்லுதல்.

காலகௌசிகனாமனான பார்ப்பனனும் உடனே சந்திரமதியை அழைத்துத் தன் சிரத்தில் வைத்திருந்த தண்டுலபாரத்தை அவள் தலையில் வைத்து முன் நடந்து செல்லத் தொடங்கினன். அக்கற்புக்கரசியும் மருங்கில் மைந்தனைச் சுமந்து, தலையிற் சுமை கண்டத்தை இறுக்க, வருந்தி, சோர்ந்து அவ்மந்த அடிபெயர்க்கலாற்றாளாய் மெல்லமெல்ல அவனைப்பின்செல்லலுற்றனள்; அதுகண்ட நகரமாக்கள் ஆ! ஆ! என அரற்றிச் சத்தியசந்தனான சக்கிரவர்த்தியின் மனைவியை இவ்வன்கண்ணனாகிய பார்ப்பான் எவ்வண்ணங்கொண்டான் என்று கலங்கினார்கள்; ஆங்குள்ள பிரமசாரிகள் சிலர் பூட்டிகளால் அம்மறையவனை எற்றினர்; சிலர் கற்கொண்டு எறிந்தனர்; சிலர் தூசி அள்ளி வீசினர்; சிலர் கையிலுள்ள கோலைப்பறித்து இழுத்தனர்; சிலர் குடுமிபற்றி ஈர்த்து வீழ்த்தின

ர். சிலர் தெழித்தனர். சிலர் பஞ்சாங்கத்தைப் பிடுங்கிக் கிழித்தனர். இவ்வாறு கவேதியனை மிக வருத்தக் கண்ட சந்திரமதி அவர்கள் பாதபங்கயம் பணிந்து வேதமோதும் பிரமசாரிகாள்! பசியால் தளர்வெய்தி யேகும் விருத்தவேதியனை வருத்துதல் முறையோ? என்னிடத்தில் கருணைவைத்தொன்றும் துயருறுத்தாது வேதியனை விடுமின் என்று இரந்து வேண்ட அவரவர் மீண்டு தத்தமிடம் சென்றனர். வேதியனும் மெல்லெழுந்து நெகிழ்ந்த உடையை இறுகவுடுத்துத் தன்னருகில் மகனோடு நிற்கும் பதிவிரதையை நோக்கி மதியற்றவளே! சிறுவர்களை ஏன் அனுப்பிவிட்டாய்? யான் அரசனிடம் அறிவித்து அவர்களைப் பிடித்துக் கட்டி ஒறுக்கச் செய்வல். அன்றி யானே எழுந்து தாத்தடித்துக் கிழித்தாள்களைப் பேர்த்துவிடுவேன். இஃதொன்றும் செய்யவிடலாது அனுப்பிவிட்டாய். உன் வஞ்சனை அறிவேன். நீயே சிறார்கள் அல்லல் விளைத்தனர். யான் நன்கு அறிவேன். வீடுபோய்ச் சேர்ந்தவுடன் உனக்குத் தக்க புத்தி சொல்லுகிறேன் காண் என்று சினந்து சந்திரமதியையும் தெழித்து அவள் மகனையும் வெருட்டி விரைந்து செல்ல, அக்கற்புக்கரசியும் அவ்வேதியன் பின்னர் கண்ணீர் ஆறாகக் கலுழ்ந்து செல்லாநிற்கக் கண்ட நகரத்து மாதர், நொந்து "பாரத்தினால் வருந்திப் பயத்தினால் விதிர்விதிர்த்து அடிபெயர்க்கலாற்றாளாய் மெல்ல வழிக்கொண்டே மலரினும் மெல்லிய மேனி மெலிவெய்தி அலக்கணுற்றுத் தனிமையும் மென்மையான பாதங்கள் பாலன்றிக் குருதி சோரவும் குழல் சோரவும் பேய் பிடித்தவள் போல் செல்லுகின்றனளே இவள் முற்பவத்தில் என்ன பாவம் செய்தனளோ? அறிகிலேம்; விதிவலிது; பிரமதேவன் இவ்வளவு மென்மையான மேனியைப் படைத்து இவ்வளவு கொடிய துன்பத்தை எவ்வண்ணம் கற்பித்தனனோ? இக்கொடிய வேதியன் எவ்வளவு துயர் உறுத்துவானோ? என மாழ்கிக் கலுழ்ந்தனர். வேதியனும் விரைந்து சென்று வீட்டினைப் புக்கனன். சந்திரமதியும் மகனோடு துயராற்றவலியளாய் மெலிந்து மெல்லக் குறுகினள்.



## ௧௮-ஆவது அத்தியாயம்.

### நக்ஷத்திரகனுக்குப் பொருள்தரல்.

பின் கதிரவன் குலத்துதித்தோனாகிய காவலன் மனைவி மக்களைத் துறந்து மனம் கவன்று கதப்பின் ஊன்றியனாகி யுளைச்செயற்பாலதொன்றும் தோன்றாய் அலமந்து அனைவற்று நின்று கண்ணீர் ஆறாய்ப்பெருகச் சிந்தையுற்றிருக்க, நக்ஷத்திரகன் நோக்கி, அறநெறி தவறுவாய்மைக்கு வயப்பட்டு முனிவர்க்குப் பொருள் நல்க இல்லாளையும் இளையோனையும் விலைசெய்துவிட்டனை. மேலும் வேண்டுவதேதோ? நேர்ந்துவிட்டது இனிக் கவலைகொண்டு பயனென்னே? பிரதிக்ஞையை நிறைவேற்றப் பிராணனையும் பதராய்க் கருதும் உன்னை நிகர்ப்பவரும் உளரோ? எவ்வுலகும் ஒழுக்கத்தால் வென்றனை. இனிக் கழிவிரக்கம் வேண்டாம்; கவலேல்; எனத் தேற்றினன். அண்ணலும் அறிந்து ஆறி நெட்டுயிர்ப்பெறிந்து எல்லாம் தேவதேவன் திருவிளையாட்டென்று தேறி நக்ஷத்திரகனைப் போற்றிப் பணிந்து கௌசிகமுனிவர்க்கு இறுக்கவேண்டும் வெறுக்கை முற்றும் கொள்கவென அளித்தனன்; நக்ஷத்திரகனும் அகமகிழ்ச்சியோடு பெற்றுப் பின்னும் அரசனை நோக்கி வள்ளால்! நீ தந்த வெறுக்கை முற்றும் நின்னேவல் கொண்டு இடர் உழன்று பெற்றேனன்று. இதுகாறும் பின்தொடர்ந்தனை அது உண்டிக்கு அமைவதாயிற்று. இன்னும் முனிவர்க்குள்ளது சேரவேயில்லை. வேறாவிர கேதுமும் இயற்றி அவ்வக்குத்தரவேண்டும் தனம் தேடித்தருக. இன்னும் தவணையும் சிறிதே உள்ளது. இதற்குள் அதைத்தந்து உன் உண்மையை நிலைபெறுத்து. என அறைய, அது இருசெவியினும் எஃகுருக்கி ஊற்றினாற்போல் நுழைந்து இறைமகன் உடலம் உருக்கத் தளர்ந்து ஊக்கம் அழிந்து, அறவாழியந்தணனே! அனைத்துலகும் அளிப்பவனே! ஆபத்சகாயனே! அநந்தனே! இதுவும் உனக்கோர் விளையாட்டோ? மெய்ஞ்ஞானமூர்த்தியே! என் அல்லல் ஒழியாயோ! எனப் பகவானை நினைந்து தயங்குப, அந்நக்ஷத்திரகனை நோக்கி, அந்தணர் அமைந்த அ

ருமறையோதி அறம்தெளிந்தோய்! நீயும் அடாதது அறைதியோ? இஃதென்ன புதுமை? கண்ணெதிரில் கண்டதை மறைக்கிறாயே? நேரே அசத்தியம் பேசுகிறாயே? உனது உணவுக்காக திரவியம் கொடுக்க முனிவர் ஆணையுண்டோ? கொஞ்சமும் கிருபையின்றிக் கூறுகின்றனை. உன் கையில் தந்த பொருளை என் கையில் தானே கொடு; உனக்கும் சிறிது உதவுகிறேன் கொள்; அன்றி நகரத்துள்ள நான்மறையோரிடம் சென்று விண்ணப்பஞ்செய்து அவர் ஆணைப்படி நடக்கிறேன்; என்று அடிபணிந்து கூற! நக்ஷத்திரகன் சினந்து தீயெழ விழித்து, அரசப்பதரே! கேள்; உன் அறிவு என்ன அறிவு? என ஆகாரத்துக்கு ஒன்றும் கொடாமல் வஞ்சித்துச் செல்ல நினைக்கிறாயோ? விசுவாமித்திர முனிவர் சீஷியன் நான்; விடுவேனோ? மதிகேடனே! நினைத்துப்பார்; முனிவர் எனக்கு உண்டி உதவி உபசரிக்கப் புகன்றிலரோ? பொய்யா விரதனெனப் பெயர் பூண்டு, பொய் உரைப்பதே தொழிலாகக் கொண்டனை; உன்னோடு கூட நெடுந்தூரம் நடந்து ஊர்களையும் பதிகளையும் சேரிகளையும் கடந்து முள்ளும் பரலும் நிரம்பிய அதரில் அடிகள் கொப்புளித்துக் கிழிந்து குருதி சோரவும் வெயிலில் தலை வெடிக்கவும் படாத இடர் எல்லாம் பட்டு ஆகாரமின்றித் தண்ணீரும் காற்றுமே அயின்று பிணியுண்டு உடல் இளைத்துப் புலிகளும் கரடிகளும் சிங்கங்களும் அரவுகளும் சரிக்கும் ஆரணியத்தில் அகம் நடுங்க மெய் நடுங்க வலி ஒடுங்கிக் குற்றுயிராய் உறக்கமின்றி உன்னையும் உன் மனைவி மக்களையும் காக்க மந்திரம் உச்சரித்து உங்களைக் கண்ணிமையில் வைத்துக் காத்து வேதாப்பியாசமும் கலைபயிலலும் இழந்தேனை வஞ்சித்தேகவோ இம்மாற்றம் மொழிந்தனை? ஆ! உன் சத்தியம் நன்றுநன்று; முனிவர் மாணாக்கர் அனைவரும் சுகமே முப்பொழுதும் உண்டு வேத வேதாங்கங்கள் கற்றுக் களிப்போடு அமர்ந்திருக்க எனக்கு நேர்ந்த இடுக்கணென்ன? நினைத்துப்பார். தினங்களெண்ணு ஒவ்வொரு தினத்துக்கும் திருப்தியாக உன்னம்



கொடுத்தால் எவ்வளவு செல்லும்; என்றாவது ஆலோசித்து அறிந்துகொள்; அஃது இன்றி என் கையில் வந்த திரவியத்தை உன் வசம் கொடுத்துவிட்டு ஊரில் அறிவு மயங்கிக் கிடக்கும் கிழவர்களிடத்தில் சென்று அவ்வளவு இவ்வளவு என்று விவாதமிட்டுத் தீர்த்துக்கொள்ளவேண்டிய சண்டை வராம் என்ன? கையில் கிட்டிய புனலையொழித்து முகில் பின்றும் துளி பார்த்திருப்பதோ மதி? நன்றுநன்று. யான் எனக்குச் சேரவேண்டும் பொருளெடுத்துக்கொண்ட பின்னர்தான் முனிவர்க்குப் பொருணல்குவேன்; முனிவரும் தனியே என்னைக் கூவி என் செவியில் மறையாய் ஓதியதும் இதுதான். இவ்வாசை பற்றியன்றோ உன்னுடன் எங்கும் உழன்றேன் என்று சினவிக் கடுமொழி பகர்ந்து இதோ முனிவர்பாற் சென்றும் பொருள் நல்கவில்லை; என் மெய்வருத்தக் கூலியொன்றே வலிந்து வவ்வினேன். என மொழிந்து உன்னை என் செய்கிறேன் காண்; என்று கடுநடையாகச் செல்லுற அரசன் தொடர்ந்து தொழுது மறுத்து இருத்தி, மெய்ஞ்ஞானவேதியர் மதலையே! முற்றுமுணர்ந்த முனிவர் மாணாக்கனே! அருள் சிறிதும் அறியாயோ? உன் மனம் எத்தாலியன்றதோ? அந்தணர் அன்னலான முனிவர்க்கே என்மீதில் கருணையின்றாயின் உனக்கெவ்வாறு கருணை வரும்? என் விதியின் கொடுமையே அன்றி மற்றன்று. என உள்ளம் அழிந்து முற்பவத்திற் செய்த வினை இன்னவண்ணம் மூண்டது. இனி நினை வெறுத்து என் பயன்? என்று தன்னைப் பலவண்ணம் வெறுத்துக்கொண்டு ஆயர்பாந்தவ! அசரணிய சரணிய எங்கும் உள்ளாய்! எல்லாம் உணர்ந்தோய்! இறைவா! அடியேனை அறியாயோ? இடர்க்கடற்கரை ஏற்றுவாயோ? எனச் சர்வேச்வரனை அடைக்கலம் புகுந்து, எவர்பால் செல்வேன்? எங்ஙனம் நாடுகேன்? எவ்வாற்றுணாட்டுவேன்? மனைவியையும் மகனையும் இழந்து மயங்குதற்கு என்ன மாபாவம் செய்தேனோ? முன் சனனத்தில் பூரணமான அறுசுவையுண்டி உண்ணும் அந்தணனைக் கைப்பற்றி ஈர்த்து உன்

னை ஓட்டாமல் ஓட்டியும் மனைவியையும் மக்களையும் மனையை
யும் போக்குமனமறுக்கும் செய்திருந்தால் அன்றி இக்
கொடுந்துயரம் அகலாதோ என மொழியாநின்று முனி
வனைப்பணிந்து இன்வயிற்றந்தபொருள் என்னிடம்கா.
உனக்குக்கொடுக்கவேண்டும் திரவியம்முற்றும்கொடுத்து
விடுகிறேன் என்றுஇரந்துகேட்கநக்ஷத்திரகன்சினவிச்செ
க்கண் திறவுமுவிழித்து, என்னைமதக்கேடனென்று வசைவி
றோயோ? என்னைப்பொருள் உன்னைக்கொடுத்துமகாராச!
விசுயீபவ; எனப்போற்றி, ஆசி கூறி "அருள்செய்தனனைக்
குடனையகன்று" என்று எனைசாடுவம் ஓர்சாரணஞ்செந்
நிமுகங்களுக்கு அப்பல்லைத்திறந்து இனிவாய்ஏயற்றி, நின்மு
கம் கோகிச்சமயம் பார்த்து, முகமன் இயம்பி; இரக்க
வேண்டுமோ! கையில்வாய்த்தகுறையைவிட்டுக்குன்றுதோ
றும்இரல் இருக்கும் இடம் தேடப்புகுவாருமுளரோ? தி
ராகாரியத்தில்கண்ணவனுக்குயிருக்குமன்றோ? காட்டுப்பூ
னைகவ்விய எலி மீளுமாயின் என்னைப்பொருளும் உனக்
குவரும். இப்பொருளில் ஆசைவையாதே.என்கறுக்கவும்
சிவக்கவும்விழித்துப்பார்க்கிறாய் தப்பித்து ஓடவழிதேடுகி
றாயோ? அன்றிஎன்னைப்பொருள்களாகீனைக்கிறாயோ? எ
ன்பிராணனையாவது விடுவேன் பொருள் கொடேன் நீன
சரத்தைச்சேர்த்துப்பொருள் வவ்வுவையாயின் கொள்ள
லாமேயன்றி என்பிராணனோடிருக்கையிற்பிறிதும் வஞ்சி
க்கமுடியாது. அதுசெய்யத்துணிவாயில் தாமதமின்றிக்
கடுகச்செய். எனமுனிமாணக்கன் மொழியக்கேட்டு ம
னக்கவன்று தலைகவிழ்ந்து கண்ணீர் சோரத்தியங்கி
நின்றனன்.



## ௧௩ - ஆவது. அத்தியாயம்.

நக்ஷத்திரகன். அரிச்சந்திரன் கொடுத்ததை
த்தானைவைத்துக்கொண்டு மீண்டும் முனிவர்பொ
ருள்கொடுக்கநிர்ப்பந்தித்தல்.

இம்முனிவர்க்கு வெறுக்கைகொடுப்பதில் எனக்கு
என் இவ்வளவு அவிவேகம்? மனைவியையும்மகனையும்விலை
செய்தபொழுதே நக்ஷத்திரகனுக்கும் திரவியங்கொ
டுத்திருந்தால் உத்தமமாயிருக்குமே ? அன்றியும்பானே
சேரில்எடுத்துச்சென்றுமுனிவர்கையில்கொடுத்திருந்தால்
இரணந்தீர்ந்திருக்குமே? ஒருவகையும் தோன்றாமல் மூட
னாய்மோசம் போனேனே? இனிஎவ்வகையில் விசுவாமித்
திரமுனிவர்க்கு த்திரவியம் கொடுப்பேன். வருவாய்க்குவ
கையொன்றும்காணேனே என்று பச்சாத்தாபப்பட்டுத்
தலைகவிழ்ந்து இருக்கும் இராசனைநக்ஷத்திரகன்நோக்கிப்
பயனற்றவனே! பதரே! அதம; உன்னை இதுகாறும் பின்
தொடர்ந்து என்னபயன்பெற்றேன்? காட்டில் எரிக்கும்
நிலாவும் அக்கினிவனைக்கண்டு தொழுகையும் போலாயி
ற்றே? ஏன்ஒன்றும் உரையாமல் மரம்போல்நிற்கின்றனை
தனம் தரக்கதியில்லை; சத்தியவாதியல்ல; என்றுசொல்.
இல்லாவிடின், எழுந்திரு; என்திரவியமாவதுகொடு; இர
ண்டில் ஒன்று விரைந்துசெய்; இனிநான் இக்குதாமதிக்
கவன்றது என் இளைப்புத்தீர்க்க இல்லம்செல்லுகிறேன்
ஊனுமில்லை உடையுமில்லை உறக்கமுமில்லை ஜபமும் தப
மும் ஓமமும் அத்தியயனமும் உன்னால் நாசமாயின
" மறப்பினுமோத்துக்கொளலாகும் பார்ப்பான்பிறப்பொ
ழுக்கங்குன்றக்கெடும்" ஆதலின் ஒழுக்கம் கெட்டுப் பதித
னானேன். எல்லாவின்னலும்உன்னால்நண்ணின. இனிஎவ்
வாறு உய்வேன் என்று இகழ்ந்து கூற - மன்னவன்முனி
மாணக்கனைப் போற்றி அருட்கடலே! அந்தணர்மணியே! சு
வதேசத்தைவிட்டுப் பரதேசமும் வனமும் திரிகையில்

அறுசுவையுண்டியும் அன்னத்தூவிபொதிந்த அமளியும்
அரும்பெறற்கொடிசேடியரும் பெருவிலையணிகளும் எவ்
வண்ணம் வாய்க்கும். நாம்போதும்கற்றுணர்ந்தபெரியோ
ர்க்கேடும்காடும் நல்நாவும்செல்வமும் இன்பமுந்துன்பும்
ஒப்பநினைவார்கள் அஃதின்றி என்குற்றமே கூறிக்காலம்
கழிக்கின்றீர். நீர் துணைக்கடல், நான் குற்றக்கடல். உம்முடை
யருளைப்போல் என்குற்றம் அளவிடலரிதே இனிக்குறை
வாய்நேர்ந்து வருந்தவேண்டாம். கருணாநிதியே! இதுகா
றும் செய்ததவறுகளைப்பொறுத்தருள்க. நீவிர் நம் மனைக்
குச்சென்று சுகமேயிருக்கலாம். காலத்தில் உண்டு உறங்
கிப்பிறகு வேதாத்தியயனமுஞ்செய்து ஜபதபஹோமங்க
ளும்செய்யலாம் ஏதுமின். ஆயினும் அடியேன் ஒருவிண்ண
பம்செய்வதுண்டு; கேட்டருளுக; மனைவியையும்மகனையு
ம்விலைசெய்தபொருளோறும்பாலதாயிற்று; விசுவாமித்திர
முனிவர்பொருளுக்குவகையொன்றுமில்லை. என்செய்வது
குருவே! ஒன்றுந்தோன்றவில்லையே? என்மொழிக்குமன
னம்மறுமொழிச்சொல்லத்தம்மனைவியும்மகனும்போய்மான
மும்கெட்டு இவ்வுடலிருந்து ஆவதுமென்? என்உட
ல்துறப்பதே இன்பம்; ஆயினும் இருவினையிரணம் தீர்
க்காது இறப்பது அறமன்றே. என அம்மந்தாவினைத்தவினை
க்கதிர்வகைதுணிந்து, முனிமாணாக்க! ஆவர்வந்தவர்களில்
யாரொருவனேனும் என்னையார்க்காகிலும்விலைப்படு
த்திப்பொருள்கொண்டேகுக; எனப்பணிவுடன் அடிப
ணிந்து பகர்ந்தனன்.

## உ0 - ஆவது அத்தியாயம்.

### நக்ஷத்திரகன் அரிச்சந்திரனை விலைகூறல்.

பின்னர் பார்ப்பனச்சிறுக்கனும் "சனப்பன்வீட்டிற்
கோழி தானேதலைப்பட்டதுபோல தன்வாக்கினாலேயே
சிக்கிக்கொண்டான்" என்றுநினைந்து உள்ளத்தில் உவகை



கொண்டு, அரசனைநோக்கி, உன் இஷ்டப்படி எல்லாம்செ
ய்யப்பிணைப்பட்டேனோ? என்றுஉரைக்கப், பின்னும்மன்
னவன் அடிவீழ்ந்துவேண்ட, மனம் இல்லான்போல்பாவ
த்து உள்ளத்தின் உவகையோடு ஓம் என ஒருப்பட்டு உட
னே எழுந்து அரசன்கையைப்பற்றிப்பஞ்சாங்கச் சவடி
யின்கயிற்றால் அரிச்சந்திரன்அகங்கையிரண்டையும்அணை
த்துக்கட்டி அரசர்மறுகில் அழைத்துக்கொண்டு செல்லா
நின்று அந்தணர் அரசர் வணிகர் முதலிய அனைவரையும்
அழைத்து "இவன் அயோத்திக்கு அதிபதி அருக்கன் குல
த்தில் உதித்தவன் அறநிலைதிறம்பாதோன் அரிச்சந்திர
நாமதேயன் அருந்தவர் அண்ணலாகிய விசுவாமித்திர
முனிவர்க்கு அரசாட்சிமுதலிய அனைத்தும் அர்ப்பணம்
செய்து அவர் அடைக்கலம்வைத்த பொருளைத்தர ஆற்றலில்
லானாய் ஆரணியம்தருவி அலக்கண் எய்தி ஈண்டுற்றனி
இல்லாளையும் இளையோனையும் விலைசெய்து பெற்றபொ
ருளை எனது ஊனுக்கு நல்கினன். உயர்ந்தமலைபோன்ற
கைம்மலைமேல்நெடியானொருவன் இவர்ந்து நின்று மணி
எறியும் உயர்ச்சிஅளவு நிரப்பித்தரும் பொருள்குவியல்
கௌசிகமுனிவர்க்கு நல்கவேண்டும் அதற்காக இவனைவி
லைசெய்கிறேன் இம்மன்னவன் உலகெல்லாம்ஒருகுடைக்
கீழ் ஆண்டவன். மன்னுயிர் அனைத்தும்தன்னுயிர் எனஅன்
போடுஓம்புதல் செய்தவன்; கலைக்கடல் கரைகண்டகரு
ணைக்கடல்; வேள்விகள் அளவறவேட்டு மாதவர்க்கும்ம
றையவர்க்கும்மகாதானம்வழங்கினோன். கௌசிகமுனிவர்
அருளால்சரீரத்தோடுசுவர்க்கமடைந்ததிரிசங்குமகாராச
ன்மைந்தன். வாய்மைதிறம்பாவலிமையுடையோன். நிகரி
ல்லாதநின்மலன் இவனைவிலைகொண்டுபொருள்நல்குமினோ.
செல்வம்மிக்கோரே! எனவிலைகூவ, அதுகேட்டநகரவாசிக
ள்எல்லாம் மிகவும்மனம்வருந்திமன்னவர்மன்னவனுக்கு
ம்துன்பத்துள்துன்பம் தொடர்ந்ததே. ஜகதீச்வரனுக்கு அ
ருளில்லையே? இப்பார்ப்பனன்மனம் வைரத்தினும் வன்

மையுள்ளதேஜயமில்லை கொடும்பாவி; இவன் எவ்வண்ணம் அந்தணர்குலத்தில் தோன்றினனோ? அறியேம் எனமொழிந்து இத்துயரைக் கண்ணுறல் ஆற்றாராய் அவர் அவர் தத்தம் அகம்சென்றனர்.

இவ்வமயத்தில் கௌசிகமுனிவனும் காந்தலைந்து இயமனை அழைத்து நீசண்டாளருபியாய் வீரபாகுவென்னும்பெயரினனாய் மணிகர்ணிகைக்கரையில் மயானத்தைக் காத்தல்வல்லனாய் மன்னி, மன்னவனைவிலைகொண்டு அடிமையாக்கிப்புலைத்தொழில் புரிவித்துப்புன்கண் எய்துவித்துப் பொய்புகலச்செய் என உரைத்துச்சென்றனன். நமனும் முனிவன்சொன்னவண்ணமே இயைந்து பயங்கரமான தோற்றமும் சிவந்தகண்களும் செம்புபோன்றபங்கியும் தடித்தஉடலும் வெடித்தகுரலும் உடையனாய்ச் சுடுமொழியேகூறுவோனாய் மதுப்பருகிக் களிகொண்டவனாய்க் குஞ்சிசோர அடிக்கடித்தட்டித்தடுமாறி மெய்மறந்துதோலாடைதரித்து அரக்கன்போன்றவனாய் வள்வாளொருவலங்கைப்பிடித்து இடங்கையில் எழுத்தாணியூன்றி வீரவாகு என்னும்பேர்பூண்டு வேந்தர்வீதியினூடுபுகக், கண்டவர் வெருவிவிரைந்தோடினர். அப்புலையனும் மெல்ல மெல்ல மதுமயக்கத்தால் தட்டித்தடுமாறித்தள்ளித்துத் தெழித்துக்கொண்டே நக்ஷத்திரகனும் நரபாலனும் நடக்கும் வழியில் எதிர்வந்து நின்று, கொடுமனமுடைய நக்ஷத்திரகனை நோக்கி என்உரத்துக் கூவுகின்றனை? விலையாய்விற்குவார் இன்றி என்விளித்து விளம்புகின்றனை? மிகஉயர்ந்து பருத்து மகாபுருஷன்போல் நெடுங்கையனாகிய இவன்யாவன்? நீஎன்னால் கட்டியிருக்கின்றனை? மறையாமல் உண்மை உரை; என அறைய, முனிமாணாக்கன் சினந்து துரும்பைப்பிடியிட்டு, நீபுலையன்; யானோ வேதியன். உன்னோடுபேசல் எனக்கு இயலாதாதலின் நம்பேசாமல் வாய்புதைத்துச்செல். இராசசேவகர்கள் என்னோடு



பேசக்காணில் என்னையும் இழித்து உன்னையுநோக்கொள்வார்கள். ஆகலின் விலகிச்செல்என்றுமொழியக்கேட்டு வீரவாகு சினந்து நக்ஷத்திரகனை நோக்கி, நீநான் இனையபுன்சொல் இரும்மொழிகூறக்கேட்டேன்; என்திறல் அறியாய்போலும், என்னென்று உன்னினை? இந்நகரில் தீயொழுக்கமுடையோரைப் பிடித்துத்தண்டனைசெய்கையும் நல்லொழுக்கமுள்ளசான்றோரைக்காக்கையும் மேற்கொண்டு அறமும்மறமும் ஆராய்ந்து அறவோரைஅளித்து, மறவோரை மட்டின்றி ஒறுத்து நகரம்காப்பவன். யான் அல்லசண்டாளன். ஒன்றுபுகல்வன்கேள்: அந்தணனாய்ப் பிறந்த ஒருவன் அவ்வந்தணர்க்குரிய அறத்தொழிலும் அறம் திறம்பாது ஆற்றுவானாயின் அந்தணனும், யுத்தஞ்செய்கை அரசாளுகைமுதலிய அரசச்செய்கை பூணின் க்ஷத்திரியனும், ஆவணம்புகுந்து வாணிகம்இயற்றல் முதலிய வணிகர்வினைபுரியின் வைசியனும், மேழிபற்றிமண்ணையுழுது பண்படுத்திப்பைங்கூழ்போற்றல் முதலியவாம் உழுதொழில் முதலியசூத்திரத்தொழில் இயற்றின் சூத்திரனும், உயிர்க்கொலை முதலியசண்டாளத்தொழிலியம்செய்வதால் சண்டாளனும், ஆவான் அன்னவண்ணமே மற்றுமுள்ள நால்வரும் அவர்அவர் சாதிமுறை ஒழுக்கங்கள் கடந்து உயர்ப்புரியினும் இழியப்புரியினும் அவர்கள் கருமசண்டாளர்கள். புலையனாயினும் தன்குலத்தொழில் புரிந்து ஒழுகுவானாயின் அவனே உத்தமன். இன்னுங்கேள்: உயர்குலத்திற்பிறந்தும், பசுவைக்கொன்றவனும், சுராமுதலியவெறிஉண்டவனும் உலகைப்பழிப்பவனும் வேதத்தை வெறுத்தவனும் வேதநெறியைக்குலைப்பவனும் மறைவான செய்தியை வெளிப்படுத்தினவனும் குற்றத்தைச்சுட்டிச்சொல்வானும் கன்னிகைக்குப்பழிப்புப்பகர்வோனும் புறங்கூறுவோனும் சாதியொழுக்கம்தவறினவனும் இழிந்தோனுக்கேவல் புரிவோனும் இழிவானஅன்னம் அயலார்க்கு அளித்துத் தான் நல்லுணவுஉண்பானும் தெய்வத்துரோகனும்

செய்பவனும், குருவைநிந்திப்பவனும் அன்புள்ள அமலன்
அடியவரை அவமதிப்பவனும் பிறர்சோர்வுபார்த்துத்திரிப
வனும் ஒற்றுமையையொழிப்பவனும் உள்ளம் பேதம்செய்
பவனும் கள்ளுண்டோனும் நித்தியநைமித்திககருமம் அ
றந்தோனும் வேதியரைநிந்திப்பவனும் வேதியர்பொருள்
வவ்வுவானும் தேவாலயப்பொருளையபகரிப்பவனும் அற
த்துக்குரிய தனத்தை அபகரிப்பவனும் பிறர்க்குக்கேடு
சூழ்பவனும் நன்றிமறந்தவனும் மூர்க்ககுணமுடையோனு
ம் துர்ச்சினமுடையோனும் மாறுப்பகைகொண்டு மறைந்
தொழுகுவோனும் மண்ணாசையாலும் பெண்ணாசையாலும்
பொருள் அவாவாலும் பிறரைக்கொல்லநினைப்பவனும் மு
ன்வாக்குத்தத்தஞ்செய்து பின்இல்லை என்று மோசஞ்செ
ய்பவனும், அறவோர் அமைத்த அரசமரத்தையும் முனிவர்
சூழலில் முருக்கமரத்தையும் துளசிவனத்தையும் அழிப்ப
வனும் வேள்வியை அழிப்பவனும் தெய்வவழிபாட்டை
அவமதிப்பவனும் தேவதாசனத்தைத்தடுப்பவனும் தெய்வ
மில்லை என்பவனும் தேவன் திருவிழாவைப்பழிப்பவனும்
வீடுகொளுத்தினவனும் விடம்கொடுத்துக்கொன்றவனும் ஆ
யுதம்கைப்பிடித்து வதைபுரிவதேதொழிலாயுடையோனும்
செட்டநெறியேயொழுகுபவனும் தம்மையாளும்தலைவனுக்குத்
துரோகம்நினைப்பவனும் மாயம்செய்பவனும்மகளிரைப்ப
ழிப்பவனும் மாறுமச்சரமுடையவனும் கருமத்தால் சண்
டாளர்கள்; நான்சாதிமுறையிற்கையால்கருமசண்டாளன்
அல்லன்; கருமசண்டாளனோடு சம்பாஷித்தால்பாவம்; சா
திசண்டாளனோடுசம்பாஷிப்பதில்பாவமொன்று மில்லை;
ஆதலின் என்னுடன் பேசலாம்; ஓபார்ப்பனச்சிறக்க; சம்
பிரமணதோற்றமுள்ள இவ்வுத்தமன்யாவன்? கையிற்க
யிறுகட்டிச்செல்கின்றான்; பகர்தியென வினவப் பூ
தேவபுத்திரன் "வீரவாகுபுலையனாயினும் புத்தியுள்ளோ
ன்" என்று தெளிந்து அரிச்சந்திரன் வரலாறும் இதனா
லும் சிறந்தவற்றையும் பொருளையும் கூறினன். உனக்கு



இவ்வளவு அருத்தம்கொடுக்க ஆற்றலுண்டாயின் புலைய
ரில் உத்தமனே! நீயும்கொள்ளலாம் ஐயுறல்வேண்டாம் வி
ரைவில் பிணைமென்று விலைபேசல் என்று வற்புறுத்திக்
கூற, அப்பெரும்புலையன் நக்ஷத்திரகனை நோக்கிமகிழ்ச்சி
யோடுமொழியலாயினான்; பூசுரபுத்திர! நீவேண்டுகோ
ருக்கு இரட்டியாகக்கொடுக்கிறேன். என்வசம் வேந்தனை
ஒப்பித்துவிடு என்றுகூறினன். அதனால் உலோகத்தையுரு
க்கியூற்றியதுபோல இருசெவியும் வெதுப்பெய்தமனம்ம
ருகி, மன்னவன் சிறிதுசினங்கொண்டு காத்திருக்கின்றவீர
வாகுவைவிளித்து, புலையா! நீ அறமுணர்ந்தோனாய் அறை
கின்றனை நான்சூரியகுலத்தில் பிறந்தக்ஷத்திரியன் என்
னை அடிமைகொள்வது உனக்கு அறமோ? உடுக்கத்துணி
யும் இல்லாமல் கோவணத்தோடிருக்கின்றாயே? போர்வை
யும் தோலானே? வீணவாஞ்சையை ஏன்வரிக்கின்றனை?
வந்தவழிசெல்; புல்லுணிக்கும் பெருந்தபுலையனே; மன
பானத்தினால் மெய்ம்மறந்துபேசுகின்றனைபோலும்; வில
கவிநாக்கேதரு; அஞ்சாக இல்லேல் என்றொறுத்துக்கூற,
வீரவாகு சினந்துதன்திறல் அறியமில்லாத இன்னவண்
ணம் இயம்பினை; குலமுறைப்படிகோசருமம் போர்த்துக்
கௌபீனத்தோடிருக்கை ஒழிவாகுமா? எனக்கு அடிய
ன் ஆதலையேல் என்வளமும்பெருக்கையும் நன்குணா
லை; நீவேண்டும் பொருட்கிருமடங்கு நல்குவல்; ஐயமி
ன்றிக்கண்ணாரக்காண். அடைக்கலம் வைத்தவெறுங்கைக்கி
றங்க ஆற்றலிலாய்! யான்வெறுங்கையன் நீயோசெல்வன்?
செல்வமுடையாயின் வழக்கு இன்னவன்னமை சாண்பேன்
புலையனுக்கு விலைசெய்யக்கூடாது என்றுபார்ப்பனச்சிறு
வனையஞ்சனைசெய்து ஒடைக்கொத்திருக்கின்றனை என்பதில்
ஐயமில்லை; இவனையேன் என்று ஏய்த்துச்செல்ல எண்ணு
கின்றனை, அதிக்கிரமம்செய்யாது உய்தி; ஈங்குறுமுக்கம்
தவறினோரை ஒறுப்பதும் நன்னெறி ஒழுகுவோரைப்பு
துசாப்பதும் என்னதொழில், இப்புரியில் ஆக்கினைகளும் என்

அச்சத்தால் செய்வதில்லை; பிரமனும் இக்குஅரிச்செய்கை இயற்றல் ஆகாது இங்கு உறையும் மனிதர் அனைவர்க்கும் சிக்ஷகனும் இரக்ஷகனும் நானே. பிராமணனுக்குத்தனம் தருகிறேன் என்று முன்வாக்குத்தந்து பின் இல்லை என்பவனே சண்டாளன் பிரமகத்திசெய்தவனும் அவனே ஆகிறான்; ஒருவனுக்கு ஆர உண்டி உதவுகிறேன் என்று உரைத்தப்பின் சொன்னவண்ணம் உதவாதவனும் ஆடையளிப்பதாக ஆசைமூட்டிப் பின்னில்லை என்பவனும் ஏதேனுமொன்று தருகிறேனென்று சொல்லிப்பின் இல்லையென்றுபிறகாலிக்கின்றவனும் நரகமடைவார்கள். நீ இவ்வந்தணக்குமரன் குருவுக்குயிக்கத்திரவியம் கொடுப்பதாகவாய் நேர்ந்து வகைசொல்லாமல் விழுவிடக்கருதுகின்றனை; என்சுவனை நேர்ப்பட்டும் எக்குதலியனுமோ? வஞ்சனை இயற்றிவழிக்கொள்வாயாயின் வருந்தியாவது நின்னை ஒறுக்க அறிந்துயென்னெம்முயற்சியேனும் இயற்றிக்கண்ணோட்டமின்றி ஒறுப்பல் என்று இன்னவண்ணம் பலவாக வீரவாதம்கூறும்வீரவாகுவைநக்ஷத்திரகன் பார்த்து நீ கூறியவெல்லாம் மெய்யே என உரைத்து, அரிச்சந்திரனை நோக்கி நீபுரியும் வஞ்சனை இந்நீசனும் அறிந்துரைத்தனன்; இல் வின் போதும்போதும் சத்தியத்திரமுற்றுங்காட்டாதொழி அப்புலையனும் மெய்யே உரைக்கின்றான் அவனினும் இழிந்தோனாதலின் பொய்யே மொழிகின்றனை; என் திரவியம்கொடுப்பாயோ அவனுக்குத் தொழிலைசெய்து உன்பொருள் பெறுக என முன் உரைத்தனை; புலையனன்றிக் குலவானோ கொளல் வேண்டும் என்று கூறியதன்றோ? முன்னொன்றுமொழிந்து பின்னொன்றுபிதற்றுகின்றது பொய்யன்றோ? நான் வேறு எவனையும் நாடிச்செல்லேன் இவனை இரட்டிப்பு நல்கநேர்ந்தவன். இவனுக்கேவிலைசெய்வேன் நீசனுக்கே நீ யடிமையாகவேண்டும் எனஅறிறல்காலம்; என்னோ பார்ப்பான், இறைவன் வலியிலானை" என்று என்னோல் உன்னால்நான்வெகுதுன்பமடைந்தேன்; இனி என்னுள்



பொறுக்கொணாது. கொடியில் என் உறைவிடம் எய்தல் வேண்டும், நீதடைசொல்லில் எனக்குச்சேதமுண்டாம் பிரமனாயினும் இந்திரனாயினும் இன்னும் எத்தேவனாயினும் என்வினைத்துக்கெதிர்நில்லார். நீ ஒருபொருட்டோ? எனவெருட்டி உரப்ப, வேந்தரேந்தல் விதியைவெறுத்து ஒன்றும்தோன்றாமல் அசைவறஅமைந்துநின்றுவிட்டனன்.

---

## ௨௨-ஆவது அத்தியாயம்.

### வீரவாகுஎன்னும் புலையன் அரிச்சந்திரனை விலைகொள்ளுதல்.

இதற்குள் புலையன் நக்ஷத்திரகனை நோக்கி மகிழ்ந்து புகழ்ந்து நீ சிறியோயாயினும் மதியிற்பெரியை; நீ சொன்னசொல்திறம்போல் மன்னவன் முகநோக்கி மயங்கித்தன்னுடன்; நீ அவாவினவெறுக்கை இன்னே ஈகுவல் இழிதொழிலாளன் இருந்தியலான் என்று எண்ணற்க. விலைகொடுப்பதில் விசாரமொன்றுமிலேன் நின் அவா அறுக்கொள்க, ஆயினும் உரைப்பது ஒன்று உளது; திரவியம்வாங்கித் திரும்பிப்பாராமல் நீ நீங்கினால் பின்யான் இசழ்தலவசென்? இன்னேனுக்குப் புத்திரனும் மனைவியும் மாதாவும் பிதாவும் சுற்றமும்கேளிரும் நிலையும் இல்லை; இயல்போ இன்னது என்றுவிளங்கவில்லை; ஊன்மலிபெருத்த ஊற்றம் கொண்ட உடலுடையான் ஏவியபணி இயற்ற இணங்கானாயின் தண்டிக்கநேருமே மீறிச்சென்றால் யானென்செய்கேன்? சிங்கவேறுபோன்றதிறலும் உலம்போல் திரண்டு உயர்ந்தநீண்டதோளும் மலைபோல்அகன்மார்பும் உடையனாய் மகாவீரனாய்த்தோற்றுகின்றனனே ...ன் எனக்குப்பணிந்து பணிபுரிவனோ? எளியானே ...செய்யற்குரியான். தொழும்பன் தோலாவென்றி உ...யின் இறைவன் ஏக்கற்று இழிதகவெய்துவான்;

மனோவாக்குக்காயங்களாலும் தலைவன் ஆணைகடவாதவ
னன்றே அடிமைக்குரியன் உண்டிமிகவுண்டு ஒருதொ
ழிலும் இயற்றலனாயின் செய்கைதெவன்? எவ்வண்ணம்
இவனை ஒறுக்கக்கூடும்; ஒருபணி உரைக்க, ஒல்லேனென்
று ஒன்றும்புரியலனாயின் ஏதுசெய்வல்? யான்வெருட்
டினும் உரப்பினும் தெழிக்கினும் புடைப்பினும் பசியால்
களைப்பினும் நீர்நசைசெற நாவறட்சியுறினும் என்னாணைக
டத்தல் செய்யாது அமைந்தொழுக நம்புதல் அறைந்த
பின் பொருள்கொண்டுசெல்க என்று கூறக் கேட்டபார்ப்
பனைப் புதல்வன் அரிச்சந்திரனை அழைத்து அரசர்மறுவில்
அனைவரும் அறிய அறையலுற்றனன்; அரிச்சந்திர! உ
ன்னிடத்தில் ஐயுறவு கொண்டு இவ்வாறுபகர்ந்தனனே
எழுந்திரு அன்னோனுக்கு அகம்களிய நம்பிக்கை எய்து
வித்து அவன் வாய்நேர்ந்தபொருளைவாங்கிவழங்கு; விரை
ந்தெழு; காலக்கழிவுசெய்யேல்; மதியிலோய்! என்று மன்
னவன்கரம் பற்றி இழுத்தனன், உடனேவேந்தன் எழுந்
துநான்மறையுணர் வேதியரும் மன்பதைபுரக்கும் மன்
னவரும் வணிகரும் சூத்திரரும் மற்றுமுள்ளவர் அனைவ
ரும் அறியப்புலையனைநோக்கி! ஓவீரவாகு "யான்சூரியன்
தொல்குலத்திற்றோன்றிய ஏந்தல் அவனிஅனைத்தும் ஆ
ணைசெல்லத்தனிக்கவிகைக்கீழ் ஆண்டவன்; விசுவாமித்தி
ரமகாமுனிவருக்கு இராச்சியம் முற்றும்வழங்கிவனம்
புகுந்தோன். அம்முனிவர்க்குயான்முன்வேள்விக்கு அளி
த்து என்னிடத்தில் அடைக்கலம் வைத்தபொருள் அவர்
க்கீயவகையிலேனாய் ஈண்டுதிரிந்துபொருள் ஈட்டி உதவ
எய்தினேன்; என்மனைவியையும் மகனையும் விற்றபொரு
ளைநக்ஷத்திரகன் தனக்கென்று எடுத்துக்கொண்டனன்
வேறுவிரகு இன்றி என்னைவிற்றுப்பொருள் கொள்ள
யம்பி, அவன்கயிற்றால் கட்டுண்டு நிற்கின்றேன்; எ
னது; எனக்குச்சத்தியமே விரதம், சரீரம் அழியினு
யம் திறம்பேன்; தாயும் தந்தையும் தெய்வமும்



ஸ்நானமும் தூய்மையும் அறமும் ஆசாரியனாப் பரம்பொரு
ளும் மனைவியும் மகவும் அழியாப்புகழும் கன்மமும் ந
ண்பும் நோன்பும் நிதியும் நிலமும் மகமும் ஞானமும்மு
த்தியும் மந்திரமும் மாண்பும்மானமும் மற்றும் முற்றும்
வாய்மையே; யான் வாய்மை வழுவி ஒழுகி உன்மனதுக்கு
வெறுப்பானசெயல் புரிவேனேல் பொய்யே புகலுவோ
ன்புகும் நரகிற்போகக்கடவேன்; மனமொழிமெய்களால்
நின்கட்டளை கடந்து ஒழுகுவனாயின் கள்ளைக்குடித்தக்க
ளியனும் கருமம் சிதைக்கும் கயவன்செலனும்கதி அ
டையக்கடவேன்; நின்குறிப்பறிந்து குறித்தபணிசெய்
திலேனாயின் கள்வர் எய்தும் இடும்பை எய்தக்கடவன் நீ
வியமொழிக்கு எதிர்மொழிவேனாயின் செய்நன்றிகொ
ன்றவனும் அயலார்செல்வம்கண்டு அழுக்கறுப்பானும் பி
றர்க்குத்துன்பம்நேர்ந்துழிமகிழ்பவனும் நல்கூர்ந்தவரை
யும் பிணியால் நலிந்தவரையும் குருபிகளையும் கூனையும்
குறளையும் முடவனையும் கண்டுநகைப்பவனும் நண்பா
யிருந்து வஞ்சிப்பவனும் அந்தணரையும் அறவோரையும்
அவமதிப்பவனும் நியாயசபைக்கண் ஓரம் சொல்பவனும்
கற்புடைமகளிர்க்குத்தாறு கூறுபவனும் அடைக்கலப் பொ
ருளை அபகரித்தவனும் குருவுக்கு வஞ்சனைசெய்பவனும் பா
கபேதம்செய்துண்பவனும் பரம் பொருள் இல்லை என்
பானும் படைக்கலமில்லாரைப் பகைவெல்பவனும் ஆறு
செல்வோரை அலைத்துப் பறித்துண்போனும் சாதியொழு
க்கமும் சாத்திரவிதியும் கடந்து ஒழுகுவோனும் அரசன்
ஆணையின் அகன்ற அறிவிலியும் அருத்தமே கருத்தாய்க்
கொண்டு அறம் மறப்பவனும் புண்ணியச்செயலில்பொறு
மைகொள்பவனும் ஆருயிர்ச்சினத்தனும் கொலைத்தொழிலிற்
குதூகலமுடையோனும் கணவனையும் காதலனையும் பே
துஞ்செய்துபிரிப்பவனும் உண்டவீட்டுக்கு உலப்பு உன்னு
வானும் பாவியும்படிறனும் அடையும் அளற்றில் அழுந்
தக்கடவேன்; என் வாய்மைக்குக் கட்டுவோர்களி; என்று

ளுறவுசொல்லவீரவாகுவும் மனந்தெளிந்து மக்களையும் பணிசெய்வோரையும் கூவி மனையினின்றும் திரவியம் கொணர ஏவினன். அவர்களும் விரைந்து சென்று நிதி கொணர்ந்து விரைந்துவந்து வீதியில்தமனியக்குன்றைக் குவியல் செய்து, நக்ஷத்திரகனைநோக்கி "நின் அவாவின் இரட்டி நிதிஇராசிதந்தேன்காண். மனதில் குறையுண்டோ? இல்லையாயின் மகிழ்ச்சியோடு கொண்டு மன்னவனைக்கொடு" எனஇயம்ப, நக்ஷத்திரகன்மலையினும்பெரிதாய்மலிந்தநிதிராசிகண்டு மனங்களித்து மன்னவனைக் கொடுத்து புலையர்தலைவா; வீரவாகு! புல்லியவாயினும் நீயே நூறாண்டுசுகமே இருக்கக்கடவை. அரசன் உன்அதீனம் திரவியம்என்அதீனம் என்று சொல்லி அரிச்சந்திரனைநோக்கி அரசரேறே! அறத்தின் வேலியே! உன்புகழ் என்றும் அழியாது விளங்கும். எப்பாவமும்உன்பேர்சொல்லத்தொலையும், எதுவும் புனிதமாகும்; சத்தியத்தைச்சலிப்பின்றிக்காத்தனை; வியன்மூவுலகும் வெற்றிகொண்டனை; நினக்குநிகர் நிருபருமுளரோ! எப்பொழுதும் இல்லை. என்னை உன்னுயிரினும்மனைவிமக்களினும் மிகஉதவிக்காத்தனை. வரையாதுகொடுக்கும் வள்ளலே! வாழிவாழியென ஆசிகூறிக்காளைபூண்டசகடுகளிலும் வேசரிகளினும்ஒட்டகங்களிலும் எருத்துப்பொதிகளினும் திரவியம்கொண்டு நக்ஷத்திரகன் திரும்பிச்சென்றனன்.

---

## உஉ-ஆவது அத்தியாயம்.

### அரிச்சந்திரன் புலையனுக்கு அடிமையாய் மயானங்காத்திருத்தல்.

பின்பு அரிச்சந்திரனும் மனக்கவலை நீக்கிப்புலையன் அருகில் கைகுவித்து வாய்புதைத்து, "எதுபணி இயம்புவான்" எனஎதிர்பார்த்திருந்தனன். வீரவாகுவும் வேந்தனைவிளித்துத், தலைசயின்றுண்டையும்மதுபாண்டத்தையும்



[illegible] தோளில் [illegible] இடத்தினன். அதைத் தூக்கிக்கொண்டு மயானம் [illegible] சிறிதும் அருவருப்பு இல்லாதும் மனமொழிமெய்களில் ஒற்றுமை உடையனாய் முகமலர்ச்சியோடு நின்றனன். அக்காட்டின்கண் யாவரும் [illegible] புகழ்ந்து, [illegible] இராச்சியம் [illegible] என்று [illegible] சென்றனர். அப்புலையனும் [illegible] சென்று இருந்தனன். தோலும் என்பும் இறைச்சியும் [illegible] உலாச்சுழல [illegible] [illegible]

[illegible]

[illegible] பலர் [illegible] [illegible] மடியும் இல்லாதோரும் [illegible] [illegible] [illegible]

[illegible]

... அரிச்சந்திரன் ... [illegible]

திருந்தான்.

[illegible]



[illegible]

... சாகினி - பிரமராக்ஷச - பாலகிரகம் - பேய் - பிசாசு - பூதம் - வேதாளம் - கூச்மாண்டம் முதலியவைகளின் ... [illegible]

[illegible]

னைக்குப்புலப்படும் விரைந்துசெல்லின்; கிலேசத்தொனர்மின்; என்று கட்டளை இட்டவுடனே அப்பையர்கள் அன்னவண்ணமே சல்லாலானகொண்டாட்டிக் கட்டில்போல் முக்கோணமாக உயர்த்திருக்கின்ற அம்மேடையில் உட்கார்ந்து அனைவரும் பூசனைகளக்கு மாப்பெருக்கேற்பட்ட மயானத்திலும் மன்னவன் காத்திருந்தனன் - பேய்சுட்டிய அச்சம்மருந்த இன்னும்காணலாம்.

---

## ௨௧ - ஆவது அத்தியாயம்.

### சந்திரமதி காலகௌசிகன் மனையில் பணிசெய்து வருந்துதல்.

இங்கு இவ்வண்ணமாக; காலகௌசிகன்பின்சென்ற சந்திரமதியும் அப்பார்ப்பனன் மனையில் எய்திமகனொடும் ஓரிடம் அமர்வுமுறைந்தனள். மகாராசன் மகளாய்ச் சக்கிரவர்த்தியின் மனைவியுமாயமைந்தின் மென்மையாக மேவியுடையளாய்க் குற்றேவற்காரியாய் உலகெல்லாம் தாயெனப் பணியப்பெற்றிருக்கும் இராசமகிஷியாய் மிகச்சுகமே உண்டு அச்சமின்றியிருந்த அதியரூபசுந்தரமதி மனைக்கவலையிருந்து கண்ணீர் பெருக்கசுழன்று, வருமதைத் தெரிந்துக்கொண்டு துயரமாகாது; முற்பவத்திற் செய்தகுமப்பயன்களாகவே இதுவும் நேரிட்டது என்று தேறி, தினமும் அக்கொடியகாலகௌசிகனும் அவன் மனைவியாய அவளினும் அருளில்லாதவ ளுமகிய பாதகியும் மிகத்துயர் உறுத்தப்பட்டனள். எவ்வண்ணமெனில் - வைகறைக்கு முன்னரெழுந்து பாத்திரங்களையெல்லாம் பேணிவைத்து முற்றத்தையும் பசுவின் தொழுவையும் சுத்தஞ்செய்து பாண்டங்களையெல்லாம் துலக்கி, பதினொருவர் சேவிக்கத் திண்ணையிற் கோலமிட்டுக் கிணற்றிற் நீர்கொண்டுவந்து கொணர்ந்து அவ்விடத்தைப் பெருக்கி மெழுகி பின்னரும் தண்ணீர்



ய்து அவ்வவ்விடங்களில் மாக்கோலம்செய்து பின்பு ஆற்றில் குளித்து ஆடைஉலர்ந்ததையுடுத்து வீட்டில் புகுந்து அடுப்பில் முதலிய அநேகவேலையுடன் அடுப்பெரியன் வஸ்திரமும் அவன் மனைவியின் சீலையும் நதியில் தோய்த்துகொண்டுவந்து உலர்த்தி மஞ்சனச்சாலையில் வெந்நீர் அமைத்து அவட்குஎண்ணெய் தேய்த்துக்கால்வருடிக்கைபிடித்துப்புளிஅட்டி மஞ்சட்பூசி மஞ்சனமாட்டி அவள்மக்களுக்குஅன்னம்அளித்து எல்லாப் பணியும் இயற்றி இல்லத்தில் அக்காலகௌசிகனும்மக்களும் மனைவியும் உண்டுகளித்தபின் புறங்கை உதவப்போன கம்கொண்டு மைந்தனுக்குஅன்னமிருந்தபாலும்தண்ணீருமே அருந்தி ஆஸ்ரமித்தஉடன் ஆவிற்கு நீர்கலந்துத் தொழுவித்தில் அனைத்துக்கட்டிப்புல்கொய்துவந்துமையுமிட்டுத் தேய்த்து ஒழிந்தபின் பார்ப்பினிமுக்கட்கும் படுக்கைபரப்பி அவள்கால்வருடிக்கைபிடித்துஉறங்கியபின் முன்தானையைத் தரையில்விரித்து மகனும்தானுமாய்ப்படுத் துச்சிந்தித்தயோர் அருந்துயரம் அகற்றுவர்தனள்.

இவ்வண்ணம் இயலுகையில் ஒர்தினம்லோகிதாசியன்பசியால் அழுது அன்னையின் ஆடைதானியைப்பற்றிச்சின்பக்காலகௌசிகன்கண்டு சினங்கொண்டுஅச்சிறுவன்இருசெவியும்பற்றிக்கிள்ளிக் கதுப்பில்புடைத்துக் கைபிடித்து இழுத்துக் கடைப்புறத்தில் தள்ளிக் குழவியைநோக்கி, மூடா! வஞ்சக! எப்பொழுதும் முக்காலும் முப்பமேட்டும்பாலும் அருந்தியும் இன்று, கொழுத்த உடல்மெலிய பாதிமூட்டுகின்ற காட்டுக்குள்போல் அழுகிறுயோ; நீ தினமும்காலையிலெழுந்து பிதுவர்களோடு காடுசென்று புல்லும் இலையும்விறகும் குசமும் தூயுங்கொண்டுவா; என்கட்டளைப்படி செய்யாவிடின் தெருத்தாணில்கட்டி அடிப்பேன் என்று வெருட்டிப்,பஞ்சாங்கத்தையும் தடியையும் கையில்கொடுத்து வெளியில் இழுத்துக்கொண்டுபோய் வனத்துக்கு அனுப்ப லோகிதாசியன் அன்னை எதிர்கின்று அழு அவள் கண்ணீர்துடைத்து அவ்வேதியர்க்குக் குழ

தையைப்புடைக்கக் கைஎப்படி எழுந்ததோ? பனைமபயடித்தணிந்ததோ? நீயோகுழந்தை வனமோ கொடியவிலங்குகள் சஞ்சரிக்கும் இடம்; பிராமண உத்தமனுக்கு என் கருணை இப்படியாயிற்று எல்லாம் ஊழ்வலி" என்று வெறுத்துப் புலம்பிப் புத்திரனை நோக்கிச் செந்தாமரைபோன்ற நின் கைகளால் எவ்வண்ணம் விறகு ஒடித்துப் புல்லரிந்து குசைகொய்வாய்; தளிரின்மிகமென்மையாய்ச் சங்கு நேமி வச்சிரம்முதலிய வரைகளுள்ளதாய்ச் சக்கிரவர்த்தி இலக்கணம் அமைந்த நின்பாதத்தினால் பரலும் முள்ளும் வாள்போல் அறுக்க எவ்வாறு நடப்பாயோ? அந்தோ! என் இரவெல்லாம் பசித்தே கிடந்தாய்; அன்னமில்லையே என செய்வல் தண்ணீர்ஆகிலும் பருகிச்செல் என்று தண்ணீர் அளித்துத் துயரத்தினால் அசைவற்றுநின்று சிறிதுதேறி மகனை ஆசீர்வதித்து வனத்துக்கு அனுப்பினாள். அரிச்சந்திரன் குமாரனும் பார்ப்பனச்சிறுவரோடு வனம்சென்று விறகும்புல்லும்கொண்டு தினமும் வாராநின்றனன்.

---

## ௨௪-ஆவது அத்தியாயம்.

### லோகிதாசியன் அரவுதீண்டி இறத்தல்.

இதுகண்டு விசுவாமித்திரமுனிவர் பாதாளம்சென்று தக்ஷகனை அழைத்து உன்விடம் எவர்களையும்கொல்லும் ஆதலால் நீ விரைந்துசென்று வனத்தில்வரும் லோகிதாசியனைக்கடித்துக்கொன்றுவிடு; எனக்காக நீ இந்த அருசாறுசெய். அவன்தந்தை அரிச்சந்திரன் யான் எவ்வளவு துயரம்உறுத்தியும் யதார்த்தம்தப்புவதில்லை; ஆதலால்இத்துன்பத்தில் ஆவது அவன் பொய்மொழி பகரச்செய்; நீ அவ்வடவியில் ஆலமரத்தின் அடியில் இருக்கும் புற்றில் நுழைந்திருந்து லோகிதாசியனைக்கடி என்று கட்டளையிட்டு உடனே அவ்விசுவாமித்திரமுனிவர் வனத்தில்வந்து அங்குபோந்த பூசுரபாலர்களை மறைவாய்விளித்து நீங்கள்



லோகிதாசியனைப்பசியினாலும் தாகத்தினாலும் வருந்தி இளைக்கும்படித்திரியவிடுத்துச்சாயங்காலவேளையில் ஆலமரத்தின் அடியில் வஞ்சித்து அழைத்துவாருங்கள் அவனை தக்ஷகன்கடிக்க இறந்து போவான் என்றுசொல்லி இனிய காய்கனிகளும் அவர்களுக்கு அளித்துச்சென்றனர், தக்ஷகன் என்னும் நாகராசனும் அவ்வாறேசெய்ய அமைந்து பழுமரத்தின் அடியில் வன்மீகத்தில் வந்திருந்தனன். சிறுவர்களும் லோகிதாசியனோடு கூடக்காடுதிரிந்து சமித்தும் தருப்பையும் சேர்த்துக்கொண்டு மெள்ளமெள்ள வடவிருக்ஷத்தின் அடியில்வந்து உற்றனர். லோகிதாசியனும் சமித்தையும் தருப்பைமுதலியவற்றையும்சிரத்தில்சுமந்து கொண்டுதட்டித்தடுமாறி அவர்கள்பின் வந்துஅடைந்தான், சமித்தும்தருப்பையும் அறுத்துச்சேர்க்க அறியாத ஐந்துவயதுள்ளபாலன் ஆதலின் அப்பார்ப்பனச்சிறுவர்களைப் பிரார்த்தித்தும், அவர்கள் உதவிசெய்யாமல் "உனக்குக்கை யில்லையோ என்று கேட்க, அதற்கு ஒன்றும்செய்ய அறியானாய் அழுது ஆங்காங்கு திரிந்து சிறுகச்சிறுகச்சேர்த்து அரிதினிற் பெற்ற சுமையை எடுத்துக்கொண்டு அப்பாரம் தாங்கமாட்டாமலும் பசிதாகங்களினால் களைத்தும் சோர்ந்து ஆலமரத்தின் அருகில் எய்தி அதன் நிழலில் சுமையை இறக்கி இளைத்து வீழ்ந்து துயில்வுற்றுச் சிறிது அயர்வு நீங்கியவுடன் எழுந்து அச்சிறுவர்களைநோக்கியான் இலைகொண்டுவராமல் மறந்தேன் இம்மரத்தில் இலைகள் உயரவிருக்கின்றமையால் நீவிர் அன்புவைத்து இலைபறித்துத் தல்குமின் என்று பணிந்துகேட்க, அவர் "நீ கைகளைப்போல்திரிகிறது நாங்கள் மரம்ஏறி இலைபறித்துத்தருவதோ? இத்தனை கோணங்களுடன் வந்தாய்? உனக்குக்கையில்லையா? கால் இல்லையா? நீயேமரம் ஏறி இலைபறித்துக்கொள்; என்று இகழ்ந்து உரப்பி மரம் ஏறி இலைபறித்துக்கொண்டு இழிந்து செல்லுற, அரசன்மைந்தன் அலக்கண் அடைந்து அவர்களைநோக்கி வணங்கி, கால்விரைந்து விருக்ஷம் இவர்ந்து அடைகொண்டு வருகிறேன் நில்லுமின்; அந்நிய

க்கு அணுகியது; அடல்நெறி அறியேன் யான். இலைகொ
ண்டு எய்தாவிடின் காலனென்கிறகள்வன்கொண்டு என்
னையும் அன்னையையும் சிதைப்பானே என்று மிகவஞ்சி
அஞ்சி அவர்களை வேண்டிக்கொண்டு ஏறப்பார்க்க ஏற
க்கும் எட்டாமல்போகப், பின்வளைந்தாங்கன்றதோர்கிளையை
ப்பற்றி ஒருதாளை அரைமுகட்டின்மீதும் மற்றோர்பாதத்தை
க்கிளையின்மீதும் வைத்து இலைதேடுவதில் கண்வைத்து இரு
க்கையில் நாகங்கள் சிறியபாதத்தின் பெருவிரலில் கடி
க்கப்பற்றில் தலைவைத்துப்பூமியில் விழுந்து உயிர்ப்புநீங்கி
னன். முகம்பிணம்போல் ஒளியிழவாமல் உறங்குவான்போ
லத்தோன்ற வனப்பு அழியாது இருந்தது; அதுகண்டசிறு
வர்கள் அனைவரும் "இச்செய்தி ஒருவர்க்கும் அறிவியாதிருப்
போம்" என்று சொல்லிக்கொண்டு ஓடிச்சென்றனர். சூரிய
னும் அஸ்தமித்தான். சந்திரமதியும் நெடுநேரம் பார்த்தும்
மகன் வாராமல் மற்றச்சிறுவர் எல்லாம்வரக்கவலையுற்று அ
ச்சிறுவரைநோக்கி என்மகன்லோகிதாசியன் வரவில்லை
எனவினவ ஒன்றும் விடைசொல்லாமல் மயங்குகின்றன
ராக, மீண்டும் மிகக்கலங்கி என்மகன் எங்கே? யதார்த்தமே
சொல்லுங்கள் அஞ்சாது அறைமின்; எனஇரந்து வினவ
அவர்கள் ஒருவர்முகம் ஒருவர்பார்த்து மயங்கிப் பின்த
ணிந்து உன்மகனை அரவம்தீண்டியதினால் உயிர்ப்பின்றிப்ப
லாமரத்தின் அடியில் வீழ்ந்தனன். என்று உரைக்கக்கே
ட்டு, இடியுற்ற அரவம்போல் அடித்து வீழ்ந்து அறிவுசோ
ர்ந்து வெகுநேரம்சென்று சிறிது ஞாபகம்வந்து எழுந்து
என்மகனை எவ்வாறு சர்ப்பந்தீண்டியது? காலையில் பசியா
ல்வருந்தி அன்னம் கேட்க அது இல்லையாக முகம்பசல்
வேண்டினன் அதுவும் இல்லாமல்போகப் புலம்பினனே
பலசிறுகுமாரர்களோடு சென்றனனே; அவ்வனத்தில்
என்ன அலைந்தானோ? யாதுகாரணத்தால் அரவம் கடித்த
தோ? எவ்வளவுநாழிகையில் எங்கேவிழுந்தானோ? அறியே
னே எனக்கலுழ்ந்து கண்ணீர்சோரமகனைத்தேடித்து ஒ



குறிக்கும் செய்தியிலாதசிறுவனை ஏன் அரவுகடித்ததோ?
அவ்வேளையில் அதைத்தடுப்பார் இல்லையோ? குழந்தாய்!
கண்மணியே! உவாமதிபோலும் உன்முகத்தைப்பாராது
எவ்வாறு உயிர்பெற்று இருப்பேன்; கமலமலர்போன்ற க
ரங்களையும் பாதங்களையும் எப்பொழுது காணுவேன்? எ
ன்று ஏங்கிவயிறு அலைத்து அழுது அழுது அமர்ந்து அறி
வுசோர்ந்து விழுந்தனள். அதுகண்டு சினங்கொண்டதச்சி
லேனென்பவன் அணுகவந்து மிகவும்உரத்தக்குரலில் வெருட்டி
க்கடுஞ்சொல்கூறித்தெழித்து ஈனமாகவிளித்து அறிவி
லி! பாவி! இன்று வெள்ளிக்கிழமை என்வீட்டில் ஏன் அம
ங்கலமாய் அழுகிறாய்? உனக்குத்தாயா? தந்தையா? சகோ
தரியா? புத்திரனோ? யார்இறந்தார்கள் வெளியிற்செல். எ
ன்வீட்டில் பிரலாபிக்காதே என்கணவன்வரின் கோபிப்
பார். சிறுவர்கள்வருகிறார்கள்பயப்படுவார்கள் வேதாப்
பியாசம் செய்பவர்களுக்கும் விரோதம். உன்புலம்பின்
ஒலிகேட்டு உறங்கும்சிறுவர்கள் விழித்துக்கொள்ளின்
பயம் அடைவார்கள். எனக்கு நித்திரைவாராது கூக்கு
ரலை ஒழி; ஏன் அழுகிறாய் அறை; எனவினவ, அன்னாய்!
என்மகன் லோகிதாசியனை உம்கணவன் காலகௌசி
கர் சமித்துமுதலியகொண்டுவரும்படி ஆக்கினைசெய்து
அனுப்பச்சிறுவர்களோடு வனம்சென்றவன் வந்திலன். வந்
தசிறுவர்கள் அனைவரும் லோகிதாசியன் சர்ப்பம்கடித்தி
றந்தான் என்று சொல்லுகிறார்கள். தாயே! என்செ
ய்கேன்சொல்; எனத்தொழுதுநின்றுபொருள் கருணையா
யின் மருந்து ஏதேனுங்கொடுத்து பிழைப்பிப்பேன்; இவ்
விடர்ப்பொழுதத்து என்னைக்காவென்று காலில்வீழ்ந்து
இரந்து உன்அருளால் பிழைப்பானாயின், பிழைத்த உடன்
அழைத்துக்கொண்டு வந்து விடுகிறேன்; அரைக்கணமும்
தில்லேன்; எனக்குவேறுகதி இல்லையே என்மகன் அந்த
மகா ஆரணியத்தில் தனிமையில் இருக்கின்றானோ? விழி
யும் அறியேனே அருந்தவமே! அருமைத்தவமே! அருள்செய்

என்று கூறி, அதுகேட்டவுடன்கோபம் பொங்கி எயிறுக
ளைக்கடகடவெனக்கடித்து என்ன உன்னியல்புஎன்றும்தெ
ரியவில்லை? குதிரைசெத்ததுமன்றிக் குழிதோண்டவும்
கூலி என்பதுபோல் உன்னை அளவற்றபொருள்விலைகொ
டுத்துக்கொண்டதும் அன்றி இன்னும்மருந்துக்கும்பொரு
ள்கேட்கிறாய்; நீ புத்திரனை எங்கோமறைத்துவைத்துநீயு
ம்பொருள்கவர்ந்து ஓடிப்போகநினைத்திருக்கின்றனை.உன்
வஞ்சகம்யான் அறிகிலேன்? இவ்வுடன்களுக்குவிலங்குப்பூ
ட்டிவைக்கவேண்டும் பிள்ளையென்று போக்குச்சொல்லிப்
போய்விட நினைத்திருக்கிறாயோ? உன்சந்தம் அறிவேன்;நீ
வந்தநாள்முதல் காசெல்லாம் கரியாயிற்றே? ஐயமின்
காசுதான் ஏது? நீ காட்டுக்குப்போனால் என்வீட்டிலவே
லையெல்லாம் யார்செய்வார்கள்? என்கணவன்வரின் அவற்கு
அன்னம் யார்அடுவது? பிள்ளைகளுக்கு உண்டியார்ஊட்டு
வார்கள்? பசுக்களுக்குப்புல்யார்கொய்துகொடுப்பது? தண்
ணீர் ஆர்கொண்டுவருவது? அடிமைக்கு அறிவில்லையே?
நெல்லையார்குத்துவது? பிணியால்வருந்தியிருக்கிறேன்என்
கால் மிகநோவுகொண்டது யாரெனக்கு அடிவருடுவார்?
எதிர்நின்றுபேசுவையேல் நின்னைப்புடைக்கிறேன்பார்எ
னக்கு மிகக்கோபம்வருகிறது நீ அழுவையாகில் அடித்து
இடுப்பைமுடிக்கிறேன்காண் என்றுகடுங்கோபமாய்ச்சொ
ல்லக்கேட்டுப்புக்கரியாகிய சந்திரமதி அவள்காலில்விழுந்து
என்புத்திரனைப்பார்த்துவருகிறேன் பொய்யொன்றும்இல்
லை.வஞ்சகம்செய்துசெல்வேனாகில் என்மகன் எனக்குஉத
வான்; மகாரோகம்சேருவேன், என்றுசபதம்சொல்லக்கே
ட்டுப் பின்சிறிதுமனம்இளகி நீ வீட்டுவேலை எல்லாம்
முடித்துவிட்டுச்சென்று புத்திரனைக்கண்டுகொள் எனக்
கட்டளையிட, அவ்வண்ணமேவிரைவில் வேலையெல்லாம்மு
டித்து எருமையுறைகையில் அப்பாம்பின் அசைத்து முளை
போல் வாயைத்திறந்து கைவிரித்துக் கால்பரப்பிவிகார



ரூபமாய் உறக்கமுற்றனள்; காலிலும் மடியிலும் தோளி
லும் வயிற்றின்மேலும் மார்பிலும் கையிலும் மக்கள்கிட
ந்துஉறங்கினர்.அதன்பின் அருந்ததிக்கற்பினளாகிய சந்தி
ரமதி எரிகொள்ளிஒன்று எடுத்து இருள்திணிந்த நள்ளிர
வில் மனிதர்நடையாடுகையொழிந்து மகாபூதகணங்கள்
மல்கிக்கூகைகள்கூவ நரிகள் ஊளையிட மேடுபள்ளமும்
சேறும்தண்ணீரும் கல்லும்முள்ளுமாய்நெறிஅறிவதரிதா
ய் அச்சம்விளைக்குங்கானகத்தில் கற்பேதுணையாக்கட
வுள் அடிபோற்றிக்கொள்ளியைக்கையில்பிடித்து அதாவ்
லாம் தொலைந்து அவ்வேதியர் சிறுவர்உரைத்தவண்ணம்
அவ்வனத்தின் நடுவண் ஓர்முதிய ஆலமரத்தின் அடியில்
மூச்சற்றுவீழ்ந்துகிடக்கும் மைந்தனைக்கண்டு முகத்தைத்
துடைத்துக் கைகளைத்தடவிப்பிடித்துப் பாலகனேஎன்று
அழுது மூர்ச்சித்துப்பின் எழுந்து மகன்மேல்விழுந்துபுர
ண்டு, புற்றில்வீழ்ந்திருக்கும் மகனை,தன்மடியில்வைத்துப்
பலவாகப்புலம்பி தீர்க்காயுசு உடையனும் சக்கிரவர்த்
தியாயும் இருப்பாய்என்று முனிவர்கள்சொன்னார்களே
என்பாவத்தினால் அவர்கள் வாக்கும்பொய்த்ததேஎன்று மூக்கினும் மார்
சொல்லிப்புலம்பி, ஆவி உண்டோவென்று மூக்கினும் மார்
பினுங்கையைவைத்துச்சோதித்து மரித்தான் எனத்தெளிந்து,
திடசித்தையாய்க்கலங்காமல் இனி இச்சவத்தை சமஞ்
சானத்தில் எரிமூட்டிச் சம்ஸ்காரம்செய்யவேண்டுமேஎன எண்
ணித்தோளில் அக்குழவிப்பிரேதத்தைச் சார்த்திக்கொ
ண்டு எடுத்துச்சென்றுமயானம்புகுந்தனள்.

## உரு - ஆவது. அத்தியாயம்.

### சந்திரமதி மயானத்தில் புத்திரனுக்குத் தீக்கடன் இயற்றப்புகுதல்.

உடனே அவ்வீமத்திலுதியும் கோரரூபமுள்ள பேய்களும் பூதங்களும் மிகவெருட்டி ஆர்க்கச், சிறிதும் அவள் மனங்கலங்காது சகந்நாதனைத் தியானித்து அத்திரமாயிருக்க அவைகள் ஒன்றும்செய்யவில்லாது ஒழிந்தனபோயின. பின்பு அவ்வீமத்தில் எரிந்து செடித்த குறைக்கொள்ளிகளைத் தேடி எடுத்துக் காட்டம்கொண்டு அதை அடுக்கித் திமெப்பமுயன்று பிரேதம் எரியும் தீயினின்றும் எரிகொள்ளியொன்று எடுத்து அத்தீமூட்டி மகனைச் சிதையில் வைத்துப் புலம்பலுற்றனள். நீ இறந்தும் என்நெஞ்சம் இருபிளவாய்ப் பிளவாதேயிருக்குமதே என்மனம் கல்லோ! மன்னர் மன்னன் மகனே! நீ சென்றவிடம் சொல் நானும் எய்துவேன். என்பிராணநாதனைப் பிரிந்தும் உன்முகம் பார்த்து உயிர்சுமந்தேன் இனி எவ்வண்ணம் உய்வேன் மதலாய்! என்று விளித்து ஓலமிட்டழுதனள்; வேதாளஞ் சமைத்த மஞ்சத்தில் இருந்த வீரதாசன் உற்றுக்கேட்டு இஃது ஓர் பெண்குரல் இந்நள்ளிரவில் தனியாய் ஒருபெண்குரல் கேட்பதென்ன புதுமை? மற்றோர் மனிதர் அரவமும் இல்லையே யார் இத்துணிவுள்ளவள்? காண்போமென வேதாளக்கல்மஞ்சத்தினின்றும் இழிந்து தண்டம் தோளில் சார்த்தி அருகில்வந்து நீயார்? பெண்ணே! இந்நள்ளிரவில் தனியே ஏன் அழுகின்றனை? நீ இன்ன இயல்பினள் என்று தெளியச்சொல்; என் ஆணை கடந்து ஈது என்செய்தாய்? அச்சம் அணுவளவும் இல்லாளாய் அழுகின்றனை, உனக்கு நிகரான தீரமுள்ளாளை இவ்வுலகில் எங்கும் கண்டிலேன்; என்று உரப்பிக்கூறி; காலருத்திரன்போல் பயங்கரரூபனாய்க் காலதண்டம் கைக்கொண்டு நின்ற வீரதாசனைக் கண்ணுற்று விசயர்த்தேவி வணங்கிக் கைகுவித்து ஓ மகாவீர! இக்காலத்தில் காலனெ-



ங்கென்னும் நாமமுள்ள யஞ்ஞசர்மப் பார்ப்பனன் வீட்டுத் தொழுத்தை நான். எனக்கு ஐந்து வயதுள்ள மகன் ஒருவன் அவர் ஏவலாற் சமித்தும் தருப்பையும் கொண்டுவருவதற்குப் பார்ப்பனச் சிறுவர்களுடன் வனஞ்சென்று பாம்புகடித்து இறந்தனன்; இச்செய்தி அச்சிறுவர் கூற அறிந்து அவ்வீட்டில் உள்ளோர்க்குச் செய்யவேண்டும் தொழில் முற்றும் புரிந்து பின் வனஞ்சென்று மைந்தன் சவத்தைக் கண்டு தீக்கடன் கழிக்கக் காஷ்டமெடுத்துவரத் தென்பிலேன் ஆகலால் இவ்வெரிகொள்ளிகள் ஆய்ந்து அடுக்கி எரிமூட்டினேன்; உற்றோர் இலளாய்த் தனியே புலம்புகின்றேன்; என்று கூற வீரதாசன் இச்சுடலையில் சவத்தை எரிப்பவர் என் அதிபனாம் வீரவாகுவின் ஆணைப்படி, ஒருபணமும் சவப்போர்வைத் துணியும் வாய்க்கரிசியும் கொடுத்தே சம்ஸ்காரம் செய்யவேண்டும் அவ்வாறின்றி என் கட்டளைமீறி ஒழுகுபவர்களை இத்தண்டத்தால் தலையை உடைத்தாவது இக்கைவாளால் சிரத்தை அறுத்தாவது கொல்வேன். நீ பெண்ணென வாளா விடுத்தேன். உன் மகப்பிணம் இங்கு எரிக்கவொட்டேன்; எடுத்துச்செல். என்று சவத்தை இழுத்து எறிந்துவிட்டு நீ இப்புகில் எல்லாம் வந்ததென்று பட்டணமெல்லாம் கொண்டுவந்து கொடுத்துப் பிணஞ்சுடு. என்றுசொல்ல அவனை வணங்கிப் பணிவுடன் யாதொரு ஆதரவுமில்லாதவள் அரைத்துணி தவிர வேறு துணியில்லை மறைக்கும் கோவணமன்றி வேறில்லை ஒற்றைக்காசுதான் என்னிடத்திலேது? பொருளாதியில்லாத புன்கண்மையுள்ளவள். எனக்கு எப்படிப் பொன் கிடைக்கும்? என்புத்திரன்மேல் ஆணை பொன் சிறிதுமில்லேன். உனக்குப் புண்ணியமுண்டு. நான் சவத்தைச் சம்ஸ்காரம் செய்வதைத் தடுக்காதிரு என்று பலவண்ணமாக வேண்டிக்கூறிப் புலம்பும் அவளை நோக்கி, பொன் இல்லையாயின் கழுத்திலுள்ள தாலிப்பொன்னையாகிலும் கழற்றித்தந்து சம்ஸ்காரம் செய், இல்லையெனில் யான் செய்யவொட்டேன் என்று கூற, அதுகேட்டவுடன் ஒன்றும் தோன்றாது மயங்கி

"இதென்னவிபரீதகாலமோ அறிகிலேனே என்கழுத்தில் தாலிகணவனுக்கன்றிக்கட்புலப்படாதே இதுவும் ஓர்புதுமை இருந்தபடியென்" என்று மிகவும்சிந்தையுற்றவளாய் விஸ்மயத்துடன் வினவுற்றனள். ஓமகாவீர! கருணைபுரிந்து விடைதரவேண்டும். என்றுபிரார்த்து, பின் நீயார்? கால உருத்திரன்போல் இங்கு இருக்கின்றனை யூரெது? பேர் என்ன? எக்குலத்திற்பிறந்தாய்? யதார்த்தமாகச்சொல்; என்கழுத்தில்தாலி உன்கண்ணிற்பட்டது எப்படி, கனவனேயோ புலையனுக்கு அடிமைபுகுந்ததேன்? மறையாதுமதி வல்லோய்! பகர்என்று கண்ணீர்சோர மனமறுகின்றனள். அதுகேட்டவுடன் அவனும் இவள் நம்மனைவியென்றும் மகனும் நம்மகன்தானென்றும் இதுவும் விசுவாமித்திரமுனிவர்செய்தமாயைதான் என்றும் உளம்கொண்டுதேவனை நினைந்து பின்சிறிது ஆறி நாணத்தோடு தலைவணங்கி இவ்விடர்எல்லாம் விசுவாமித்திரமுனிவர்மாயையால்நேர்ந்தது. இராச்சியமுற்றும் கவர்ந்து வனத்தில்துரத்தி நக்ஷத்திரனை ஏவி வழிக்கழைப்பித்து இக்காசிநகரஞ்சேர்ந்த பின்யான் மனைவியைவிற்றப்பொருள்தர அதைத்தன்ஆகாரத்துக்காயிற்று என்றுசொல்லி என்னைப் புலையனுக்கு விற்றப்பொருள்வவ்விப்போயினபின்னும் மனதில் இரக்கமென்பது சிறிதும் இன்றி மகனையும் கொல்வித்தனரே அம்முனிவர்பாதத்தில் பத்திபோமே அருச்சனைசெய்தேனேயன்றிஅவர்திருவுள்ளத்துக்கு அணுவளவும் குறைவுசெய்திலேனே ஏனோ அளவற்றகொடுமையிழைத்தி இன்னல்லைப்படுத்துகின்றனர். எதுவாயினும் எம்பெருமான் அருள். கேட்டதெல்லாம் தாக்கேற்றியவேண்டும். என்று நடுங்கி காலனி முடிந்த சவத்தைத் தகனம்செய்யாதாயின் என் இறைவன் வீரவாகுவின் கட்டளைப்படிக் கட்டணம்கொடாதவரை அந்திச்சம்ஸ்காரம்செய்யவொட்டேன் தயாவித்துரோகம்செய்யலாகாது செய்யின் மீளாநரகத்தழுந்தப்பாதகர்களும் உடல்களும் அல்லவா? நில



னைவருத்திக்கும்துரோகியேயில்லப்பொறை; எனப்பெரியோர்புகலுவர். நீர்க்குமிழிபோன்றயாக்கையை நிலையென நம்பி நீடூழிகாலம் சுகம்அனுபவிக்க எண்ணித் நிலைபெயலாகுமோ? பிறந்தபோதே இறப்பதுதிண்ணம். இவ்வுயிர்நீங்கியபின் சரீரம் எப்படியாகுமென்னை? "தாய் தொடுத்திருக்கிறேன் என்றுய்த்து அடுக்கில் என்" அட்டை ஒருபுல்லைத்தொட்டு மற்றொன்றைவிடுவதுபோல் ஆன்மா ஓர் உடல்புகுதற்கேமற்றொன்றை ஒழிப்பது "இடும்பைக்கு இடும்பை" ஆய் "புண்ணின்மேல் தீப்போலும்" "மலையாமெருகுபோலும்" நிலையாகநீங்குவதாய். "குடரும்கொழுவும் குருதியும் என்பும்தொடரும்நரம்பொடுதோலும் இடையிடையேவைத்துப்பும் முழும்புமாய்" துர்நாற்றத்துக்கிடமாய்ப்புலாலுடன்கோரிக்குழம்பு அலைக்கும் கும்பம்போலத்துர்நாற்றம்வீசும் இவ்விகாரமிய உடலைக்காப்பாற்றமெய்வேனோ. உயிர் உடல்விட்டெழுந்தால் மாதா ஆர்! பிதா ஆர்! சகோதரன் ஆர்? மனைவி ஆர்? மகன் ஆர்? பிராயசனமடைதல்கொடுக்கவேண்டும் இரணத்தின்சம்பந்தத்திலேயே பசுவும்பத்தினியும் சுதனும் வீடும் சேரும். இரணம் தீர்ந்தால் உடனே நீங்கும். நீக்காத்தனைவர் அறவர். யாவராயில் மனமடங்குதலே மனைவி; பொறுமையே புத்திரன்; வாய்மையே அன்னை. அறிவே அத்தன். அறமே சகோதரன். கருணையே கேள்வன். மற்றவர் நிமித்தத்தினால் உறவினர் இவர்களைத்துறந்து உடல்காக்க ஒவ்வேன்; நீ என்வாய்மை விரதத்தைச்சிதைக்காது இன்னே உன் இருப்பிடம்சென்று அவ்வெதியனைவேண்டி ஒருபணமும் பிணக்கோடித்துண்டும் வாய்க்கு இடும் அரிசியும் வாங்கிவந்துகொடு. விரைந்துசெல். என மறுத்துக்கூற, மகவை அங்கேயே வைத்துப்பட்டணத்துக்குள் விரைந்து செல்லாநின்றனள். இச்சமயங்கண்டு விசுவாமித்திரமுனிவன் தவத்தின்பெருமையால் கள்ளன் ஒருவனை நிருமித்தனன் - அவன் இராதனுய் காண்கையில் உருவப்பிடித்துக் கோரரூபமுடையவனும்

ண்டமீசையும் கறுத்தநிறமும் உடையனும் கருப்புடை
உடுத்த காலன்போல் நின்றனன். அவனைக் கௌசிகமுனி
வன் விளித்து "நீ அரசன்மாளிகையிற்சென்று விலையுயர்ந்த
அணிகள் அணிந்த அவ்வரசன் குழவியைக்கொன்று மன்ன
வர் மறுகிற்செல்லாநிற்கும் அரிச்சந்திரன் மனைவி கையில்
வைத்துவிட்டு ஓடிப்போ" என ஆணைசெய்ய அவனும் அன்ன
வண்ணமே அரசனுடைய அரண்மனையிற்சென்று செவிலி
யின் அருகில் அணையில் படுத்துத் துயிலும் வேந்தன் மக
வைக் காவற்காரரும் மற்றுமுள்ளவர்களும் ஒருவரும் அறி
யாமல் எடுத்துக்கொண்டுபோய்க் கழுத்தைத் திருகிக்கொ
ன்று அணிகளை எல்லாம் கழற்றி ஆடையிற்கட்டி எடுத்துக்
கொண்டு ஓடினன். பின்செவிலியெழுந்து குழந்தைகழுத்
து முறிந்து இறந்திருப்பதும் அணிகள் கழற்றியிருப்பதும்
கண்டு; கள்ளன் கள்ளன் என்று அரற்றி, அழுதாள். அப்பு
லம்பொலிகேட்ட அரண்மனையில் உள்ளோர் அனைவரும்
வந்து கூடினர். அரசனும் அவன் மனைவியும் வந்து மக இறந்
ததைக்கண்டு மிகவும் கலுழ்ந்தனர். அங்குள்ள தொழுத்
தையரும் தொழும்பரும் யாவரும் கடல்போல ஓலமிட்ட
னர். அரசனும் உடனே அவைக்களன் அணுகிக்கள்வனைக்காணச்
சேவகர்களை விடுக்க அவர்கள் ஆயுதங்களைப் பிடித்துத்
தெருக்கள்தோறும் தேடிச்செல்லலுற்றனர். அக்கள்வனும்
அம்மறுகில் அழுதுகலமந்துசெல்லும் சந்திரமதியைக்க
ண்டு மாதர்க்கரசே! இக்கள்ளிரவில் தனியே புலம்புகொ
ண்டுசெல்வதேன்? சேர்ந்த இடுக்கண் என்? எனப்பரிவோ
டு வினவ, அக்கற்பின்கொழுந்தியும் உள்ளவாறு கரவாது சே
ர்ந்தவெலாம் விளம்பக்கேட்டுத்தானும் அத்தவப்பாவைபோ
ல் பாவித்துக்கண்ணீர்சோர நின்று, "என் சகோதரி! தெய்
வச்செயலுக்கு யார்என்செய்யலாம் "முற்றியிருக்கக்கனி
பொழியத்தீவினையால் நற்காயுதிர்தலுமுண்டு" மயிர்ந
ரைத்துத்தோல்திரைந்து பல்விழுந்து சொல்தளர்ந்து தா
ழ்ந்தடிக்கு தலைநடுங்கத் தண்டுகோலாயூன்றிக் கால்



தளர்ந்து பிணிசோரக்கண் இடம்பெறும் இந்த முத்த
விருத்தர்கள்இருக்க இளையவர்கள் இறப்பதும் இவ்வுல
கில் உள்ளது, அதனாலென்பயன்? என நன்னுரைபகர்ந்து
இனி இரங்காது இப்பொருள்கொண்டு உன்மகனுக்குச்
செய்யவேண்டும் நீ சடங்கு செய்என்று வலிய அவள்மு
ன்றானையில் அணிமுடிப்பைக்கட்டி அவண்நில்லாது அக
ன்று விரைந்துபோயினன்.

---

## உஉ - ஆவது. அத்தியாயம்.

### சந்திரமதியைக்கொலையாளி என்று தலைவாங்கத்தீர்மானித்தல்.

உடனே அரசன் சேவகர்கள் ஆயுதங்களோடு ஆர
வாரித்துக்கொண்டு அம்மறுகில் அணுகி ஆங்கு ஆடையில்
அணிமுடிப்போடு இருக்கும் சந்திரமதியைக்கண்டு இவ
ளே நமது மன்னவன் மதலையைக்கொன்றபாவி, கடுநெ
ஞ்சுஉள்ளகள்வி இரக்கமின்றி எங்கோன்புதல்வனைக் கொ
ன்றை நீயே அன்றோ என்று பலவாகத்தெழித்து உரப்பி
எற்றி இடித்துப்பிடித்து இழுத்து காவற்சாலைத்தலைவ
னும் பெருவத்தரும் உருவமுள்ள வீடன் என்னும் வீர
னிடம்கொண்டுவிட்டனர். அவனும் எழுந்து உற்றுப்பார்த்து
மிகவியப்படைந்து கோபாவேசங்கொண்டு வாளுருவி
யானும் இதுகாறும் கள்வர்பலரைக்கண்டேன் இவளைப்
குரூரமானசித்தையும் அனியாயசெயலும் கண்டிலேன்
இவள்தோற்றமும்செயலும் ஒவ்வாவில்லையே இவள்தலையை
எறிவேனென்றுரோ பெண்கொலைபெரும்பாவம், எனவெ
செய்ற்பாலதே அறிகிலேன் அரசன் அருகில்அழைத்துச்செ
ன்று அவன் ஆணையின்வண்ணம் செய்வது கடனாமெ
ன்று அரசமாளிகைக்கண் எய்தி அவைக்களனே புத்
திரசோகத்தால் அலமாறுற்ற அரசனை நோக்கி, வேந்த!
நின்மகனைக்கொன்றகள்வி இவள், இவ்விரவில் அரண்மனை

எய்திமகனைக்கொன்று அணிகளைக்கைக்கொண்டு ஆடையில்கட்டித் தெருவில்புறப்பட்டுச்செல்ல முயலுகையில் நம்சேவகர் நகரம்எங்கும்திருவி நடுவண் இவளைக்கண்டுபிடித்துக்கொண்டுவந்தனர். என்றுகூறி, அணிகளையும்அரசன் எதிரில்வைத்தனர். அவற்றை அரசனும் அவ்வணிகளை எடுத்துக்கண்ணிலும்முகத்திலும்மார்பிலும்வைத்து,ஏங்கி ஏங்கி இரங்கினன். என்செல்வக்குழந்தாய்! உன்னைப்பிரிந்து ஒருகணமும் உய்வெனோ? தேவனை உன்னி நெடுநாள் நோற்ற நோன்பின்பயனால் உன்னைப்பெற்றேன். உன்னையன்றியுய்வேனோ? இவ்வரசாட்சியேன்? மனையேன்? உடலேன்? ஏதும்வேண்டேன் என்கண்மணியே! யான் முன் செய்தபாவம் இவ்வாறுநேர்ந்தது. என்னினும் பாவஞ்செய்தோர் இவ்வுலகில்இல்லை என்றுசொல்லி அடிக்கடி சேர்ந்து அழுது இக்கள்வியைப்பார்த்துக், கல்லினுங்கடினசித்தமுடையாய்! இராக்ஷசி! இரக்கமின்றி இக்குழவியை என்னவண்ணம் கொலைபுரிந்தனையோ? உனக்கு அணிகளும் பொருளும்வேண்டுமாயின் என்னையாசித்தால் தருவேனே: நீஎன்னகொடுமைசெய்தாய்? மாது உருவங்கொண்டு மாயைசெய்யும் அரக்கி நீ. என்று இகழ்ந்து, இக்கொடியவளைப் பெண்ணென்று நினைத்து உயிரோடு வைப்பின் உலகெல்லாம் அழித்துவிடுவாள் ஆதலினால் இவள்தலையைத்துமிப்பதேகடன். இறைப்பொழுதும்தாமதியாது இப்பொழுதேசிரத்தைத்துணித்து வதைபுரிஎன்று ஆணைசெய்தவுடன் அந்நகரவிசாரணைத்தலைவன் அவள் கையிரண்டையும்பின் இறுக்கிக்கட்டிக்,கூந்தலைப்பிடித்து இழுத்து இராஜவீதியில்செல்லாநிற்க,இதுகண்ட நகரமாக்கள்குழந்தையைக்கொன்றபாவிஇவள்; அரக்கியேயன்றிமானுடப்பெண் அல்லள் இவள்ரூபம்என்ன; செயல் என்ன? ஆயுதம் உருவிக்கைபிடித்த காவலாளரை என்னமாயம் செய்து உள்சென்றனளோ? பெரியகவாடங்களின் திண்ணிய இருப்புத்தாழ்களை எவ்வாறுநெகிழ்த்தினளோ? இவ



ள்வஞ்சியேவலி. மனிதருளாருளரோ! கள்வர் பலர்களைக்கண்டோம் பெண்களிற்களவுசெய்வாரைக்கண்டிலம். அதிலும்இக்கொடுமைஎங்கும்கண்டிலம். இவளைஉயிருடன்விடின்இராவில்எவரும்உறங்கவஞ்சுவது ஐயம். என்று இவ்வாறு அதிசயித்துக்கூறினார். சிலர் இவள்முகத்தைப்பார்த்தால் தீங்குசெய்தவளாகத்தோன்றிலள். திருமகள்போலிருக்கிறாள்; இக்கொலையும் களவும்மாயமுள்ளவன்யாவனோசெய்து மன்னர்சேவகரைக்கண்டு இவள்மடியில்எறிந்துஇருக்கவேண்டும். "அடுத்தது காட்டும் பளிங்குபோல்நெஞ்சம் கடுத்தது காட்டும்முகம்" பகைமையையும் கேண்மையையும் முகமே உரைக்கும் இவள் முகத்தையும் கண்ணையும்பார்த்தால் தீங்கு ஒன்றும் இம்முகத்திலுளதாகத்தோன்றவில்லை. எவர்உள்ளம் எவர்களுக்குத்தெரியும் எல்லாம்இறைவன் திருவுள்ளத்துக்கேதெரியும் என்றார்சிலர்; பெண்களுக்கு ஆடவரினும் உண்டி இருமடங்கு அறிவு ஆறுமடங்கு என்றார்சிலர். நன்கு ஆய்ந்தே இவளைவதைபுரிவது அறம். இல்லையேல் வேந்தனைப்பெண்கொலைசேரும் என்றார் சிலர். இன்னணம் எல்லாரும் அச்சமும்வியப்பும்அடைந்துகூறிநிற்க, அந்த அதிகாரியும் வீரவாகுவைவிளித்து அரசன் ஆணைப்படி இவளைத் தலையைவெட்டிவிடு; எள்ளளவும்இரக்கமின்றிக் கடுகத் தலைதுமித்துவிடு; குழந்தைகளைக்கொல்பவள் இக்கொடியவள் உலகில் இருக்கலாகாது; என்று அரசன் முத்திரையோடு ஆணையும்தந்தனன்; அவ்வீரவாகுவும் தன்சேவகர்களோடுசேர்ப்புறம்நின்று அவர்களைநோக்கி நீவிர் இக்கொடியவளைஇழுத்துக்கொண்டு மயானம் சென்று என்சேவகன் வீரதாசன் என்னும் பெயரினனாய் மகாவீரனாய் மிகச்சினமுடையனாய்ச் சத்தியமுள்ளோனாய் மயானத்தில் காவலாய் இருக்கின்றனன். அவனிடத்தில் ஒப்பித்து இச்சிறுவனைக்கொல்லியைச் சிரச்சேதஞ்செய்யும்வண்ணம் என்னுரையை அவற்குரைத்து மீளுங்கள். எனக்கட்டளையிட அவர்களும் அவ்வண்ணமே வீர

தாசனிடத்தில் இழுத்துச்சென்றுவிடுத்தான். சிரச்சேதம் செய்ய வீரவாகுவின் கட்டளையுமுண்டாயிற்று. உடனே இருள்நீங்கச் சூரியனும் குணதிசைச் சிகரியினுச்சியில் தோன்றினான். கயிற்றாற்பிணித்துத் தண்டித்துப் புடைத்து அலைத்து ஈர்த்துக்கொண்டுவிடப்பட்டவள் தன்மனைவிதானென்று அரிச்சந்திரன் அறிந்து துயர்க்கடலில் மூழ்கினனும் தோன்றாது ஐயந்து நின்று விழுவான். எழுவான் மீண்டும் மூர்ச்சித்து விழுவான். இவ்வண்ணம் அளப்பரிய துயரம் அநுபவியாநின்று சிந்திக்கலாயினன். இவளோ அன்புள்ளமனைவி. மகாராஜன்மகள். எல்லாச்செல்வமும் எல்லா இன்பமும் நுகர்ந்தவள்; அனேக ஆயிரந்தாதிகள் சூழ்ந்துபோற்றும் பாதபங்கயமுள்ளவள்; இரத்தினம் இழைத்த மாளிகைகளிலும் விலையுயர்ந்த மென்மையுற்ற சயனங்களிலும் ஆசனங்களிலும் மாடங்களிலும் எனக்கு உயிர்த்துணையாயிருந்தவள்; எல்லாப்பிரசைகளிடத்தும் தாய்போல் அன்புள்ளவள்; முனிவர்க்கும் பெரியோர்க்கும் அன்புடன் பூசனைபுரிந்தவள். தரையில் கால்தோய்ந்தறியாதவள். மாடமும் மாளிகையும் விட்டு மூன்றும் பரதும் உள்ள அதர்சென்று வனம்புகுந்து பசியினும் தாகத்தினும் இளைத்து இரேசப்புகுந்து பின். காலகௌசிகனுக்கு விலைப்பட்டு அடிமையாய் அலக்கண் எல்லாம் அநுபவித்தாள், மகனும் இறந்தான். இவ்வின்னலும் இவட்கு நேர்ந்தது. என் கையினால்தானே கொலைசெய்யவும் நேர்ந்ததே என்செய்கேன். நான் வீரவாகுவுக்கு விற்கப்பட்டுப் புலைத்தொழில்பூண்டதும் அன்றி மனைவியைக்கொலைபுரியவும் நேர்ந்ததே. இறைவா! எவ்வுயிரும் காப்பவனே! கருணைக்கடலே! இடர்கடியும் எம்பிரானே! என்னையாள்வானே! எல்லா உலகும் உடையமூர்த்தியே! உன் அருள் இதுவா என்று ஏங்கி இரங்கி வாளினால் அவள்கட்டை அறுத்து, நீ! என்ன இன்னல் நேர்ந்தது; உன்சிரம்சேதிக்கக் கைஎழவில்லையே என்னினும்பாவி இவ்வுலகில் உண்டோ என்று அணைந்தழுவி அழுது அழுது அலமராநின்றனன்.



## ௨௭ - ஆவது. அத்தியாயம்.

### அரிச்சந்திரன் தன்மனைவியின் சிரத்தைச் சேதிக்க வாள்வீசுதல்.

அறங்கண்ட சந்திரமதி மனந்தேறி மன்னவனைப்பணிந்து, மதிவல்லோய்! கலைக்கடல்கடந்தோய்! உடலின் இழிவும் இதனின் உயர்வும் நன்குணர்ந்த நரபதியே! நீயும் அறியாதார்போல் தைரியம் இழந்து இவ்வாறு கலங்குதியோ? கேள்; உன்தன் பெருங்குணம் கண்டு அறவாழிமூர்த்தி அருள்புரிவார் ஐயமில்லை; உன் கையால் கொலைபுரியப்பெறுவதே எனக்கு நேர்ந்த நோன்பின்பயன்; என்மனதில் சிறிதும் அயர்வில்லை; நிலையில்லா இவ்வுடல் இருந்தென் பயன்; உன் சத்தியம் கைவிடேல்; எல்லா உலகும் வாய்மையினாலேயே நிலைக்கின்றன. எவ்விட்டும் இதனாலேயே தொலைந்து. என்னைக் கொலைசெய்ய மனந்தளர்ந்து செய்யாயாயின் சுவாமித்துரோகம் சம்பவிக்கும். அது எல்லாவற்றினும் தீங்கு உள்ளது; ஆதலின் நீ குற்றம் அஞ்சாமே துணிந்து என் தலையை வெட்டிவிடு; இதனால் உனக்கு மேன்மையே நேரும்; ஒருகுறையும் நேராது; என்று தொழுது சொன்னதைக் கேட்டு ஆராய்ந்து, நான்பண்ணிய பிரதிக்கினை சிதைந்து மதத்துவாது தலையுற்றேன் என்கையால் உன்னையும் கொன்றபின் செய்யவேண்டுவது என்தான், என்று நெட்டுயிர்ப்பு எறிந்து சுவாமிகாரியம் போது நேரம் தயையும் நோக்கவேண்டும்; அடிமையாய் ஒருவன் ஆணைப்படி செய்பவனுக்கு அருள் ஏது? நோன்பு ஏது? என் தலைவன் கட்டளையின்படிக் கொல்வதே செயற்பாலது. எனத் துணிந்து எழுந்து வாள் உருவிக் கையில்பிடித்து மனைவியாகிலும் மற்றெவராகிலும் ஆம். அஃது ஆராய்வது என் தொழிலோ? என் தலைவன் ஆணை கடவாமையே எனக்கு நோன்பு; என்று சொல்லி [illegible] தன் கண்ணை மனைவியின் [illegible] செய்து [illegible] மற்றுக் கொலைக்களப்பாறையில் [illegible]

சுக்கிரனைத்திரியாவிதிராச் சூரியனைப்பார்த்துத் தாமரை கேள்வ! எல்லாவுலகுக்கும் ஒளிகொடுப்பவனே! நித்திய நைமித்திககருமங்களும் வேள்விகளும் நிறைவேறச்சாக்ஷியாயிருந்து பயன்தருபவனே! முத்திக்குவழியாயிருப்பவனே! சகஸ்ராயிரம்கொண்டகடவுளே! என்கணவர் மெய்மைநிறம்பாதவனாயின் இவ்வுலகமுற்றும் அறுக. என்னிடத்துக்கற்பு உள்ளதாயின் இம்மன்னவன் எவ்வுலகுக்கும் ஆளுக. நான் ஆயிரம்ஜனனமாயினும் தயவுசெய்து இவரிச்சந்திரனுக்கே மனைவியாக அருள்புரி. என்றுபிரார்த்தித்துச், சூரியனைப்பார்த்தபடி கொலைப்பாறைமேல் நிற்க மன்னவனும் மனம்துணிந்து வாளெடுத்து அவள் கழுத்தில் எறியத்துடங்க, அக்கணமே விசுவாமித்திரமுனிவர் ஓடிவந்து அரிச்சந்திரன் கையைப்பற்றிக்கொண்டு சூரியவம்சத்திற்பிறந்து பத்தினியைவதைக்கத்தொடங்கினை; உன் மூர்க்கதனமும் கொடுமையும் பாவத்துக்கு அஞ்சாமையும் எவ்வளவு அஞ்ஞானத்துக்கு ஏதுவாயிற்று பார். சக்கிரவர்த்தி என்று பேர்பெற்று மனைவியைக்கொல்லுதியனுற்றனை. நின்மனந்தான் என்ன கல்லோ? இன்னும் பார். மனைவியில்லாதவீடு இடுகாடாகும். அதில்வசித்தாலும் இழிவு உண்டு. மனைவியில்லான்செய்யுங்கருமம் எல்லாம் பயன்அற்றவை. அவன் பிறப்புப்பயன் அற்றது. வசிட்டஇருஷியோ உனக்கு உபதேசித்தார், பத்தினியைக்கொன்றால் பாவம் இல்லையென்றும் பெண்கொலைபாவம் அல்லவென்றும் உபதேசித்தருளினரோ? பத்தினியைக்கொலைசெய்து புண்ணியம்தேடி எவ்வுலகம்செல்லக்கருதியிருக்கின்றனை! பதிவிரதையான பத்தினியைக்கொல்லின் சத்தியத்தினால் சுவர்க்கம்சேருமோ? அவளின்றிச் சுவர்க்கத்தில் இருப்பு துணைத்துமுள்ளதோ? பத்தினியும்புத்திரனுமின்றி அனுபவிக்கும் சுவர்க்கமும்நரகத்துக்கு ஒப்பேயன்றிவேறன்றே.



என்வாக்கியங்கேளாமையால் இராச்சியமும் தனமும் சுகமும் இழந்து வனத்தில் வெயிலிலும் மழையிலும்வருந்தி மனைவியைவிற்றுப் புலையனுக்கு அடிமையாய்ச் சாதியினின்றும் கருமத்தினின்றும் பதிதனாய்ப் புத்திரனும்பாம்புகடித்து இறந்து பத்தினியையும் கொல்லநேர்ந்தது. இனியாயினும் என்உரைகேட்டு இல்லையென்று ஒருமொழி சொல்லையாயின் இராச்சியமும்தருகிறேன். எல்லாப்பொருளும்தருகிறேன். மகனும்பிழைப்பான். மனைவியோடுசுகமேயிருக்கலாம். சுவர்க்கமும் என்தவப்பெருமையால்உனக்குக்கிடைக்கும். இப்பாவச்செயலைத்துறந்துவிடு. என்று கூறிய விசுவாமித்திரமுனிவரை வணங்கி, அரிச்சந்திரன் அறையலுற்றனன்-முனிவர்க்கரசனே! கருணைக்கடலே! புனிதமான ஒழுக்கத்தவனே! உலகெல்லாம் புனிதம்செய்யவல்லோனே! எல்லாம் அறிந்தநீயும் என்னை இவ்வண்ணம் புகலற்பாலையோ? தேவரீர் திறம்யான் அறியேனோ? உலகம்தெரிந்ததே. இராச்சியமும் சுவர்க்கமும் மனைவியும் மகனும் சுகமும் [illegible] வேண்டேன்; எவ்வுலகும்படைத்து [illegible] நிறைந்தபரஞ்சோதியை [illegible] அருச்சித்தவன் அடிபணிந்துய்வேன். எனக்குவேறொன்றிலும் [illegible] இல்லை. மீண்டும்மீண்டும் எனக்கு உரைத்தல்வேண்டாம். அருள்புரிந்து [illegible] முடித்தருளுக, சத்தியவிரதம் [illegible]. தேவரீர் இராச்சியம்கொடுத்தால் நான் கொடுத்ததை மீளக்கொள்ளலாகுமோ? அந்தணனுக்குக்கொடுத்தபூமியை அனுபவிப்பவன் [illegible]. தத்தாபகாரம் [illegible] இழிதயிராணிகளாகப்பிறக்கின்றார்கள் [illegible] நரகமும் அனுபவிக்கிறார்கள். தேவரீருக்குக்கருணை உண்டாயின் என்சத்தியவிரதம்கெடாது அருக்கிருந்துச்செல்லுக. எனஉரைத்துக்கொண்டிருக்க, விசுவாமித்திரமுனிவர் மனம்பொறாத்தன்பிரதிக்ஞைபயன்அற்று வெட்கமிக்கு [illegible] மௌனமாயிருந்தனர்.

பின் அரிச்சந்திரன் வாளைவீசி மனைவியின் கண்டத்தில் ஓச்சினன். அதுகண்டதேவர்கள் எல்லாந்திகைத்து நின்றனர், அவ்வாள் அவள்கந்தரத்தை அறுக்கவில்லாது நின்றது. அதுகண்டு அரிச்சந்திரன் சுவாமித்துரோகம் யான் சிறிதும்செய்திலேனே பொய்யொன்றும்சொன்னதில்லையே என்மனதில் களவுநினைத்திலேனே எப்படி என்வாள்தடைப்படலாம்? என்று சிந்தையில் அழுந்தி மீண்டும் அவ்வாளை எடுத்து ஓங்கிக் கழுத்திலெறிய, அது மலர்மாலைபோல்வீழ்ந்தது. மீண்டும் அரிச்சந்திரன் சினங்கொண்டு யான் சத்தியவிரதம் திறம்பாதவன் ஆயின் இவ்வாள்சிரத்தைச் சேதிக்கக்கடவது; எனச்சிந்தித்து மீண்டும் அவ்வாளைஎடுத்து ஓச்சமுயல, இதற்குள்வானத்தில்வந்திருந்த வானவர்எல்லாரும் ஆ! ஆ! அரிச்சந்திர!, சத்தியவிரத! அவ்வாறு துணியற்க" என்றுபகர்ந்தனர்.

---

## உஅ-ஆவது அத்தியாயம்.

### திரிமூர்த்திகளும் பிரத்தியக்ஷமாய் அரிச்சந்திரன்மனைவியைக் கொலைசெய்யாது தடுத்துச் சத்தியவிரதத்தைமகிழ்தல்.

அவ்வாளைத் திரிமூர்த்திகளும்பற்றித்தடுத்தனர். தேவர்களும் முனிவர்களும் தத்தம்மனைவிகளோடுவந்து ஈண்டி எங்கும்நிறைந்தனர். விசுவாமித்திரமுனிவரும்நாணத்தினால் தலைகவிழ்ந்து ஒன்றும் தோன்றாதயர்த்து நின்றனர். பிரமன் முதலியதேவர்தலைவர்கள் அம்மன்னவனைநோக்கி, ஓ அரிச்சந்திர! சத்தியவிரத! உன்புகழ்என்றும் அழியாமல் உலகம் எங்கும் புனிதமாக்கக்கடவது என்று தனித்தனியேபுகழ்ந்தனர். அரசனும் இத்தேவர் எல்லாரும் அருள்புரிந்து எதிர்நிற்பதைக்கண்ணாரக்கண்டு களித்து ஆநந்தபரவசனாய் மனைவியுடன் அவர்களைவலஞ்செய்து வணங்கித்துதிக்கத்தொடங்கினன்.



எந்தேவர்க்கும்தேவனே! எல்லோருக்கும்நாயகனே! வேதங்களின்சாரமே! நித்தியனே! நிமலனே! எங்கும் நிறைந்தபொருளே! எவற்றுள்ளும்கரந்துறைந்து அவற்றையும் நின்வயின் அடக்கினவனே என்று எப்பொருட்கும் இறைவனையதம்போற்றி எனப் பிறவிப்பயன் அடைந்தது. என்துன்பமெல்லாம் ஒழிந்தது. என்று துதிக்கும்வேந்தர் வேந்தனைத் தம்கைகளினால்தடவி உனக்கு எவ்வளவு இடர்செய்யினும் உண்மைதவறாது இருந்தாயே; உனது ஒழுக்கங்களைமகிழ்ந்தனம். இம்மூவுலகினும்கிடைத்தற்கரியவரம் வேண்டுவனவற்றைப்பெறுக, என்று அருளிச்செய்ய அரசன் மௌனமாய் ஒன்றும்மொழியாது இருந்தனன். அதுகண்ட பிரமதேவன் நீ உன்மனதில் எண்ணியிருக்கும் இத்திகைவையொழி. அருவருத்தல்கொள்ளல். இம்மயானமோ, வேள்விச்சாலை. இவைமயிர்கள் அல்ல குசைகள். இவை சமித்துக்கள் சவங்கள்அல்ல. இவைதலைகள்அல்லயாகபாத்திரங்கள். இவ்வக்கினிகள் திரேதாக்கினிகள் பிரேதாக்கினிகள் அல்ல. இவையூபஸ்தம்பங்கள் சூலங்கள்அல்ல. அவ்வரவம் வேதமந்திரத்தின்கோஷம் பூதகணங்களின் அரவமல்ல. இருத்துவிக்குகள் இவர்கள் பூதமுதலியகணங்கள் அல்லர். உனக்குத்தலைவனும்வீரவாகுவும்புலையன் அல்லன் தருமராசன். அக்காலகௌசிகன் கலிராஜன். சத்திரகன் அக்கினிபகவான். உன்மகனைக்கடித்தபாம்பு தக்ஷகன். வேட்டையில்வந்தவிலங்குகளும் நீயவண் கண்டபூஞ்சோலையும் பூம்பொய்கையும் வெய்யிலும்மழையும்வேதாளமும்முள்ளும்கல்லும் காட்டுத்தீயும் இந்திரஜாலம் இருந்ததும் விசுவாமித்திரமுனிவர்மாயையால் உண்டாயின; அவர்தவம் இதனால் எவ்வளவு அழிந்துபோயின. உனக்கு ஞானக்கண்தருகின்றேன்பார் என்று அநுக்கிரகம்செய்தவுடன் எல்லாம் பிரமன்சொல்லின்வண்ணமாய் இருக்கக்கண்டு மனக்களிகூர்ந்து நின்றனன். உடனே தேவாதிதேவனாகிய சிவனும் அரசனைநோக்கி உனக்கென்ன மனக்கலக்கம்? இவ்வுலகில்

இதுமுதல் உன்பேர்சொன்னவர்களுக்கும் நினைத்தவர்க்கும் கேட்டவர்க்கும் எல்லாஇடரும்ஒழியும். எப்பாவமும் நீங்கும். புலையனோடுஇணங்கினும் பேசினும் உன்பேர்நினைக்க எல்லாம்ஒழியும். உன்சரிதை இவ்வுலகு உள்ளஅளவும்வழங்கக்கடவது. அதுகேட்பவர்களும் சொல்லுபவர்களும் வாழிதோறு வாழிபல்லாண்டு இடரின்றித் தூய்மனமுடையராய்வாழக்கடவர். என்றுசொல்லி மீண்டும் உனக்குவேண்டும்வரம் கேளுகஎன அருளிச்செய்ய, தம்பாதத்தில் பிரியஅன்பும் விசுவாமித்திரர் தவம்அழிந்து பிராமணியம்பேசாமையும் கருணைசெய்தல்குக. எனப்பிரார்த்திக்க மும்மூர்த்திகளும் இவன்அன்புக்குமகிழ்ந்து அவ்வாறேஅநுக்கிரகித்தனர். உபகாரிகள்இடத்தில்அன்பு இருப்பது ஓர்அருமைஎன்று சான்றோர்கொண்டிலர். அபகாரிகள்இடத்தில் அன்புள்ளவனே சற்புருஷன் எனச்சொல்வார்கள். உனக்குஅபகாரம்செய்த விசுவாமித்திர முனிவர்இடத்திலும் மிக்க அன்புவைத்தமையால் உன்னிலும்மிக்க ஞானிகளும் முனிவர்களும்யோகிகளும் அரசர்களும் எவர்களும் இல்லை என்று அங்குவந்தமுனிவர்கள் எல்லாம் பல்லாண்டுவாழ்த்தினர்.

---

## ௨௯ - ஆவது அத்தியாயம்.

## தேவர்அநுக்கிரகத்தால் குழந்தைகள் பிழைத்தல்.

சரஸ்வதி - இலக்ஷ்மி - பார்வதிமுதலியதேவிமார்களும் சந்திரமதியின் கற்புக்கும்பொறுமைக்கும்மகிழ்ந்து உன்னால் எவ்வுலகும் வெல்லப்பட்டன. உன்குணத்தினாலேயே உன்கணவனும் வாய்மைவிரதம் நிலைநிறுத்தினன்.



உன்பேர்சொன்னவர்கள் இடர்தொலைந்துபுனிதமாகக்கடவர். என்று தங்கள் கரத்தினால்தடவிஉனக்குவேண்டியவரங்களைப்பெறுக எனஉரைக்கச்சந்திரமதி இனிஎன்றும் என்கணவன் சத்தியந்தவறாதிருக்கவும் எத்தனைசன்மம் எடுத்தாலும் அரிச்சந்திரனே எனக்குக்கணவனாகும்படிக்கும் இறந்தகுழந்தைகள் இருவரும்பிழைக்கும்படிக்கும் வரந்தரவேண்டும் என்று சொன்னவுடன் அவர்கள் அவ்வண்ணமே ஆகுக எனஅநுக்கிரகித்தனராக, உடனே லோகிதாசியன் துயில்விழித்தவன்போல் எழுந்து எல்லா அணிகலனும்பூண்டு எல்லோன்போல் ஒளிவிஞ்சவனப்பே வடிவு எடுத்ததுபோல் வந்து அன்னைமடியில் உட்கார்ந்தனன். அவளும் பெற்றபொழுதினும் பெரிது உவந்தனள். அப்பொழுதேகாசிமன்னவன்குழந்தையும்பிழைத்தெழ, அந்தகாசிராசனும் அவன்மனைவியும் கண்டுஇதுமகாபதிவிரதையாகிய சந்திரமதியின் பெருமை என உணர்ந்து அவளைக்கள்ளிஎன்றுநினைத்துப் பிடித்ததற்காக மனம் வருந்தித்தன்னைக்காக்கும்படிச் சந்திரமதியைச் சரணம் புகுந்தனர். அவளும் வணங்கி இறைவன்கட்டளையின்படி எக்காலத்தில்எதுவருமோ அதுபோகாது. உங்களால்வருவதும் ஒன்றுஉண்டோ? நீவிர்மனக்கலக்கம்அறுமின் என்று மரியாதைசெய்துவிடுத்தனள். பின்புவிசுவாமித்திரமுனிவர் வந்து அனுதி அரிச்சந்திரனைத்தழுவி நீயேபிறந்ததனாற்பயன்பெற்றாய். உன்கீர்த்தி என்றும் அழியாதிருக்கத்தகுவது என்னால்பட்ட இடர்களுக்குஓர்எல்லையில்லை. நான் செய்ததுன்பத்தினால் இறையும் கலங்காது இருந்தவையே உன்போல்வார்பிறரும் உளரோ? யாவினுமுத்தநிங்குமுற்றும் இன்புகழ்வளர்க்கவேவந்தனாயினை. என்இடத்திலும் தீதுங்கலக்கம் இல்லாமல் அன்புவைத்த உன்னைநிகர்ப்பாருமுளரோ? மூவுலகிலுமிலர். எனப்புகழ்ந்து உரைத்தனர். உடனே அரிச்சந்திரன்வணங்கித் திருந்திக்கப்பிய

யையனாய், மகானுபாவரே! நும்மாலன்றோ யான்புனிதனானேன். உமது அருளால்அன்றோமும்மூர்த்திகளும் அநுக்கிரகித்தனர். அறநெறிகளில் உம்மாலன்றோநன்றாய்த் திருத்தப்பட்டேன். நீரேஎனக்கு குருவும்தெய்வமும். யான் முன்பவத்தில்இயற்றியபாவங்களின்பயனன்றோ. இப்பொழுது அநுபவித்தது. என்றுவணக்கத்துடன்கூறும் மன்னவன்கையைப்பற்றிக்கொண்டு, என்பிரார்த்தனையை நீநிறைவேற்றவேண்டும் என்று பிரார்த்திக்க, அக்குறிப்புஅறிந்த அரசன் உமக்குக்கொடுத்தபூமியை மீண்டும் கொள்வதுதவிர மற்றேது எனும் இயம்புமின். நும் ஆணைசிரமேற்கொள்வல், எனக்கு இராச்சியத்தில் விருப்பமில்லை. நும் போலும் முனிவர் ஆச்சிரமத்தின் அருகுநோன்புபுரிவதே இன்பம் எனவிண்ணப்பம்செய்ய, அம்முனிவர் அமரர் அனைவரும் கேட்க, ஓஅரிச்சந்திரமகாராசனே! கேள். நான் தேவேந்திரன் அவைக்கண் சபதம்புரிந்தகாலையில் யான் தோற்றேனேல் உன்னை உலகுக்கெல்லாம் காவலனாக்கிப் பல்லூழிகாலம் ஆளுகைசெய்யவும் பின்சுவர்க்கத்தில்பல் ஊழிகாலம் தேவராசனோடு ஓர் ஆதனத்தில் சிறப்போடு இருக்கவும் செய்கிறேன். என்று நான்பிரதிக்கினைசெய்திருந்த, எனபிரதிக்கினையைநிறைவேற்ற உன்றனுடையசங்கடா மாயின் நீபொய்யன்,நான்பொய்யனாவேன்,ஆதலின்இருவரும் பொய்யராகாது இராச்சியத்தைக்கைக்கொள். தத்தாபகாரம் என்பது இதற்கல்ல. தாதாவாயிருப்பவன் யாசகனை அழைத்துத் தாரைவார்த்து நல்கின் தானம்.உன்னைவஞ்சித்து வலியப்பறித்தது தானம்ஆகுமோ? மேலும் என் இஷ்டனுக்கு என் இராச்சியத்தைக்கொடுக்கச் சுவாதந்திரியம் எனக்கு இல்லையோ? நீதான் என்மனதுக்கு பிரியமானவன் உனக்குத்தான் இதைக்கொடுப்பேன்யான் இஷ்டமாய்க்கொடுப்பதை நீ கொள்ளல்ஆகாதோ? கூறு என்றுசொல்ல எதிர்பேசஆற்றல்இலனாய் அறநெறிக்கு உடன்பட்டு ஒன்றும்உரையாது, இருந்தனன். வசிட்டமுனிவரும் தனது சீடர்களுடன் விரைந்து,எழுந்தருள,வள



ளலும் எழுந்திருந்து இறைஞ்சினன். முனிவரும் மன்னவனைத்தழுவி விண்ணவர்கணநாப்பண்நின்று ஓமகாராஜனே! நீ என்னுரையை மெய்யுரையாக்க விசுவாமித்திர முனிவரால் எண்ணலரிய இடர்எல்லாம்பட்டனை. உன்னுடையபுகழ்முன்னிலும் மிகுதியாய் மூவுலகும்பரவியது. உன்னுடையமேன்மைக்கெல்லாம் கௌசிகமுனிவரேகாரணர். அம்முனிவர்செய்கையால் சாணையில்கடைந்தமணி போலும் ஆயுதங்களின் இரணம் அடைந்த விறல்வீரன் போலவும் விளக்கம்பெற்றனை.விசுவாமித்திரன் உனக்குஉபகாரி ஆதலால் அவரால் அநுபவித்தவெல்லாம் மறந்துவிடு. "நன்றல்லதன்றேமறப்பதுநன்று" அவர்சொன்னவண்ணம்செய். மனதில்சிறிதும் ஐயம்வேண்டாம்.என்றுவசிட்டமாமுனிவர் அருளிச்செய்யக்கேட்டஉடன் ஓம் என இசைந்து இராச்சியபாரம்கைக்கொண்டனன்.

பின்பு சுக்கிரனும்யமனும் கலியும் எய்தி இறைவ! நீ எங்களால்பட்ட இன்னலுக்கு ஓர்எல்லை இன்று. ஆயினும் நின்நீதியும் வாய்மையும் இறையளவும்திறம்பாதிருந்தனை. உன்னோடொப்பார் உலகில்எங்கும் இல்லைஉன்புகழ்இரவியும் இந்துவும் உள்ளவரையில் நிலைபெறுக. இம்மையும் மறுமையும் இடையறுஇன்பமேநுகர்கை. யாங்கள் இயற்றிய இன்னலை இதயத்து எண்ணேல் என இயம்ப, அவர்களைத்தொழுது உங்கள் அருளால் அன்றோ இடர்க்கடல்கடந்தேன் என்று கூறிவணக்கத்துடன் இருந்தனன். அப்பொழுது விண்ணில் கந்திருவர்பாட அரமகளிர்ஆடத் தெய்வமுரசம்கறங்கப் பல்லியமும்முழக்கினர். அமரர் பூமழைபொழிந்தனர். திரிமூர்த்திகளும் மகிழ்ந்துதேவேந்திரனைநோக்கி அரிச்சந்திரமகாராசனை அரிஅணைமேல் ஏற்றி அரசமுடி சூட்டுக என்றனர். அமரர்அதிபதியும் தேவர்களோடும் முனிவர்களோடும் இரத்தினம்இழைத்த சிங்காசனத்தில் நித்திலக்கவிகைநிழற்ற அரம்பையர்கவ

ரிஇரட்டச் சந்திரமதியோடுஇருக்கச்செய்து விர்பலமாய் பரிமளமுள்ள புண்ணியதீர்த்தத்தினாலும் ஆகாசகங்காசலத்தினாலும் தனக்கு வசுக்கள்செய்வதுபோல் அபிஷேகம்செய்தான். தேவதுந்துபிமுழங்கின. சுரர்கள்பூமழைபொழிந்தனர். அரம்பைமுதலியோர்நட்டமாடினர். முனிவர்கள் ஆசிமொழிந்தனர். இந்திரன் அழைக்கச் சத்தியகீர்த்தி என்னும் அமைச்சன் சதுரங்கசேனைகளுடன்பல அரியமுழக்கங்களோடு விசுவாமித்திரமுனிவரிடம் சென்று வணங்கி இப்பொழுது எங்கள் வேந்தன் நீவிர் ஆதலின் என்செயற்பாலதோ அருளுமின். அன்னவண்ணமே ஏகுகுவல் எனவிண்ணப்பஞ்செய்ய அவன்கையின் நின்று அசமுத்திரை ஆழியையாங்கி அரிச்சந்திரன் அத்தத்தில் ஈந்து மனம்மகிழ்ந்து இவ்வுலகம் முற்றும் ஆளுக பல்லாற்றுண்டுவாழுக என ஆசீர்வதித்து முடியுங்கவித்துக்கயரிவீசக்கவிகைநிழற்றச்சந்திரமதியோடு அயோத்திநகரம் எய்துகஎன ஆசிகூறினர். அமரர் அனைவருந்தத்தம் இடம் சென்றனர். விசுவாமித்திரமுனியுந்தன்தவம்இழந்ததுக்குத் திருல்முகம்வாடிமீண்டும்தவம்இயற்ற வனஞ்சென்றனர்.

---

## ௯0 - ஆவது. அத்தியாயம்.

### அரிச்சந்திரமகாராசன்மீண்டும்அயோத்தியில் அரசாளுதல்.

அரிச்சந்திரமகாராசனும் கரிகளும் பரிகளும் இரதங்களும் பதாதிகளுஞ்சூழ குடிகளும் அமைச்சர்களும் சேனைமயரும் கொண்டாட இரத் [illegible] மைத்து நித்திலத்தவசங்கள்கட்டிப் பொன்னினும் மணியினும்சமைத்து உச்சயிச்சிரவம்போன்ற இவுளிகள்பூட்டிய இரதத்தில் இல்லாளோடும் மைந்தனோடும் இவர்ந்து வசிட்டமாமுனிவரைமுன்விட்டுக்கொண்டு, அரம்பை கமுகு



கன்னல்முதலிய நாட்டித் துகிர்களும் தவர்களும் தூரியதோரணங்கள் கட்டிப், பனிநீர்தெளித்துக், கஸ்தூரிமெழுகி, நித்திலச்சுண்ணமும் பொற்சுண்ணமும் பரப்பிப்பரப்பி, எங்கும்மணக்கோலங்கொண்டு மைந்தரும்மகளிரும் மகிழ்ந்துகாணக் கண்ணுக்கினியதோர்விழாவாகக் கொண்டு போனஉயிர்மீண்டும்பெற்றவர்போல் ஆனந்தக்கடலில்அமிழ்ந்துநிற்கப், பட்டணத்தில்அனைவரோடுஞ்சென்று, அந்தணர் ஆசிகூறஅரசர்கள்போற்ற மாகதர்புகழ்பாட மகிழ்வுடன்அரியணைவீற்றிருந்து, அமலன் அடியைஆராதித்து மன்னுயிர்அனைத்தும் தன்னுயிரெனக்காத்துக்கொண்டுஅரசாண்டு மன்னவர்க்குமன்னவனாய்வீற்றிருந்தனன். இவ்வண்ணம் சின்னாள்கழிந்தபின் வசிட்டமுனிவர் எழுந்தருள மன்னவன் எழுந்து எதிர்கொண்டு சோடசஉபசாரஞ்செய்தமணி ஆசனத்தில்இருத்திமகிழ்ந்திருக்கையில் ஆங்கு இருந்த சுயக்கியமுனிவர் வசிட்டமாமுனிவரைநோக்கி - இவ்வரிச்சந்திரன் மகாபுருஷன் இச்சந்திரமதியும் மகாபதிவிரதை லோகிதாசியனும்பிரபாதி. இவர்களுக்கு இத்துன்பம்நேர்ந்தது ஏன்? இயமன்எனப்படுபவனுன்? சனிவிசுவாமித்திரர்கட்டளைக்குப்பயந்து காலகௌசிகனானேன்! என்றவினாவ, வசிட்டமாமுனிவர்சொல்லத்தொடங்கினர். முன் நீலலோகிதன்என்னும் அரசன் மூவுலகாட்சிதனக்குவேண்டும் என்று விசுவாமித்திரமுனிவரைப்பிரார்த்திக்கஅவர்அரசனைநோக்கிநீஎழுஜனனம்தவம்முயலவாவதுவேண்டும். அன்றி ஓர்ஜனனத்தில் மிகவும் துன்பம்அநுபவிக்கவாவதுவேண்டும். அஃதின்றி மூவுலகாட்சி நேராது. என்றபுகல, அரசன்நம்மானப்படி ஒருஜனனத்தில்துன்பமெல்லாம்நுகரநேர்ந்தேன் என்றுகூற, அவ்வண்ணமே ஆகுகஎன்றனர். அவனே அரிச்சந்திரனாய்ப்பிறந்தான். ஆதலால் விசுவாமித்திரர் பிசாத்தியாம் எல்லாம் நுகர்வித்து, மூவுலகாட்சிஅனுக்கிரகம்செய்தனர். இவ்வரசன் அக்கினிதேவன் அம்சம் என்பர். முற்காலத்தில் இவ்வுலகில்சோதி

பூரன் என்னும் வேந்தன் ஒருவன் அறநெறிதவறாது அரசாண்டு புத்திரரில்லாமல், கடவுளைக்குறித்துத் தவம் செய்து ஒருபுதல்வனைப்பெற்றான். அவன்பிறந்தகாலம் நல்லகாலமல்லவென்றும் செல்வத்துக்கு அழிவு ஆகலால் எங்கேனுங் கைவிட்டுவிடவேண்டும்என்றும் சோதிடர்கூற, மன்னன் கலங்காநிற்கையில் அமைச்சன் சொல்லலானான். முன் மதுரையென்றுபேர்பெற்றநகரத்தைச் சித்திரபானு என்பவன் ஆண்டனன். அவனுக்கு ஓர்மகள்பிறந்தாள். மணிமாலிகை என்பது அவள்பெயர். அவள் ஒருவனையும்விவாகம்புரியவிருப்பமில்லாமலிருக்கத் தந்தைகவலையுற்றுத் திருமாலைப்பிரார்த்திக்க, அப்புருஷோத்தமன் ஒருராசகுமாரன்வடிவாய்எய்தினன். மன்னவன் அக்குமாரனைநோக்கித் திருமால்என்றுஅறியாமல் உன்குலம்எது? பெற்றோர்யாவர்? பேர்என்ன? ஊர்எது? என்றுவினவ, அவன் நானோர் அரசகுமாரன் காசியபகோத்திரமுள்ளவன். பெற்றோரை நான்அறியேன். எனக்குஎல்லாம் இடந்தான். என்பேர் சீபதி - என்ன, நீ என்புதல்வியைமணம்புரியவேண்டுமென்றவேந்தன்பிரார்த்திக்கஅவ்வாறேமணம்புரிந்துகொண்டனன்; பின்சின்னாளிருந்து தன்தேயம்செல்லவேண்டும் எனக்கூற, அரசன் ஊரும்இல்லை. உற்றாருமில்லை. என்றுமுன்சொல்லி இப்பொழுது இவ்வாறு கூறலாமோ? எனவினவ, அவர்கள்தேடிவந்தால் உனக்குஇடர்வரும்என்றுகூறி, மணிமாலிகைஎன்பாளுக்குத் தன்உண்மைபகர்ந்து திருமால்போயினன். அவளுக்குக்கணவனாய் ஆரும் அறியாது வந்துகொண்டிருக்க அவள்கருவுற்றனளாகத், தோழியர்கணவனைப்பிரிந்தபின் நின்மகள் கருவுற்றனள் என்றனர், அஃதுணர்ந்து நரபதி மகளை நித்திரைசெய்கையில் ஓர்பேழையில்வைத்துஆற்றில்விட்டனன். அவள்பாற்கடல் சேர்ந்து திருமாலால் ஆதரிக்கப்பட்டு விஷ்ணுவர்த்தமானன்என்னும் ஒருபுதல்வனைப்பெற்றாள். அவன்இவ்வுலகில் சால்மலிதீவுஆண்டனன். ஆதலின் சாஸ்திரத்துக்கு அமை



த்த மகனை நீக்கிவிடின் அவனுக்கு நற்காலமுண்டாயின், சிறப்படைவான், என்று அமைச்சன்விசாரதன்கூற, அரசனும் நித்திரைசெய்துகொண்டிருக்கும்மகனைப்பெட்டியில் வைத்துப்பிரவாகத்தில்விட்டான். அப்பெட்டியை மடன் எடுத்துப்பார்த்துப் பெண்ணுயிருக்கக்கண்டுவியந்துவிடுத்தவுடன அவள்வணங்கிநிற்க, தீர்க்கசுமங்கலியாயிருஎன்று ஆசீர்வதித்தனராக, அவள் எனக்குவிவாகமேயில்லை என்னைத்தந்தைக்கு அநிஷ்டம்என்று ஆற்றில்விட்டனர், என்றுசொல்ல, அவர் என்தவத்தினால் சந்திரமதியாய் மாங்கலியசூத்திரத்தோடு பிறப்பாய்.என்று அனுக்கிரகித்துப் போயினர். உடனே இக்குளித்திறந்து மதிதயன்புத்திரியாய் அவ்வாறேபிறந்தனள். முற்பிறப்பின்பயனால் இத்துன்பம் எல்லாம்பட்டனள். முற்காலத்தில் தக்ஷகன் இந்திராணிடம்செல்லுகையில் குமாரனைஅழைத்துக்கொண்டுபோய் அலகாபுரியின் அருகில்நிறுத்தித்தானுட்செல்ல அரம்பையின்மனைவாயிலுக்குக் குறுக்காக ஓரரவுஇருப்பதை நளகூபரன்கண்டு தன்கைவாளால் அதைத்துண்டித்துக் கொன்றான். தக்ஷகன் தன்மகனைக்கொன்றதுகண்டு பாம்புகடித்துஇறக்கும்படிச்சபித்து மிருதசஞ்சீவினிமருந்தால் தன் மகனையும் உயிர்ப்பித்தனன். அந்நளகூபரன் அம்சத்திற் பிறந்தவன் லோகிதாசியன் ஆதலால் தக்ஷகனால்கடிக்கப் பட்டிறந்தான். திரிமூர்த்திகள் அநுக்கிரகத்தினால் அது நீங்கி உயிர்த்துஎழுந்தான்.

இயமன் திரிசங்குமன்னவன் தனுவோடுசுவர்க்கம்புக எண்ணி வசிட்டரைப்பணிய அவர்மறுக்க, அவன்விசுவாமித்திரமுனிவரையடைந்துதன்விருப்பமும்தனக்குக்குருசாபத்தால்சண்டாளவடிவம்வந்ததும்சொல்லிஇரக்க, அவ்விசுவாமித்திரர் தவப்பெருமையால்சுவர்க்கம்ஏற, அமரர்கண்டுபுலையன் இங்குவந்தான்என்றுபுரந்தரனிடம்புகல அவன்ஆணையால் அங்குவந்திருந்தயமன் புலையன்என்று இகழ்ந்து காலினால் தலைக்கீழாக உதைத்துத்தள்ளினான்.

அதுகண்டு சினந்த விசுவாமித்திரர் சாபத்தினால் புலையனாய் வீரசேனன் என்பவனுக்குப் புத்திரனாய் வீரவாகு என்னும் பெயரினனாய் வந்து அரிச்சந்திரனை அடிமைகொண்டவன். பின் சாபவிமோசனம் ஆகத் தன்னுலகு சென்றான். முன்னொருகாலத்தில் சூரியன் துவஷ்டாவின் மகள் சமிக்ஞையை மணந்து மனு யமன் என்னும் இருவரையும் பெற்றான். சமிக்ஞை தன் பெற்றோர் மனைக்குச் செல்ல நினைந்து சாயை என்பவளைச் சிருஷ்டித்துத் தன் கணவனுக்கும் மக்களுக்கும் தனையாக வைத்துக் கணவனுடன் சொல்லாமல் சென்றனள். சாயையும் தன்னை இன்னாள் என்று அறியாது சூரியனைச் சேர்ந்து சௌவர்ணி சனி இருவரையும் பெற்றாளாய்த் தன் சக்களத்தி மக்களை ஆதரியாமலிருக்க யமன் சமயம் பார்த்துச் சனியின் காலை ஒடித்தனன். இதனால் சூரியன் சமிக்ஞையை நாட சமிக்ஞை பெண் குதிரையின் வடிவங்கொண்டு வனத்தில் சரிக்க, இருக்க, அதைக் கதிரவன் அறிந்து தானும் குதிரையாய் வடிவம் கொண்டு அவளைச் சேர்ந்து அசுவினிதேவர்களைப் பெற்றான். அவர்கள் தேவலோகஞ் சென்றனர். சனி தன் கால் ஒடிந்து நடக்க வலியில்லானாய் நைமிசாரணியத்திற் சேர்ந்து கௌசிக முனிவர் அருளால் உபதேசிக்கப்பெற்று, தவஞ்செய்து கிரகபதத்தை அடைந்தனன். ஆதலால் சனி கௌசிகமுனிவர் கட்டளைப்படிக் காலங்கொண்டிருக்கிறான். என்று சொல்லக்கேட்டு யாவரும் மகிழ்ந்தனர். வசிட்டமாமுனிவரும் பல்லாண்டு வாழ்கவென அரசனை வாழ்த்தித் தம்மிடம் எழுந்தருளினர். அரிச்சந்திர மகாராசனும் அறநெறி தவறாது செங்கோல் செலுத்திப் பல்லாண்டு புகழோடு வாழ்ந்திருந்தனன், என்று பிரமதேவன் நாரதமுனிவருக்கு உரைத்தருளினர். என்று ஸ்ரீவேதவியாசபகவான் அருளிச்செய்த ஸ்காந்தபுராணத்தின் உட்கூறாயான அரிச்சந்திர சக்கிரவர்த்தியின் வாய்மையின் மேன்மையைச் சூதமுனிவர் உரைத்தருளச் சௌனகாதி முனிவர் அனைவரும் கேட்டு ஆனந்தமயமடைந்தனர்.

அரிச்சந்திரன் சரிதை முற்றிற்று.

# அரிச்சந்திரன் சரிதையின்

## அரும்பதவிளக்கம்.

அகங்காரம்—செருக்கு-யான் என்பது
அகடு—நடு-உள்-நடுநிலை.
அகப்பற்று—யான் என்பது.
அகம்—உள்ளம்-இடம்.
அகலிடம்—விசாலமான பூமி.
அகலும்—நீங்கும்.
அகவி—நீக்கி.
அகில்—வாசனையுள்ள ஓர் மரம்.
அக்குள்—கக்ஷம்.
அங்கி—நெருப்பு.
அங்குசம்—மாவெட்டி.
அசத்தியம்—பொய்.
அசந்து—ஓய்ந்து.
அசரணியர்—இரக்ஷகரில்லாதவர்.
அசரீரி—உடலில்லாதது.
அசனி—இடி.
அச்சுறுத்த—பயப்படுத்த.
அடகு—இலை.
அடர்க்க—எதிர்க்க-போர் செய்ய.
அடலை—சாம்பல்.
அடல்—வலி.
அடவி—காடு.
அடாதது—தகாதது.
அடி—பாதம்.
அடிகள்—சுவாமிகள்.
அடிசில்—சோறு.
அடியோம்—நாம்-வணக்கத்துடன் சொல்லுவது.
அடுத்தது—சேர்ந்தது.
அடைமழை—விடாமழை.
அடையலர்—பகைவர்.
அட்டி—இட்டு.
அட்டில்—மடைப்பள்ளி.
அட்டு—சமைத்து.
அணிகலம்—ஆபரணம்.
அணு—மிகச்சிறியபொருள்.
அணுக—கிட்ட.
அணை—படுக்கை-சேர்.
அண்ணல்—பெருமையுடையோன்-அரசன்
அதமன்—மிகவும் இழிந்தவன்.
அதர்—வழி.
அதள்—தோல்.
அதிபன், அதிபதி—தலைவன்.
அதீனம்—வசம்.
அதுக்கி—அமுக்கி-கடித்துக் கொண்டு.
அத்தம்—கை.
அத்தன்—தகப்பன்.
அநந்தன்—அழிவில்லாதவன்.
அநாதரம்—அலக்ஷியம்.
அநிஷ்டம்—இஷ்டமில்லாதது-கெடுதி.
அநீகம்—சேனை.
அநீதி—அநியாயம்.
அநுக்கிரகித்து—ஆசீர்வதித்து.

அழுதவிப்பான் — கூடவிசனப்படுபவன்.
அந்தணன் } அழகிய கருணை
அந்தணாளன் — } யுடையோன் - பார்ப்பான்.
அந்தரம் — ஆகாயம்.
அந்தர்யாமி — உள்ளே இருப்பவன்.
அந்தன் — குருடன்.
அந்தி — சாயங்காலம்.
அபயம் — அச்சமின்மை - அடைக்கலம்.
அபராதம் — பிழை.
அப்சரசு — நீரிற்பிறந்தவர் - தெய்வமகளிர்.
அமயம் — சமயம்.
அமரர் — தேவர் - மரணமில்லாதவர்.
அமராவதி — இந்திரன் நகர்.
அமர் — போர்.
அமர்த்தி — நிலைபெறச்செய்து.
அமர்ந்து — பொருந்தி - விரும்பி.
அமலன் — குற்றமில்லாதவன்.
அமளி — படுக்கை.
அமுதம் — சாவாமருந்து - தேவாமிர்தம்.
அமைந்து — அடங்கி - பொருந்தி - சம்மதித்து.
அமையும் — போதும்.
அயர்வு — வருத்தம் - சோர்வு.
அயன் — பிரமன்.
அயிராணி — இந்திரன்மனைவி.
அயின்று — தின்று.
அரக்கன் — இராக்ஷதன்.

அரண் — காவல் - மதில்.
அரதனகங்கணம் — இரத்தினத்தினாற்செய்த கைவளை.
அரமகளிர் — தெய்வப்பெண்கள்.
அரம்பை — வாழை - அப்சரஸ்திரீகளில் ஒருத்தி.
அரவம் — ஒலி - பாம்பு.
அரவு — பாம்பு.
அரற்றுகை — கூச்சலிட்டழுகை.
அரிதின் — கஷ்டமாக.
அரிது — கூடாது - அருமை.
அரிமா — சிங்கம்.
அரியணை — சிங்காதனம்.
அருகு — பக்கம் - சமீபம்.
அருக்கன் — சூரியன்.
அருக்கியம் — பூசைக்குமுன்கையில்கொடுக்கும்நீர்.
அருச்சனை — பூசை.
அருணன் — சிவந்தவன் - சூரியன்சாரதி.
அருத்தம் — திரவியம்.
அருத்தி — உண்டு.
அரும்ப — தளிக்க.
அரும்பெறல் — பெறுதற்கு அருமையான.
அருவருப்பு — அசுத்த எண்ணம்.
அருளிச்செயல் — திருவாயினால்சொல்லுதல்.
அருளும் — கிருபைசெய்கிற.
அர்ப்பணம் — கொடுத்தல்.
அலைபட்டு — இடைப்பட்டதால்பெருக்கி.
அலகை — பேய்.
அலக்கண் — துன்பம்.
அலமந்து — துக்கித்து.



அலறி — கூச்சலிட்டு.
அலைகுலைய — நடுங்க.
அலைக்கும் — ஒறுக்கும்.
அல்லல் — துன்பம்.
அல்லால் — அல்லாமல்.
அவதாறு — வீண்பழி.
அவண் — அவ்விடம்.
அவம் — பயனற்றது.
அவனி — பூமி.
அவனிதேவன் — பார்ப்பான்.
அவந்தி — காசி.
அவபிரதம் — விரதத்தின்முடிவில்ஸ்நானம்.
அவரோகணம் — இறங்குதல்.
அவா — ஆசை.
அவை — சபை.
அழுக்காறு — பொறாமை.
அளவளாய் — கலந்து.
அளற்றில் — நரகத்தில்.
அளி — வண்டு - கிருபை.
அளித்து — கொடுத்து - காப்பாற்றி.
அளிந்து — மெலிந்து.
அளை — வளை.
அறம் — தருமம்.
அறவாழி — தருமக்கடல்.
அறுசுவை — கைப்பு-தித்திப்பு-புளிப்பு-உப்பு-துவர்ப்பு-கார்ப்பு ஆகிய ஆறு உருசி.
அறுப்பான் — நீக்குபவன்.
அறைவித்து — அடிப்பித்து.
அறைந்தனர் — சொன்னார்.
அற்றம் — வேளை.
அற்று — நீங்கி - அத்தன்மையானது.
அனைவருக்கும் — எல்லாருக்கும்.

அன்ன — போன்ற.
அன்னம் — அம்சபக்ஷி.
அன்னணம் — அவ்விதம்.
அன்னை — தாய்.
அன்னோன் — அத்தன்மையானவன் - அவன்.
அஷ்டவசு — அநலன் - அநிலன் - ஆபச்சைவன் - சோமன் - தரன் - துருவன் - பிரத்தியூகன் - பிரபாசன் - என்று எண்மர்வசுக்கள்.
ஆகண்டலன் — இந்திரன்.
ஆகமம் — இறைவன் அருளிச்செய்த வேதம்.
ஆகாசவாணி — ஆகாசத்தில்சரீரமில்லாமல் தோன்றியவாக்கு.
ஆகாவாம் — வருவனவல்ல.
ஆக்கை — சரீரம்.
ஆங்கு — அவ்விடம் - அவ்விதம் - போல.
ஆசனம் — பீடம்.
ஆசாரம் — நடக்கை.
ஆசான் — குரு.
ஆசி — ஆசீர்வாதம்.
ஆடகம் — பொன்.
ஆணை — ஆஞ்ஞை.
ஆண்டகை — ஆண்தன்மையுள்ளோன் - சௌரியம்.
ஆண்டு — அவ்விடத்தில் - வருஷம் - ஆளுகைசெய்து.
ஆதலபற்றி — ஆகையால்.
ஆதிமூர்த்தி — முதன்மையான கடவுள்.
ஆதுலர் — இரப்போர்.
ஆத்மஞானம் — உயிரின் உண்மைநிலைஅறிதல்.
ஆநந்தம் — சந்தோஷம்.

ஆபத்து—துன்பம்.
ஆபத்பாந்தவன் — துன்பத்திலுதவும்உறவானவன்.
ஆம்பல்—அல்லி.
ஆய—ஆகிய-நல்ல.
ஆயத்தம்—சித்தம்.
ஆய்ந்து—ஆராய்ந்து.
ஆர—நிறைய.
ஆரணம்—வேதம்-வேதத்தின்ஓர்பிரிவு.
ஆரணியம்—காடு.
ஆராதித்து—பூசித்து.
ஆரியன்— பூசிக்கத்தக்கபெரியோன்-குரு.
ஆரோகணம்—ஏறுதல்.
ஆர்த்து—ஒலித்து-கட்டி.
ஆர்ப்பு—ஒலி.
ஆர்வம்—அன்பு.
ஆல—நட்டமிட.
ஆலயம்—கோவில்.
ஆலாங்கட்டி — உறைந்தமழைத்துளிக்கட்டி.
ஆவணம்—கடைத்தெரு.
ஆவணச்சீட்டு — அடிமைக்குளமுதம்விலைச்சீட்டு.
ஆவி—பிராணம்-புகை.
ஆழி—கடல்-சக்கரம்-மோதிரம்.
ஆழ்ந்தார்—அமிழ்ந்தார்.
ஆளி—சிங்கம்.
ஆறு—விதம்-வழி.
ஆற்றல்—வல்லமை-செய்தல்.
ஆற்றுகின்றான் — செய்கிறான்-தணியச்செய்கிறான்.
ஆற்றின்—செய்தால்.
ஆன்மா—உயிர்.
இகந்த—கடந்த-இல்லாத.

இகழ்ந்து—நிந்தித்து.
இசை—இராகம்-கீர்த்தி-தகுதி-சம்மதி.
இடவம்—எருது.
இடி—இடித்தல்-கண்டித்தல்-மேகமுழக்கம்.
இடு — மந்திரித்துப்போடு-கொடு-வை.
இடுகாடு—மயானம்.
இடுக்கண் }
இடும்பை- } துன்பம்.
இடை—நடு-இடுப்பு-ஒதுக்கு.
இடையூறு—துன்பம்.
இட்டு—வைத்து-கொடுத்து
இணர்—கொத்து-மிகுதி.
இணை—ஒப்பு-இரண்டு-சேர்-சரி.
இதம்—நன்மை.
இதயம்—மனம்.
இதழ்—உதடு.
இதிகாசம் — பழையவிருத்தாந்தம்சொல்லும்நூல்.
இந்து—சந்திரன்.
இமில்—எருதின்திமில்-முசிப்பு.
இமையவர்—தேவர்.
இம்மை—இப்பிறப்பில்அநுபவம்.
இயம்—வாத்தியம்.
இயம்பு—சொல்.
இயலான் — சொற்படிநடவான்.
இயலுகின்றன — நடக்கின்றன-திரிகின்றன.
இயற்றி—செய்து.
இயைந்து—சம்மதித்து.
இரட்ட—இருபக்கமும்வீச.



இரணம்—கடன்.
இரணியகசிபு— பொன்னிறஉடலுடையவன்.
இரதம்—இரசம்-தேர்.
இரவி—சூரியன்.
இராசி—குவியல்.
இரிக்க—ஓட்ட.
இருடி—முனிவர்.
இருத்தி—உட்காரவைத்து-வைத்து-அமுக்கி.
இருத்துவிக்குகள் — வேள்வியில மந்திரம் சொல்வோர்.
இருநிதி—மிக்கதிரவியம்.
இல்லக்கிழத்தி—மனைவி.
இவண்—இவ்விடத்தில்.
இவர்ந்து—ஏறி.
இவுளி—குதிரை.
இழிதகவு—இழிவு.
இழைத்த—செய்த.
இளங்கதிர்—இளஞ்சூரியன்
இளிவரல்—இகழ்ச்சி-அவமானம்.
இற—ஒடிய.
இறால்—தேன்கூடு.
இறுக்கி—கட்டி-அழுத்தி.
இறுதி—கடைசி.
இறுத்தனன்— ஒடித்தான்-இறுக்கிறான்-தீர்த்தான்.
இறுமாந்து—கர்வப்பட்டு.
இறுவது--ஒடிவது-அழிவது.
இறை—வரி-அரசன்-கொஞ்சம்-கடவுள்-தலைவன்.
இறைவன்— தலைவன்-கடவுள்.
இனம்—சாதி-கூட்டம்.
இனிய--இன்பமுள்ள-நல்ல.

இன்று—இப்பொழுது-இல்லை.
இன்னணம்—இவ்விதம்.
இன்னல்—துன்பம்.
இன்னா—துன்பம்-வெறுக்கத்தக்க.
இன்னே—இப்பொழுதே.
இன்—இன்பமான.
ஈட்டம்—கூட்டம்.
ஈண்டு—இவ்விடத்தில்-கூடு-நெருங்கு.
ஈந்து—கொடுத்து.
ஈமம்—சுடுகாடு.
ஈர்க்க—இழுக்க.
ஈனம்—குறைவு-இழிவு.
உகிர்—நகம்.
உக்கிரம்—கோபம்-கடுமை.
உசாவி—ஆராய்ந்து-வினாவி
உச்சரித்து—சொல்லி.
உச்சயிச்சிரவம் — உயர்ந்தகாதுள்ளது-இந்திரன்குதிரை.
உடை—வஸ்திரம்.
உட்கி—அஞ்சி-நாணி.
உட்பகைஆறு — காமம்-குரோதம்-உலோபம்-மோகம்-மதம்-மாச்சரியம்-ஆகிய உள்ளிருக்கும் பகை ஆறு.
உண்டி—சாப்பாடு.
உதித்தோன்—பிறந்தவன்.
உதிரம்—இரத்தம்.
உதிர்தல்—வீழ்தல்.
உத்தராசங்கம்— உத்தரியம்-மேலாப்பு.
உந்தி—தள்ளி.
உபசரித்து — நன்மைசெய்து.

உபநயனம்—பூணூல்தரிப்பித்தல்-குருவுக்குச் சமீபத்தில்சேர்த்தல்.
உபவீதம்—பூணூல்.
உம்பர்—தேவர்.
உயர்ந்த—மேன்மையான.
உய்த்து—கொண்டுபோய்.
உய்ய—பிழைக்க.
உரப்பி—வெருட்டி.
உருத்திரமூர்த்தி—சிவன்.
உரறி—பெருங்கோபங்கொண்டு-கர்ச்சித்து.
உருத்து—கோபித்து.
உருப்பசி—ஊர்வசி-ஓர் அப்சரச்.
உரும்—இடி.
உருவி—துலைத்து - உறைநீக்கி.
உரோசனை—கோரோசனம்
உலகம்—பூமி-லோகம்.
உலப்ப—கெடுக்க.
உலம்—திரண்டகல்.
உலோகிதாசியன்—சிவந்தமுகமுள்ளவன்- அரிச்சந்திரன்மகன்.
உவப்பு—மகிழ்ச்சி.
உவர்த்தக்க—வெறுக்கத்தக்க.
உவா—பௌர்ணமி.
உழல்வென்—அலைவேன்.
உளம்—மனம்
உழங்க—சலிக்க.
உளைந்து—வருந்தி.
உறுத்தி—உறுதிப்படுத்தி.
உறுப்பு—அவயவம்.
உறுவி—அடைவி.
உற்பவித்த—பிறந்த.

உற்பாதம்—இங்குக்குமுற்குறி.
உற்று—அடைந்து.
உன்னி—நினைத்து.
ஊக்கம்—உள்ளக்கிளர்ச்சி-தைரியம்.
ஊங்கு—மேற்பட்ட.
ஊண்—சாப்பாடு.
ஊதியம்—இலாபம்.
ஊர்தி—வாகனம்.
ஊர்ந்து—ஏறி.
ஊழி—பிரளயகாலம்.
ஊழ்—விதி.
ஊறி—உறைந்து.
ஊறு—நைந்து.
ஊற்றுக்கண்—ஊற்றுசுரக்கும்இடம்.
ஊன்—மாமிசம்.
எங்கண்—எவ்விடம்.
எச்சம்—சந்ததி.
எஞ்சிய—குறைந்த-மிகுந்த.
எண் அளவை—பிரத்தியக்ஷம்-அநுமானம்-ஆகமம்-அருத்தாபத்தி- உவமானம்-அபாவம்-சம்பவம் - ஐதிகம்- ஆக பிரமாணங்கள்-எட்டு.
எண்மடங்கு—எட்டுபங்கு.
எம்பெருமான்—எமதுகடவுள்.
எயினர்—வேடர்.
எய்தி—வந்து-அடைந்து.
எய்துவித்து—அடைவித்து.
எய்யாமை—தப்பாமல்.
எரி—நெருப்பு.
எரிவாய்—நெருப்புள்ள ஓர் நரகம்.
எல்லோன்—சூரியன்.
எவன்—என்ன.



எவ்வாறுரு—எவ்வகையால்.
எஃகு—எஃகு.
எழுதீவு—நாவல்-இறலி-குசை-கிரவுஞ்சம்-புட்கரம்-தெங்கு-கமுகு-ஆகத்வீபங்கள் ஏழு.
எழுநிலை—ஏழ் அடுக்குமாடம்.
எழுந்தருளுதல்—பெரியோர்வருகை.
எழுமை—ஏழுதலைமுறை-ஏழுபிறப்பு-தேவர்-மனிதர்-விலங்கு-புள்-ஊர்வன-நீர்வாழ்வன-தாவரம்.
எள்ளி—இகழ்ந்து.
எறிக்கும்—வீசும்-பிரகாசிக்கும்.
எற்ற—முட்ட-அடிக்க.
எற்று—அடி-எத்தன்மையது.
என்பு—எலும்பு.
ஏகாதசருத்திரர்—மாதேவன்-அரன்-உருத்திரன்-சங்கரன்-நீலலோகிதன்-ஈசானன்-விசயன் - வீமதேவன்-பவோற்பவன் - கபாலி-சௌமியன் - ஆக பதினொரு உருத்திரர்
ஏகாதிபதி—பூமண்டலசக்கிரவர்த்தி-தனிஅரசன்.
ஏகி—போய்.
ஏக்கம்—இரக்கம்-விசனம்.
ஏக்கற்று—விசனமடைந்து-துன்பம் அடைந்து.
ஏங்குகின்றேன்—விசனப்படுகிறேன்.
ஏடா—அடா.

ஏல்—வலி.
ஏது—காரணம்.
ஏத்தி—துதித்து.
ஏந்தல்—அரசன்.
ஏய்த்து—வஞ்சித்து.
ஏலாது—தகாது.
ஏழிசை—குரல் - துத்தம் - கைக்கிளை-உழை- இளி-விளரி-தாரம் - ஆகிய ஏழுசுரங்கள்.
ஏனம்—பன்றி.
ஏனைவினை—மற்றவினை- தீவினை.
ஐதிகம்—பூர்வமகிமை.
ஐந்தீ—ஐந்துநெருப்பு.
ஐயம்—சந்தேகம்.
ஒடுங்கினர்—அடங்கினர்.
ஒட்டேன்—சம்மதிக்கமாட்டேன்.
ஒண்ணாது—கூடாது.
ஒருங்கு—ஒருமிக்க.
ஒருதலை—நிச்சயம்.
ஒருநாயகம்—ஏகசக்கிராதிபதி.
ஒருமிக்க—ஒரேதடவையாய்.
ஒல்லை—விரைவு.
ஒவ்வ—ஒத்திருக்க-சரியாய்.
ஒழுக்கம்—ஆசாரம்.
ஒறுப்பேன்—தண்டிப்பேன்
ஒற்றுமை—ஒருமை.
ஒன்பதுவாய்ப்புலனும்—நவத்துவாரங்களிலும்.
ஓங்கும்—மிகுந்த-உயர்ந்த.
ஓச்சல்—வீசல்.
ஓசை—ஒலி.
ஓத்து—வேதம்.
ஓம்—சம்மதி.

ஓம்பி-உபசரித்து-காப்பாற்றி.
ஓரம்—பக்ஷபாதம்.
ஓரி—நரி-ஆண்நரி.
ஓலம்—ஒலி.
ககுஸ்தன்—சூரியவம்சத்து அரசன்-எருதின் முசுப்பில் ஏறியவன்.
கழிவ—நிறைந்த.
கஞ்சம்—தாமரை.
கஞ்சனம்—கண்ணாடி.
கடக்க—தாண்ட.
கடவுளர்—தேவர்.
கடிகை—துண்டு.
கடிந்து—நீக்கி.
கடுத்தது—கோபித்தது-மிகுந்தது.
கடுமை—க்ரூரம்.
கடைக்கணித்து—கடாக்ஷித்து.
கடைத்தலை—தலைவாயில்.
கடைப்பிடித்து—உறுதியாகப்பிடித்து.
கடையுகத்தீ—யுகாந்தகால அக்கினி.
கட்டணம்—ஏற்பாடுசெய்த வரிப்பணம்.
கட்புலம்—கண்ணிடம்-கண்ணறிவு.
கணம்—கூட்டம்-பேய்-க்ஷணம்-சிறிது.
கணியாது—இலக்ஷியம் செய்யாமல்-பாராமல்.
கணை—அம்பு.
கண்காணிக்கும்—கண்டுகாவல்செய்யும்.
கண்டசர்க்கரை—கற்கண்டு
கண்ணுறல்—பார்த்தல்.
கண்ணோட்டம்—தாக்ஷிணியம்.

கதம்—கோபம்.
கதம்பம்—பலவகைகூடியது
கதி—வழி-பதவி-ஆதரவு.
கதிர்—கிரணம்.
கதிரவன்—சூரியன்.
கதுப்பு—கன்னம்.
கந்தரம்—கழுத்து.
கந்திருவர்—தேவசாதியரில் ஒருவர்-குதிரைமுகமுள்ளவர்.
கமண்டலம்—முனிவர்பாத்திரம்-மரத்தால்செய்தது.
கமலம்—தாமரை.
கமழும்—பரிமளிக்கும்.
கமுகு—பாக்குமரம்.
கம்பீரம்—பெருமை.
கயப்பூ—குளத்தில் உண்டாகியபூ.
கயவன்—மூடன்-கீழ்மகன்
கரம்—கை.
கரவாது—ஒளிக்காமல்.
கரவாளம்—கத்தி.
கரவு—வஞ்சனை-திருடுதல்-ஒளித்தல்.
கரா—முதலை.
கரி—சாக்ஷி.
கருணாநிதி—கிருபைக்கு இருப்பிடம்.
கருணை—கிருபை.
கருத்தன்—படைப்பவன்-கடவுள்.
கருவுயிர்த்தனள்—பெற்றாள்.
கருவுற்று—கர்ப்பமாய்.
கருனை—கறி.
கரைந்து—விசனப்பட்டு.
கர்மப்பிரஷ்டன்—கருமத்திலதவறினவன்.



கர்மாநுட்டானம்—கருமத்தைச்செய்தல்.
கலவை—பலவாசனையுள்ள சாந்து.
கலன்—ஆபரணம்.
கலிபுருஷன்—சனி.
கலுழ்ந்து—அழுது.
கலை—சாஸ்திரம்-மான்.
கலைமகள்—சரஸ்வதி.
கவந்தம்—தலையில்லா உடல்
கவயமா—பசுபோன்றமிருகம்-காட்டுப்பசு.
கவரி—சவரி-சாமரை.
கவரிமான்—சமரிமான்.
கவரும்—கிரகிக்கும்.
கவலை—துன்பம்.
கவன்று—துன்பப்பட்டு.
கவாடம்—கதவு.
கவிகை—குடை.
கழகம்—சபை.
கழல்—வீரகண்டை-பாதம்.
களங்கம்—அழுக்கு-குற்றம்.
களத்திரம்—மனைவி.
களி—சந்தோஷம்.
களைத்து—சோர்ந்து.
களைகண்—ஆதாரம்.
களைந்தன—நீக்கின.
கறங்க—ஒலிக்க.
கறுவு—கோபம்-மச்சரம்.
கற்பகம்—நினைத்ததைக்கொடுப்பது-மந்தாரம்-பாரிசாதம்-சந்தனம்-கற்பகம்-அரிசந்தனம்-எனஐந்து-தெய்வமரம்.
கனகமயம்—பொன்நிறம்.
கனல்—நெருப்பு.
கனவில்—கனவில்.
கனி—பழம்.

கனிந்து—பழுத்து-இரங்கி.
கன்னல்—கரும்பு.
கன்னிகாமாடம்—கலியாணமாகாதபெண் இருக்குமமாளிகை.
கன்றி—வெந்து-நொந்து.
கா—சோலை-காப்பாற்று-காவடி.
காட்டம்—விறகு.
காட்டுப்பரி—காட்டுக்குதிரை.
காண்பான்—பார்க்கும்பொருட்டு.
காண்பு—பார்த்தல்.
காதல்—அன்பு.
காதலி—மனைவி.
காமதேநு—இச்சித்ததைக் கறப்பது-தெய்வப்பசு.
காப்பாளர்—காவல்செய்வோர்.
காலசக்கரம்—மேல்கீழாக மாறும்காலத்தின்சுழற்சி.
காலதண்டம்—யமனுடைய தடி.
கால்—பாதம்-காற்று-வாய்க்கால்-கக்குநிறது.
காவலற்கு—அரசனுக்கு.
காளம்—ஊதுகொம்பு.
காளை—எருது.
காறும்—வரைக்கும்.
காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்—சமயம்வாய்த்தபோது காரியத்தைமுடித்துக்கொள்.
கானனம்—காடு.
கான்—காடு
கான்முளை—பிள்ளை.
கிங்கரர்—சேவகர்.

கிஞ்சித்து—கொஞ்சம்.
கிடத்தி—படுக்கவிட்டு.
கிராதர்—வேடர்.
கிருத்தியம்—தொழில்
கிழவன்—உரியவன்.
கிளைகள்—உறவினர்.
கின்னரம்—ஓர்வகைவாத்தியம்.
கீடம்—புழு.
கீதம்—பாட்டு.
குசை—தருப்பை.
குஞ்சி—தலைமயிர்.
குடர்—குடல்.
குடாரம்—கோடாலி.
குடைந்து—அமிழ்ந்து-மூழ்கி.
குணதிசை—கிழக்குத்திக்கு
குணத்தொனி—நாண் ஒலி.
குண்டிகை—கமண்டலம்.
குதூகலம்—சந்தோஷம்.
கும்பம்—பானை.
குயிற்றி—இழைத்து.
குரம்—குளம்பு.
குரிசில்—அரசன்.
குருதி—இரத்தம்.
குரோசம்—கூப்பிடுதூரம்.
குலமகள்—நற்குல ஒழுக்கமுடையபெண்.
குலைந்தனர்—நடுங்கினர்.
குவடு—மலைச்சிகரம்.
குவளை—நீலஉற்பலம்.
குழகன்—சிறுவன்-அழகன்.
குழம்பு—குழைசேறு.
குழவி—குழந்தை.
குழாம்—கூட்டம்.
குழூஉ—கூடி.
குறளன்—குள்ளன்.
குறிப்பு—அபிப்பிராயம்.

குறுகினன்—கிட்டினன்-வந்தான்.
குனித்து—வளைத்து.
குன்ற—குறைய-கெட.
கூகை—கோட்டான்.
கூசி—அஞ்சி.
கூத்தாட்டவை—கூத்தாடுகிறசபை.
கூந்தல்—பெண்தலைமயிர்.
கூரிய—கூர்மையான.
கேசம்—தலைமயிர்.
கேசரி—சிங்கம்.
கேடகம்—கத்திவெட்டைத்தடுக்கும்வட்டம்.
கேணி—கயம்-ஊற்று.
கேண்மை—சினேகம்.
கேதனம்—துவசம்.
கேள்—உறவு-சினேகம்.
கேளிர்—உறவினர்.
கைம்மலை—யானை.
கையர்—வஞ்சகர்.
கையொத்து—கையொப்பம்-கையெழுத்து.
கொக்கரித்து—வீராவேசத்தாற்கூவி.
கொடிஞ்சி—தேர்முனை.
கொய்வாய்—அறுப்பாய்-பறிப்பாய்.
கொழுநன்—கணவன்.
கொள்ளகில்லான்—வாங்கத்திறமில்லாதவன்.
கொற்றவன்—அரசன்.
கோசருமம்—பசுவின்தோல்.
கோசலம்—அயோத்தி-பிரமனும்கிழத்தக்கதி.
கோடி—புதுவஸ்திரம்-ஓரெண்.



கோட்டுப்பூ—கிளையில்உண்டானமலர்.
கோதண்டம்—வில்
கோதி—கொழித்து.
கோமயம்—சாணி.
கோமறுகு—இராசவீதி.
கோரகர்ச்சனை—பயங்கரமானமுழக்கம்.
கோரம்—பயப்படத்தக்கது.
கோல்தூண்ட—கலைபிடித்துச்செலுத்த.
கோவை—ஆரம்-வரிசை-மாலை.
கோள்கள்—கிரகங்கள்.
கோன்—அரசன்.
கௌசேயம்—வெண்பட்டு
சகடக்கால்—வண்டிச்சக்கரம்.
சகடு—வண்டி.
சகதீச்வரன்—உலகுக்கெல்லாம்தலைவன்.
சகலசற்குணநிதி—எல்லாநற்குணங்களுக்கும் இருப்பிடம்.
சகாயன்—துணையானவன்.
சக்கிரவர்த்திகள்—பூமிமுழுமையும்ஆண்டவர்-அறுவர்-நளன்-அரிச்சந்திரன்-புருகுச்சன்-புரூரவன்-கார்த்தவீரியன்-முசுகுந்தன்.
சங்காரதேவன்—சிவன்.
சங்காரம்—கொல்லுதல்.
சணப்பன்—சணல்நார்த்தொழில்செய்பவன்.
சண்டிவாளம்—முரட்டுக்கடாக்களுக்கு இடும் இருப்புவிலங்கு-சங்கடம்.

சதகோடி—நூறுகோடி.
சதுரங்கம்—தேர்-யானை-குதிரை-காலாள்-ஆகியநால்வகையுள்ளசேனை.
சத்தியகீர்த்தி—மெய்யானபுகழ்உள்ளவன்-அரிச்சந்திரன்மந்திரி.
சத்தியசந்தன்—மெய்யானபிரதிச்சினையுள்ளவன்.
சத்தியலோகம்—பிரமனுலகு.
சந்தம்—அழகு-குணம்.
சந்ததி—மக-வம்சம்.
சபதம்—பிரதிக்கினை.
சப்தமருத்துக்கள்—ஏழுவாயு-கிழக்கு-மேற்கு-தெற்கு-வடக்கு-மேல்-கீழ்-பல்லுயிர்-இடங்களில்-உள்ளவை.
சப்தருஷிகள்—ஏழுமுனிவர்-அத்திரி-அங்கிரசன்-கௌதமன்-சமதக்கினி-பாரத்துவாசன்-வசிட்டன்-விசுவாமித்திரன்.
சமர்க்கோலம்—யுத்தவேஷம்.
சமித்து—ஓமத்துக்குவிறகு.
சமைத்து—ஏற்படுத்தி-கட்டி.
சம்பவித்தும்—உண்டாம்.
சம்பாஷித்தல்—பேசுதல்.
சம்ஸ்காரம்—சீர்ப்படுத்தல். பிணம் சுட்டுச் சீர்ப்படுத்தல்.
சயந்தன்—இந்திரன்மகன்.
சரசு—கேணி-சுனை.
சரணம்—இடம்-அடைக்கலம்-கால்-சரணாகதி-அடைக்கலம்புகுதல்.

சரணியன்—இரக்ஷகன்.
சரம்—அம்பு.
சரயு—ஓர்நதி-சரயில் உண்டானது.
சரிக்கின்றன—திரிகின்றன-நடக்கின்றன.
சரிதை—சரித்திரம்.
சர்ப்பம்—பாம்பு.
சர்வேசுவரன்—எப்பொருளுக்கும் இறைவன்.
சவம்—பிணம்.
சவுநகாதிமுனிவர்—சவுநகர்முதலியமுனிவர் இருபத்தாறுயிரவர்.
சவுந்தரியம்—அழகு.
சவுளம்—குழந்தைகளுக்குத்தலைமயிர் வாங்கும் விரதம்.
சற்கருமம்—நல்ல காரியம்.
சற்புருஷர்—நல்லஉத்தமர்.
சாதனை—இரத்தினங்களைமாசுநீக்கச்சீர்ப்படுத்துமியந்திரம்.
சாந்து—சந்தனம்.
சாபவிமோசனம்—வைவு (சாபம்) விடுகை.
சாமம்—சமாதானம்-யாமம்.
சாயுச்சியம்—பரஞ்சோதியோடுகூடும்பதவி.
சாரம்—தேறியபொருள்.
சாரல்—பக்கம்.
சால—மிகவும்.
சிகை—குடுமி-தீக்கொழுந்து.
சிக்கி—அகப்பட்டு.
சிங்காரம்—அழகு.

சிதை—பிணஞ்சுடஅடுக்கியகாஷ்டம்.
சிதைவு—பங்கப்படுத்தல்-உருவழிதல்.
சித்தம்—மனம்.
சித்தாச்சிரமம்—தபசுசித்திக்குமிடம்-விசுவாமித்திரர்தவஞ்செய்தவிடம்.
சித்திக்கின்றன—கைகூடுகின்றன.
சித்திரபானு—அழகியசூரியன்போன்றவன்.
சிந்தாக்கிராந்தன்—மனக்கவலைகொண்டவன்.
சிந்தாமணி—நினைத்ததைத்தருந்தெய்வரத்தினம்.
சிந்தூரம்—பாளை.
சிரம்—தலை.
சிலிர்த்து—கூசி-வலிகுறைந்து.
சிலை—கல்-வில்
சில்லாறு—சிறுவழி.
சில்லி—சக்கரம்.
சிவிகை—பல்லக்கு.
சிவிங்கி—சிறுத்தைப்புலி.
சிறார்—சிறுவர்
சிறுக்கன்—சிறுவன்.
சிறுநெறி—கொடிவழி.
சிற்பரர்—ஞானத்திற்சிறந்தவுடையோர்.
சினம்—கோபம்.
சினை—கிளை-கருப்பம்.
சின்னாள்—சிலகாலம்.
சீபதி—இலக்குமிகணவன் (திருமால்)
சீர்த்தி—புகழ்.
சீர்மை—நன்மை-செல்வம்.
சீவனம்—பிழைப்புக்குஆதாரம்-நீர்.



சுடர்—கிரணம்-தீக்கொழுந்து.
சுண்ணம்—பொடி.
சுதன்மை—தேவசபை.
சுதன்—பிள்ளை.
சுரும்பு—வண்டு.
சுரை—கள்.
சுவர்க்கம்—தேவலோகம்-சுகம்விளைக்குமிடம்.
சுவாதந்திரியம்—சுவாதீனம்.
சுவாலை—சிகை.
சுவாமித்துரோகம்—தலைவனைவஞ்சனைசெய்தல்.
சுளித்த—கோபக்குறியுள்ள.
சுறா—ஓர்வகைமீன்.
சுற்றத்தவர்—உறவினர்.
சூதமுனிவர்—ஓர்பௌராணிகர்-தேர் ஓட்டுங்குலத்திற்பிறந்தவர்.
சூத்திரம்—கயிறு.
சூலம்—முச்சிகையாயுதம்.
சூழல்—இடம்-சுற்றுதல்-ஆலோசனை.
சூழினும்—சூழ்ந்துகொண்டாலும்-ஆலோசித்தாலும்.
சூளுறவு—பிரதிக்கினை.
செந்நீர்—இரத்தம்.
செந்நெல்—செம்மைநிறமுள்ளநெல்-ஓர்வகைநெல்.
செம்மல்—அரசன்.
செயற்பாலது—செய்யத்தக்கது.
செய்தி—சமாசாரம்.
செருக்கு—கர்வம்.
செலவு—போகுதல்.

செவி—காது.
செவிலி—வளர்க்குந்தாய்.
செறிந்த—நெருங்கி-மிகுந்து.
சேதித்து—அறுத்து-வெட்டி.
சேமம்—க்ஷேமம்-காவல்.
சேய்மை—தூரம்.
சேனை—படை.
சைவலம்—வேலம்பாசி-(கொடிப்பாசி)
சொரியினும்—எறிந்துவிட்டாலும்.
சோடசஉபசாரம்—பதினாறுநன்மைசெய்தல்-ஆசனம்கொடுத்தல்-கைகழுவநீர்தரல்-கால்கழுவநீர்தரல்-முக்குடிநீர்தரல-நீராட்டல்-ஆடைசாத்தல்-முப்புரிநூல்தரல்-சந்தனம்பூசல்-மலர்சாத்தல்-அக்ஷதைதூவல்-தூபம்-தீபம்-கற்பூர-ஆரத்தி-அமுதமளித்தல்-அடைக்காய்தரல்-மந்திரமலர்-அர்ச்சித்தல்.
சோதிடர்—ஜோசியம்உரைப்பவர்.
சோதிமண்டலம்—ஒளியின்சுழற்சிமிகுதி.
சோதிமான்—ஒளியுள்ளவன்.
சோரம்—பெருக.
சோர்வு—தளர்ச்சி.
ஞாளி—நாய்.
தகனம்—கொளுத்தல்.
தசை—மாமிசம்.
தடவந்து—தடவி.

தடி—இறைச்சி.
தடித்த—பருத்த.
தடுமாறி—அலைந்து.
தணந்து—நீங்கி-பிரிந்து.
தணரில்—பிரிந்தால்-நீங்கினால்.
தண்டம்—சிட்சை-தடி-அடித்தல்.
தண்டு—சேனை-தடி.
தண்டுலம்—அரிசி.
தண்ணுமை—ஒருபக்கப்பறை
தண்ணென்ற—குளிர்ந்த.
தண்மை—குளிர்ச்சி.
ததும்பும்—நிரம்பும்.
தத்தம்—தானம்-தானஞ்கொடுக்கப்பட்டது.
தத்தாபகாரம்—கொடுத்ததைமீண்டும்கவர்தல்.
தத்துவம்—பொருள்களின்உண்மை.
தந்தகோடகன்—ஓர்அசுரன்-பல்லினால்பயங்கரமானவன்.
தபோபங்கம்—தவத்துக்கு இடையூறு.
தபோதனர்—தவத்தையே பொருளாகஉடையவர்.
தபோவனம்—தவம்செய்யும்காடு.
தமனியம்—பொன்.
தரித்து—தாங்கி-பொறுத்து.
தரு—மரம்.
தருதிர்—கொடுங்கள்.
தருமராசன்—இயமன்.
தர்ப்பணம்—திருப்திசெய்தல்.
தலைவன்—கணவன்-அரசன்-எசமானன்.
தவணை—கெடு.
தவம்—தேகத்தைவருத்திச்செய்யும்விரதம்.
தவழும்—உலாவும்.
தவறு—தப்பிதம்-நீங்கிப்போதல்.
தவிசு—ஆசனம்.
தழல்—நெருப்பு.
தளைப்பட்டது—காலில்கட்டுண்டது.
தறுவாய்—சமயம்.
தனம்—பொருள்.
தனையை—பெண்.
தனு—சரீரம்.
தாதா—கொடுப்பவன்.
தாதி—பணிப்பெண்.
தாதை—தகப்பன்.
தாபதர்—முனிவர்.
தாமதம்—காலக்கழிவு.
தாவாக்கினி—காட்டுத்தீ.
தாழ்—தாழ்ப்பாள்.
தாள்—கால்-தாழ்ப்பாள்.
தானவன்—அசுரன்.
தானம்—கொடை.
திகழும்—விளங்கும்.
திகிரி—சக்கரம்.
திகைத்து—பிரமித்து.
திக்கயம்—திசையானை-எட்டு-ஐராவதம்-புண்டரீகம்-வாமனம்-குமுதம்-அஞ்சனம்-புட்பதந்தம்-சார்வபௌமம்-சுப்பிரதீபம்.
திக்குப்பாலகர்—திசைக்காவலர்-எண்மர்-இந்திரன்-அக்கினி-யமன்-நிருதி-வருணன்-வாயு-குபேரன்-ஈசானன்.



திங்கள்—சந்திரன்.
திடசித்தை—உறுதியானமனமுடையவள்.
திண்ணம்—நிச்சயம்.
திண்ணியது—உறுதியுள்ளது-வலிது.
திளைந்த—நிறைந்த-மிகுந்த.
தியங்கின—சலித்தன-மயங்கின.
தியாகம்—கொடை.
திரள்—கூட்டம்.
திரிகரணம்—மனது-வாக்கு-சரீரம்-ஆகிய மூன்று கருவி.
திரிநேத்திரன்—முக்கண்ணுடையவன்.
திரிமூர்த்திகள்—பிரமன்-விஷ்ணு-சிவன்-ஆகியமூன்றுகடவுளர்.
திரு—செல்வம்-சிறப்பு-தாலி-இலக்குமி.
திருமகள்—இலக்குமி.
திருமங்கலியம்—தாலி.
திருஷ்டி—பார்வை.
திரேதாக்கினி—மூன்று அக்கினி-தக்ஷிணாக்கினி-காருகபத்தியம்-ஆகவநீயம்.
திரைந்து—உடலில்தோல்தளர்ந்து.
திரை—அலை.
திலகன்—நெற்றியில்புண்டரம்போல்சிறந்தவன்.
திலதம்—புண்டரம்.
திவசம்—தினம்.
திறம்ப—தப்ப.
திறம்பாக்கால்—தப்பாவிட்டால்.
திறல்—வல்லமை.
தினை—ஓர்சிறியதானியம்.
தீரம்—கரை.
தீரத்துவம்—தைரியம்.
தீரன்—தைரியசாலி.
தீர்க்கசுமங்கலி—நெடுநாள்மங்கலியத்தோடு கூடியவள்.
தீவளி—கெட்டகாற்று.
தீவினை—பாவம்.
துகள்—பொடி-தூசு.
துச்சிலை—கெட்டசுவபாவமுள்ளவள்-காலகௌசிகர்மனைவி.
துணர்—பூங்கொத்து.
துணிக்கும்—துண்டாக்கும்.
துணுக்குற்று—திடுக்கிட்டு-அச்சமுற்று.
துயர்—துன்பம்.
துயின்று—உறங்கி.
துய்த்து—அநுபவித்து.
துருத்தி—தீஊதும்தோற்கருவி.
துருவி—தேடி-திரிந்து-ஆராய்ந்து.
துர்க்காதேவி—காளி.
துர்ப்போதனை—கெடுதியைஉபதேசித்தல்.
துலாம்—உத்திரம்.
துலை—தராசு.
துவக்கம்—தொடக்கம்.
துவண்ட—இளைத்த-வாடிய.
துவாதசஆதித்தர்—தாதுரு-சக்கிரன்-அரியமன்-மித்திரன்-வருணன்-அஞ்சுமான்-இரணியன்-பகவான்-திவசுவான்-பூடணன்-சவித்திரு-துவட்டன்-ஆகிய பன்னிருவர்சூரியர்.

துவைக்க—ஒலிக்க.
துளங்கினன் — அசைந்தான்-நடுங்கினன்.
துனி—கவலை.
துளிக்காமல்— மழைபெய்யாமல்.
துளைக்கருவி — துளையுள்ளவாத்தியம்-குழல்.
துறவி—சந்நியாசி.
துன்றிய—நெருங்கிய-மிகுந்த.
துன்னின—கிட்டின-சேரிட்டன.
தூசு—வஸ்திரம்-பொடி.
தூய—சுத்தமான.
தூய்மை—சுத்தி.
தூரியம்—வாத்தியம்.
தூவி—இறகு.
தெய்வம்—கடவுள்.
தெரிப்பவன் — அறிவிப்பவன்.
தெழித்தனர்— அதட்டினர்.
தெற—வருத்த.
தென்புலத்தார்— பிதுருக்கள்.
தே—தெய்வம்.
தேக்கிட்டு—திருப்தியடைந்து-ஏப்பம்விட்டு.
தேயம்—நாடு.
தேரான்—ஆலோசியான்-அறியான்.
தேவராசன் — தேவேந்திரன்.
தேவரீர்—நீர்-பெரியோரை விளிப்பது.
தேவாதிதேவன்— எத்தேவர்க்கும்மேலானதேவன்.
தேற்றரவு— தெளிவித்தல்-தைரியஞ்சொல்லல்.
தைத்தியன்—அசுரன்.
தொடரும்—சேர்ந்த.
தொண்டு—அடிமை.
தொடை—ஆரம்.
தொழ—வணங்க.
தொழுது—வணங்கி-சேவித்து.
தொழுத்தை—பணிப்பெண்.
தொழும்பு—அடிமை.
தொழுவம்—மாடுகட்டும் இடம்.
தொன்னகரம் — பழையபட்டணம்.
தோய்வு—கலத்தல்-தங்குதல்.
தோலா—தோற்காத.
நசை—ஆசை.
நஞ்சு—விஷம்.
நடிப்பது— பாவனைசெய்வது.
நடுவண்—மத்தியில்.
நடையாட—நடக்க.
நட்டம்—கூத்து.
நண்பு—சிநேகிதம்.
நமன்—இயமன்.
நயம்—நன்மை-உபகாரம்.
நரபதி—அரசன்.
நரப்புக்கருவி— தந்திகட்டினவீணைமுதலியவை.
நரம்பு—நார்-தந்தி.
நரர்—மனிதர்.
நலியினும்—வருத்தினாலும்.
நல்கி—கொடுத்து.
நல்குரவு—வறுமை.
நவமணி— ஒன்பது இரத்தினம்- பச்சை-நீலம்-வைரம்-வைடூரியம்- புஷ்பராகம்-கோமேதகம்- பதுமராகம்-பவளம்-முத்து.



நளகூபரன்—குபேரன்மகன்.
நள்ளிரவு—நடுஇராத்திரி.
நறை—தேன்.
நன்று—நன்றாக.
நாகம்—நல்லசர்ப்பம்.
நாஞ்சில்—மதிலுறுப்பு.
நாடோறும்— பிரதிதினமும்.
நாண்—கயிறு-வெட்கம்.
நாதம்—ஒலி.
நாதன்—தலைவன்.
நாப்பண்—நடு.
நாமகரணம்—பெயரிடுதல்.
நாமன்—பெயருள்ளவன்.
நால்வாய்—யானை-தொங்கும்வாயுடையது.
நாவலர்—வித்துவான்கள்.
நாளிகம்—துப்பாக்கி.
நான்றது—தொங்கியது.
நிகர்த்த—ஒத்த.
நிகழ—நடக்க.
நிணம்—கொழுப்பு.
நிதி—திரவியம்.
நித்தியம்— தினமும்செய்வது-நிலையானது.
நித்திலம்—முத்து.
நிமித்தம்—காரணம்.
நியமம்— ஏற்பாடு-விரதம் - கட்டளையாய்ச்செய்வது.
நிரபராதி— குற்றம்அற்றவன்.
நிராகாரன்— உணவில்லாதவன்.
நிருபன்—அரசன்.
நிர்ப்பந்தம்—வலிமை.
நிர்மாணித்த—செய்த- சிருஷ்டித்த.
நிர்மானுஷியம்—மனுஷியர் இல்லாதது.
நிலவு—நிலா-சந்திரனொளி.
நிலையாது—நிலையாயிராது.
நிவந்து—உயர்ந்து.
நிழற்ற—நிழல்செய்ய.
நிற்பது — நிலையாயிருப்பது.
நின்மலன்— குற்றமில்லாதவன்.
நீசன்—இழிவானவன்- கீழ்மகன்.
நீடு—நெடுங்காலம்.
நீவிர்—நீங்கள்.
நீறு—சாம்பல்.
நுகர—அநுபவிக்க.
நுண்ணுணர்வு—சிற்றுணர்வு.
நுதல்—நெற்றி.
நுவலுவீர் — சொல்லுவீர்கள்.
நெகிழ்ந்த—தளர்ந்த.
நெஞ்சம்—மனது.
நெடுமால்—விஷ்ணு- மிகப்பெரியவன்.
நெட்டுயிர்ப்பு — பெருமூச்சு.
நெய்தல்—கழுநீர்ப்பூ.
நெருநல்—நேற்று.
நெறி—வழி.
நேமி—சக்கரம்-சக்கரவாளபருவதம்-உருளை-வட்டம்-சக்கரவாகப்புள்.
நேர்மை—நுண்மை.
நைமிசாரணியம்— ஓர்புண்ணியக்ஷேத்திரம்.
நைமித்திகம்— ஓர்காரணம் பற்றிச்செய்யுங்கருமம்.
நோக்கா—பார்த்து.

நோன்பு—விரதம்.
நோன்று—பொறுத்து-தவம்செய்து.
பகலவன்—சூரியன்.
பகவன்—தேவன்.
பகழி—அம்பு.
பக்தவச்சலன்—அடியாரிடத்தில்அன்புள்ளவன்.
பங்கம்—சேதம்-அழிவு-அவமானம்.
பங்கப்பட்டு—முறிபட்டு-அவமானப்பட்டு.
பங்கி—தலைமயிர்.
பச்சாத்தாபம்—பின்புஇரங்குதல்.
பஞ்சமாபாதகம்—ஐந்து பெரியபாவம் - கொலை-பொய்-களவு-கள் அருந்தல்-குருநிந்தை.
பஞ்சம்—கரிப்பு.
படப்பை—சோலை.
படிறன்—பொய்யன்-வஞ்சகன்-திருடன்.
படுகுழி—யானைபிடிக்கவீழ்த்தும்பள்ளம்.
படை—சேனை—ஆயுதம்.
படைக்கலம்—ஆயுதம்.
படைத்து—சிருஷ்டித்து.
பட்டாபிஷேகம்—இராசமுடிசூடுதற்குச்செய்யும் மங்கலஸ்நானம்.
பணி—வேலை-கட்டளை.
பணித்து—சொல்லி-கட்டளையிட்டு.
பணிந்து—வணங்கி.
பணிப்பெண்—ஏவல்செய்பவள்.
பணிவிடை—ஏவல்.
பணிவு—அடக்கம்.
பனைத்து—பருத்து.
பண்டம்—பொருள்.
பண்டாரம்—பொக்கசம்.
பண்ணவர்—தேவர்.
பண்ணை—வயல்.
பண்—இசை-சேணம்-செய்.
பதர்—கருக்காய்நெல்-உமி.
பதவி—கதி-நிலை.
பதாதி—காலாள்.
பதி—கணவன்-தலம்-நகரம்.
பதுமராகம்—செம்மைநிறமுள்ளஇரத்தினம்.
பத்தினி—மனைவி.
பந்தம்—கட்டு.
பயிலும்—பழகும்.
பரக்க—விரிவாக.
பரசு—கோடாலி.
பரஞ்சோதி—மேலான ஒளி.
பரம்—மேல்.
பரம்பரை—வரிசை.
பரலோகம்—மேலுலகம்.
பரல்—பருக்கைக்கல்.
பரவசம்—சுவாதீனமின்மை.
பரவை—கடல்.
பராகம்—பொடி.
பரி—குதிரை.
பரிகாரம்—நீக்குதல்.
பரிசனம்—ஏவலாள்கள்.
பரிதபிக்க—விசனப்பட-துன்பப்பட.
பரிதி—சூரியன்.
பரிந்து—அன்பாய்-கோபித்து.
பரிவு—அன்பு.
பருகல்—குடித்தல்.
பருப்பதம்—மலை.
பருவம்—இருது-வயது.



பருவரல்—துன்பம்.
பலகால்—பலதரம்.
பவம்—பாவம்-சன்மம்.
பழனம்—வயல்.
பழிப்பவன்—நிந்திப்பவன்.
பழுமரம்—ஆலமரம்.
பழுவம்—காடு.
பளிங்கு—வெண்ணிறமாய்த்தெளிந்தகல்.
பறிக்காரர்—அபகரியார்.
பறை—சொல்லு.
பற்றலர்—பகைவர்.
பற்று—அன்பு-பிடிப்பு.
பனிப்ப—நளிக்க-குளிர.
பன்னி—சொல்லி-பாரியை.
பன்னிலை—பலஅடுக்குமாடம்.
பாகீரதி—கங்கை - பகீரதனால் கொண்டுவரப்பட்டது.
பாங்கு—நன்று.
பாசம்—அன்பு—கயிறு.
பாடலம்—பாதிரிமரம்.
பாடு—வருத்தம்.
பாண்டம்—பானை.
பாதபங்கயம்—தாமரைமலர்போன்றபாதம்.
பாதலம்—பாதாளம்-கீழுலகு.
பாய்—வீசும்-பரவும்.
பாரம்—சுமை.
பார்ப்பனன்—பிராமணன்.
பார்ப்பினி—பிராமணஸ்திரீ.
பாலல்ல—ஊழிருவ்வாத்தகாதவை.
பானம்—குடித்தல்.
பிணி—நோய்.
பிணித்து—சேர்த்து-கட்டி.
பிணைப்பட்டேன்—பூாத்தியப்பட்டேன்.
பிண்டான்னம்—பிதருக்களுக்குஇடும் சோற்றுத்திரளை.
பிதிர்ந்து—பொடியாய்.
பித்தி—சுவர்.
பிரகலாதன்—இரணியன்மகன் (மகிழ்ச்சியுடையவன்.)
பிரசன்னன்—மகிழ்வுள்ளவன்-தெளிவுள்ளவன்.
பிரசை—சனம்.
பிரமகத்தியை—பிராமணனைக்கொன்றபாவம்.
பிரமமுனி—பிராமணரிஷி.
பிரமாணம்—சத்தியம்-அளவு.
பிரவாசம்—வெள்ளம்.
பிரலாபிக்காதே—அழாதே.
பிரவேசித்தனள்—உட்புகுந்தாள்.
பிராணநாதன்—உயிர்க்குத்தலைவன்.
பிராமணியம்—பார்ப்பாரசாதி.
பிராயச்சித்தம்—குற்றத்துக்குப்பரிகாரம்.
பிரான்—சுவாமி.

பிரேதம்—பிணம்.
பிலிற்றும்—துளிக்கும்-பெய்யும்.
பிறழான்-தப்பான்-புரளான்
பிறழின்—தவறினல்.
பிற்காலிக்கிறவன்—பின்னிடுகிறவன்.
பின்னர்—பின்பு.
பிடிக்க—தன்பப்படுத்த.
பீதாம்பரம்—பொன்னுடை.
பீளை—கண் அழுக்கு.
புகல—சொல்ல.
புகழ்—கீர்த்தி.
புகுவம்—பிரவேசிப்போம்.
புஞ்சவனம்—சீமந்தச்சடங்கு.
புட்பராகம்—ஓர் இரத்தினம்
புண்—இரணம்.
புதர்—அடர்ந்தசெடிக்குழல்.
புதல்வி—பெண்.
புதுமை—நூதனம்.
புத்திரசோகம்—மகன் இறந்ததுக்கம்.
புயல்—மேகம்.
புரக்கும்—இரக்ஷிக்கும்.
புரந்தரன்—இந்திரன்.
புரவலன்—அரசன்.
புரவி—குதிரை.
புராணம்—பழயகதை-முனிவரால் செய்யப்பட்டது-ஐந்திலக்ஷணமுடையது-பஞ்சபூதசிருஷ்டி-1-பிராணிசிருஷ்டி-2-வம்சங்கள்-3-மநுவந்தரங்கள்-4-வம்சஙகளில் உள்ளவர்சரிதம்-5.

புரம்—பட்டணம்.
புரிகுவல்—செய்வேன்.
புருகூதன்—இந்திரன்.
புருஷோத்தமன்—ஆண்களிற்சிறந்தவன்.
புரையும்—போலும்.
புரோகிதன்—வைதிகச்சடங்குசெய்விக்குங்குரு.
புலமை—அறிவு.
புலரி—விடியற்காலம்.
புலிப்போத்து—ஆண்புலி.
புலைக்குற்றம்—இழிஞரோடுகூடியகுற்றம்.
புலையன்—சண்டாளன்.
புல்வாய்—மான்.
புவி—பூமி.
புழுகு—புனுகு.
புளகம்—மயிர்க்குச்செறிதல்.
புளினம்—மணற்குன்று.
புள்—பறவை.
புறவு—குறுங்காடு-முல்லை-புறு.
புறங்கூறுவோன்—தூஷிப்பவன்.
புறப்பற்று—புறத்திலுள்ளஆசை-எனதுஎன்பது.
புனல்—நீர்.
புனிதம்—பரிசுத்தம்.
புன்கண்மை—துன்பம்.
பூசுரன்—பிராமணன்.
பூஞை—பூனை.
பூதம்—பேய்-ஐந்துபூதம்-நிலம்-நீர்-தீ-வளி-ஆகாயம்.
பூம்பட்டாடை—அழகியபட்டுவஸ்திரம்.



பூரணகும்பம்—நல்லநீர்நிறைந்தகுடம்.
பூஷணம்—ஆபரணம்
பெய்த—வைத்த-மழைபெய்த.
பெருநாடு—விசாலமானதேசத்தார்.
பெருவலி—மிக்கவல்லமை.
பேதம்—சினேகிதரைப்பிரிதல்-வித்தியாசப்படுத்தல்.
பேரவா—பேராசை.
பேரி—வாத்தியம்.
பைங்கூழ்—பயிர்.
பையவிந்த—படம்அடங்கிய.
பொடி—தூசு.
பொத்தி—மூடி.
பொதிந்த—மறைத்துவைத்த-வைத்த.
பொய்கை—குளம்.
பொருக்கென—(விரைவுக்குறிப்பு) விரைவாக.
பொருப்பு—மலை.
பொழில்—சோலை.
பொள்ளென—(சினக்குறி) கடுமையாக.
பொறி—ஐம்பொறி-யந்திரம்.
பொறை—பொறுமை-சுமை.
பொன்றின்—இறந்தால்.
போதிகை—தூண்தலையில்வைக்குஞ்சமமாடு.
போந்து—வந்து.
போற்று—துதி-காப்பாற்று.
பௌராணிகர்—புராணங்கூறுவோர்.

மகம்—யாகம்.
மகதி—நாரதன்வீணை.
மகபதி—இந்திரன்-வேள்வித்தலைவன்.
மகரக்குழை—மகரமீன்போலுருவமுள்ளகாதணி.
மகானுபாவன்—பெருந்தன்மையுள்ளவன்.
மகாபுருஷன்—பெரியோன்
மகிழ்ச்சி—சந்தோஷம்.
மகிஷி—அரசன்மனைவி.
மகுடம்—கிரீடம்.
மஞ்சம்—கட்டில்.
மஞ்சனம்—ஸ்நானம்.
மஞ்சு—மேகம்.
மடியன்—சோம்பலுள்ளவன்.
மடிமை—சோம்பல்.
மட்டு—அளவு.
மணம்—கலியாணம்-வாசனை.
மணிச்சிகரம்—இரத்தினம்இழைத்தமுடி.
மணிமாலிகை—இரத்தினமாலையென்பவள்.
மதம்—கொள்கை-இஷ்டம்.
மதலை—பிள்ளை.
மதி—புத்தி.
மது—கள்.
மநு—பதினான்கு-மநுக்கள்-சுவாயம்புவன்-சுவாரோசிஷன்-உத்தமன்-தாமஸன்-ரைவதன்-சாக்ஷுஷன்-வைவஸ்வதன்-சூரியசாவர்ணி-தக்ஷஸாவர்ணி-பிரமசாவர்ணி-தருமசா

வர்ணி - உருத்திர-சாவர்ணி - ரௌச்சியன் - பௌமன்.
மந்தம்—மென்மை.
மந்தாகினி—ஆகாயகங்கை.
மந்திரம்—ஆலோசனை.
மந்திரக்கிழவர்—மந்திரிகள்.
மந்துரை—குதிரைச்சாலை.
மமகாரம்—எனது என்னும் ஆசை.
மயானம்—இடுகாடு.
மரகதம்—பச்சை.
மரித்தான்—இறந்தான்.
மருங்கு—பக்கம்-இடுப்பு.
மருட்ட—மயக்க.
மருண்டு—மயங்கி.
மரை—மான்.
மலரவன்—பிரமன்.
மலம்—குற்றம்.
மலிந்த—நிறைந்த.
மலைந்த—போர்செய்த.
மல்கி—நிறைந்து.
மல்—மற்போர்.
மறம்—பாவம்-வீரம் - கொலை.
மறவர்—வேடர்.
மறலி—இயமன்.
மறப்பினும்—மறந்தாலும்.
மறுகு—தெரு.
மறுக்கம்—விசனம்- கலக்கம்-அலைதல்.
மறை—வேதம்-இரகசியம்.
மறைக்கிழவர்—பிராமணர்.
மனத்தொடு—மனதோடு.
மன்னி—நிலைபெற்று.
மனைக்கிழத்தி—இல்லாள்.
மன்பதை—சனம்.
மன்றம்—சபை.

மன்றல்—வாசனை.
மன்—நிலைபெற்ற.
மா—பெரிய-மாமரம் - மிருகம்.
மாகம்—பெரியஆகாயம்.
மாகதர்—அரசர்களிடத்துப் புகழ்பாடுவோர்.
மாக்கள்—மனிதர்.
மாசு—குற்றம்.
மாச்சரியம்—கறுவு.
மாடம்—உப்பரிகை.
மாடு—பக்கம்-இடம்.
மாணி—பிரமசாரி.
மாண்பு—பெருமை-நன்மை.
மாதர்—பெண்கள்.
மாதரசு—பெண்களில்தலைமையானவள்.
மாதவர்—மிக்கதவமுடையோர்-முனிவர்.
மாதானம்—மிக்ககொடை.
மாதிரம்—திக்கு,
மாயை—மயக்குதல்-வஞ்சனை.
மாய்ந்தன—அழிந்தன.
மாரி—மழை.
மாருதம்—காற்று.
மாலைக்கடன்—சாயங்காலம் செய்யவேண்டும் கருமம்.
மாழ்ந்து—மயங்கி.
மாளிகை—வீடு.
மாறு—பிரதி-பகை.
மாற்றம்—பேச்சு.
மானசம்—ஓர்சரசு-மனதினால்சிருஷ்டிக்கப்பட்டது.
மானதனன்—மானத்தையே பொருளாகக்கொண்டவன்.



மானுரி—மான்தோல்.
மான்—மிருகம்-குதிரை-பெண்.
மிடறு—கண்டம்.
மிடி—வறுமை.
மிடைந்து—நெருங்கி-மிகுந்து.
மித்திரன்—சிநேகிதன்.
மிருதசஞ்சீவினி—செத்தவரைப் பிழைப்பிக்கும் மருந்து.
மிழற்ற—சொல்ல-பாட.
மின்—மின்னல்.
மீட்சி—திரும்புதல்.
முகம்—முகம்-வழி.
முகடு—உச்சி.
முகமன்—பிரியவசனம்.
முகில்—மேகம்.
முடி—கிரீடம்.
முடிமன்னர்—கிரீடாதிபதிகள்-பதினறுவர் - கயன்-அம்பரீஷன் - சசிபிந்து - அங்கன்—பிருது-மருத்தன்-பரதன் - சுஹோத்திரன்-இராமன்-திலீபன்-சகரன்-இரந்திதேவன்-யயாதி-மாந்தாதா - பகீரதன்-சிபி.
முட்டு—குறைவு-தடை-துன்பம்.
முத்தி—மோக்ஷம்.
மும்மதம்—யானையின்மூன்றிடத்திலுள்ளமதம்.
முயற்சி—பிரயத்தனம்.
முரசம்—பேரி-மத்தளம்.
முருகன்—சுப்பிரமணியன்.
முருக்கமரம்—பலாசமரம்.
முழங்குதல்—ஒலிக்கிறது.

முளரி—தாமரை.
முலை— } குசை.
முலைமுஞ்சு }
முறை—கிரமம்.
முற்பவம்—முன்சன்மம்.
முற்று—முழுமையும்.
முற்றி—தேறி-முதிர்ந்து.
முனிவர்—இருஷி.
முனிவரர்—இருஷிகளிற்சிறந்தவர்.
முனிவு—கோபம்.
முன்றானை—ஆடையின்தலைப்பு.
முன்னம்—முன்பு.
மூதா—பழைய.
மூப்பு—கிழத்தன்மை.
மூர்ச்சனை—தம்பி நிற்குமிடம்.
மூவா—அழியாத.
மூவுலகு—கீழ்-நடு-மேல் -உலகங்கள்.
மூழை—அகப்பை.
மெச்சி—சிலாகித்து - கொண்டாடி.
மெய்—சரீரம்-உண்மை.
மேதகு—மேன்மைபொருந்திய.
மேரு—ஓர்மலை-பொன்மலை.
மேவு—கூடு-பொருந்து.
மேழி—ஏரின்உறுப்பு.
மேனகை—ஓர் அப்சரப்பெண்.
மேனி—சரீரகாந்தி-உடம்பு.
மொக்குள்—குமிழி.
மொழி—பேச்சு.
மோதின—அடித்தன.
மோழை—அசப்பை-அறிவிலான்.

மோனம்—பேசாமை.
மோக்ஷம்—விடுகை-பதவி.
யவனர்—அருக்கர்-ஓர்சாதியார்.
யதார்த்தம்—மெய்.
யா—எவை-கட்டு.
யாக்கை—உடல்.
யாங்கு— } எவ்விடத்தில்.
யாண்டு— }
யாமம்—சாமம்.
யார்—எவர்.
யாழ்—வீணை.
யூபஸ்தம்பம்—யாகபசுகட்டும் இடம்.
யோகம்—தியானம்.
வச்சிரக்கடகம்—வைரத்திலேசெய்தகைவளை.
வஞ்சினம்—சபதம்.
வடம்—ஆலமரம்-கயிறு-தோற்கயிறு.
வடவை—வடவாக்கினி-(சமுத்திரத்துள் பெண்குதிரையின் முகத்தில் உள்ளது.
வடிவம்—உருவம்.
வணிகர்—வர்த்தகர்.
வண்மை—உதாரமானகை-கொடுக்குங்கை.
வண்டானம்—நாரை.
வதிந்து—வசித்து.
வதை—கொல்லுதல்-வருத்துதல்.
வந்நி—நெருப்பு.
வயப்பட்டு-சுவாதீனப்பட்டு.
வயமா—யானை.
வயிறலைத்து—வயிற்றில்அறைந்துகொண்டு.

வயின்—இடம்.
வரம்—பிரார்த்தனை-சிறந்தது-அருள்கை.
வராகம்—பன்றி.
வரியார்—கோறூர்-கொள்ளார்.
வருக்கை—பலா.
வருடி—தடவி-பிடித்து.
வருவாய்—வரவு.
வரை—அளவு-மலை-மூங்கில்-எல்லை.
வர்ணிக்க—சிறப்பித்துச்சொல்ல.
வலம்—பிரதக்ஷிணம்.
வலித்து—நிச்சயித்து.
வலியுறுத்திய—உறுதிப்படுத்திய.
வவ்வுவார்—கவர்வார்.
வழிபடுதல்—பணிவிடைசெய்தல்.
வழுத்தினன்—துதித்தான்.
வழும்பு—நிணம்-மாம்சம்.
வளம்—செழுமை.
வளாக்கொண்டு—சூழ்ந்துகொண்டு.
வள்ளல்—வரையாதுகொடுப்போன்.
வள்ளுவர்-பறையடிப்போர்.
வள்—கூர்மை.
வறக்க—காய.
வறியன்—தரித்திரன்.
வற்கலை—மரவுரி.
வற்புறுத்தி—உறுதிப்படுத்தி.
வனப்பு—அழகு.
வன்கண்மை—கடினமனது-கடினம்.
வன்மீகம்—புற்று.



வாகுவலயம்—தோள்வளை.
வாசவன்—இந்திரன்.
வாயிற்கடை—தலைவாசலில்.
வாய்நேர்ந்து—சொல்லி-பிரதிக்கினைசெய்து.
வாய்ந்த—உடையதாய்.
வாய்ப்பு—ஒத்திருக்குஞ்சமயம்-தகுதி.
வாய்மை—உண்மை.
வாரணசி—காசி.
வாவி—குளம்.
வாழ்ந்திரு—சிறப்போடிருந்து.
வான்—ஆகாயம்-மழை-மேகம்-சிறந்த.
விகற்பம்—வேறுபாடு-சந்தேகம்.
விகிதம்—செய்யென்றுவிதித்தது.
விசயிட—சயிக்கக்கடவாய்.
விசாரதன்—சமர்த்தன்.
விசாரம்—ஆலோசனை-விசனம்.
விசாலாக்ஷி—பெரியகண்ணுடையவள்-காசியிலுள்ள தேவி.
விசித்திரம்—நானாவிதம்-ஆச்சரியகரம்.
விசித்து—கட்டி.
விசும்பு—ஆகாயம்.
விசை—வேகம்.
விஞ்சி—அதிகமாய்.
விடர்—வெடிப்பு.
விட்புலம்—ஆகாயம்.
விண்ணப்பம்—வணக்கமாய்ப் பெரியோரிடத்தில் சொல்லுதல்.

விதி—செய்யென்று ஏற்படுத்தியது-ஊழ்.
விதிர்விதிர்த்து—நடுநடுங்கி.
வித்தம்—திரவியம்.
வித்தியார்த்தி—மாணாக்கன்.
வித்து—விதை-காரணம்.
விநோதம்—வேடிக்கை-பொழுதுபோக்கு.
விபரீதம்—வேறுபாடு.
விப்பிரன்—பிராமணன்.
விமலன்—குற்றமற்றவன்-கடவுள்.
வியப்பு—ஆச்சரியம்.
வியன்—விசாலமான.
விரகு—உபாயம்.
விருத்தாந்தம்—செய்தி-சமாசாரம்.
விரை—வாசனை.
விலக்கு—நீக்கப்பட்டவை.
விலங்கு—தளை-மிருகம்.
விவாகம்—கலியாணம்.
விவாதம்—வழக்கு.
விழவு—உற்சவம்-சந்தோஷம்.
விளம்பு—சொல்.
விளர்த்து—வெளுத்து.
விளித்து—அழைத்து.
விறைத்து—குளிரால்மரத்து.
விலை—செவ்வை.
விஷ்ணுவர்த்தமானன்—விஷ்ணுவினால்விருத்தியாயினவன்.
வீயும்—அழியும்.
வீரசேனன்—சூரரானசேனையுள்ளவன்.
வீரவாகு—வீரமானகையுள்ளவன்.

வீழின்—விழுந்தால்.
வீழ்வர்—விழுவார்கள்.
வீறிய—சிறந்த-மிகுந்த.
வீற்றிருந்து—சிறப்பாயிருந்து.
வெகுளேல்—கோபியாதே.
வெங்கதிர்—சூரியன்.
வெதுப்பு--வேதல்-வெப்பம்.
வெய்து—வெம்மை.
வெரிந்—முதுகு.
வெருட்சி—பயம்.
வெல்லகிற்பார்—சயிக்கவல்லவர்.
வெள்ளி—சுக்கிரன்.
வெள்கும்—நாணத்தரும்.
வெறி— மயக்கந்தரும்பொருள்.
வெறுக்கை—திரவியம்.
வெற்றி—சயந்தரும்செயல்-சயம்.
வெற்றிடம்— வெறுமையான இடம்.
வென்றி—சயம்.
வேக்காடு—வேதல்.
வேங்கை—பெரும்புலி.
வேசரி— கழுதை-கோவேறுகழுதை.
வேட்டு—கலியாணம் செய்து-யாகம்செய்து - விரும்பி.
வேண்டுகோள்— பிரார்த்தனை.
வேதம்--அறிவிப்பது-மறை-அபௌருஷேயமானது.
வேதவியாசர்— வேதங்களின்சிக்கறுத்தமுனிவர்.
வேதனை—துன்பம்.
வேதாளம்—பிசாசு.
வேத்தவை—இராசசபை.
வேய்ந்த—மேல்பரப்பிய-மூடிய.
வேர்த்து—வேர்வையடைந்து.
வேழம்—யானை.
வேள்வி—யாகம்.
வேள்—மன்மதன்-சுப்பிரமணியன்.
வேற்றுமை—வேறுபாடு.
வைகறை—விடியற்காலம்.
வைடூரியம்—ஓர்இரத்தினம்-பூனைக்கண்போன்றஒளியுள்ளது.
வையம்—பூமி-உலகம்.
வைவஸ்வதன்—சூரியபுத்திரன்.
ஜகத்காரணம் — உலகப்படைப்புக்குளது.
ஜாதகருமம்—பிறந்தபோது செய்யும்கிரியை.
க்ஷத்திரியன்—அரசன்.
க்ஷமிக்க—பொறுக்க.
க்ஷேத்திரம்—ஸ்தலம்.

—:o:—:o:—

# குறள்.

(பக்கம்-16). அதிகாரம்—2 பாட்டு—6.

விசும்பின் — மேகத்தினின்று. துளி—மழைத்துளி. வீழினல்லால்—வீழ்ந்தால்காண்பதுஅன்றி. மற்று ஆங்கே பெய்யாதாயின். பசும்புல்தலை — பசுமையானபுல்லினுனியையும். காண்புஅரிது—காணுதல்கூடாது.

(ப-ம்-107). அதிகாரம்—11 பாட்டு—8.

நன்றல்லதன்றே மறப்பது நன்று—ஒருவர்தனக்குச் செய்ததீமையை அப்பொழுதேமறந்துவிடுவதுநல்லது.

(ப-ம்-76). அதிகாரம்—14 பாட்டு—4.

மறப்பினும்ஒத்து—வேதத்தைமறந்தாலும். கொளலாகும்—பின்ஓதிக்கொள்ளலாம். பார்ப்பான்—பிராமணனுடைய. பிறப்பு—சாதியானது. ஒழுக்கங்குன்ற—ஆசாரங்குறைய. கெடும்—கெட்டுப்போம்.

(ப-ம்-24). அதிகாரம்—24 பாட்டு—3.

ஒன்றா—இணையில்லாததாக. உலகத்து — பூமியில். உயர்ந்தபுகழ் அல்லால் — மேன்மையாகிய கீர்த்தியையன்றி. பொன்றுதுநிற்பது — அழியாமல்நிலைத்திருப்பது. ஒன்றில்—வேறொன்றில்லை.

(ப-ம்-24). அதிகாரம்—30 பாட்டு—5.

மனத்தொடு —மனதோடுபொருந்த. வாய்மைமொழியின்—உண்மையைச்சொல்வானாயின். தவத்தொடுதானம்—தவசையும்தானத்தையும். செய்வாரின்—ஒருமிக்கச்செய்பவரினும். தலை—சிறப்புடையனாவான்.

(ப-ம்-24). அதிகாரம்—30 பாட்டு—6.

பொய்யாமையன்ன— பொய்பேசாமைக்கு ஒப்பாகிய. புகழ்இல்லை — கீர்த்திக்குக்காரணம் - இப்பிறப்பில்லை. எய்யாமை—வருந்தாமல். எல்லாஅறமும்தரும்—(மறுமைக்கும்) எல்லாத்தருமங்களையும்கொடுக்கும்.

(ப-ம்-54). அதிகாரம்—30 பாட்டு—7.

பொய்யாமைபொய்யாமை—பொய்பேசாமை ஒன்றையே ஒவ்வொருகாலமும். ஆற்றின் — செய்யவல்லனாயின். (அவன்) அறம்பிற—வேறுதருமங்களை. செய்யாமைசெய்யாமை—பிறிதியுஞ்செய்யாமலிருப்பதே. நன்று—நல்லது.

(ப-ம்-54), அதிகாரம்—30 பாட்டு—9.

சான்றோர்க்கு—அறிவினால்நிறைந்தவர்க்கு. எல்லாவிளக்கும்—(புறத்திருளைநீக்கும்) விளக்கெல்லாம். விளக்கல்ல— ஒளிதரும்விளக்குகளாவனவல்ல. பொய்யாவிளக்கு — (அகத்திருளைநீக்கும்) பொய்சொல்லாமையாகியவிளக்கே. விளக்கு—ஒளிதரும்விளக்காம்.

(ப-ம்-24), அதிகாரம்—30 பாட்டு—10.

யாம்—நாம். மெய்யா—மெய்ந்நூலாக. கண்டவற்றுள்—பார்த்தநூல்களுள். வாய்மையின் — உண்மையினும். நல்லபிற — நல்லவாகியவேறுதருமங்கள். எனைத்தொன்றுமில்லை—யாதொருதன்மையாலுமில்லை.

(ப-ம்-21). அதிகாரம்—31 பாட்டு—8.

இணரெரி — பலசுடர்களையுடைய பெருநெருப்பு. தோய்வன்ன—சேர்ந்தாற்போன்ற. இன்னாசெயினும்—துன்பந்தருமவைகளை (ஒருவன்தனக்கு) செய்தாலும். வெகுளாமைபுணரின் — கோபியாதிருக்கைகூடுமானால். நன்று—நல்லது.

(ப-ம்-41). அதிகாரம்—32 பாட்டு—4.

இன்னாசெய்தாரையொறுத்தல்— தமக்குத்துன்பம் செய்தவரைத்தண்டித்தலாவது. அவர்நாண — அவர்தாமேவெட்கப்போம்படி. நன்னயம்—இனிமையானநன்றிகளை. செய்துவிடல்—செய்துநீக்குதலாம்.



(ப-ம்-57). அதிகாரம்—34 பாட்டு—2.

பெருஞ்செல்வம்—மிக்கசெல்வம்வருதல். கூத்தாட்டவை—நாட்டியமாடுகிறசபையில். குழாத்தற்று—கூட்டம்கூடுதற்கொப்பாம். போக்கும்—(அச்செல்வம்) அழிதலும், அதுவிளிந்தற்று—அக்கூட்டம்போகுதல்போலாம்.

(ப-ம்-54). அதிகாரம்—35 பாட்டு—6.

யானெனதென்னும்—(உடலை) யானென்றும் (சம்பந்தமில்லாதபொருளை) எனதென்றும் கருதுகிற. செருக்கு—மயக்கத்தை. அறுப்பான்—நீக்குபவன். வானோர்க்கு—தேவர்களுக்கும். உயர்ந்த—உயர்வாகிய. உலகம்புகும்—(மோக்ஷ) உலகத்திற்செல்லுவான்.

(ப-ம்-25). அதிகாரம்—38 பாட்டு—6.

பாலல்ல—ஊழினால் (தமக்கு) உடைமையல்லாதவை. பரியினும் — வருந்திக்காப்பாற்றினாலும். ஆகாவாம் — நிற்பனவல்லவாம். தம—ஊழினால்தமக்குள்ளவை. உய்த்துச்சொரியினும் — கொண்டுபோய்எறிந்துவிட்டாலும். போகா—நீங்குவனவல்ல.

(ப-ம்-17). அதிகாரம்—38 பாட்டு—10.

மற்றொன்று சூழினும் — வேறொன்றை ஆராய்ந்தாலும். தான்முந்துறும்— தான்முற்பட்டுநிற்கும். (அதனால்) ஊழின்—ஊழ்போல. பெருவலி—மிக்கவலிமையுடையவை. யாஉள—எவையிருக்கின்றன.

(ப-ம்-79). அதிகாரம்—71 பாட்டு—6.

அடுத்தது காட்டும்—தன்னைச்சேர்ந்தபொருளின் நிறத்தைகாட்டுகின்ற. பளிங்கேபோல்—பளிங்குக்கல்போல். நெஞ்சம்கடுத்தது—மனதில்மிகுந்தகுணத்தை. முகம்காட்டும்—முகம்தானேகாண்பிக்கும்.

---

## நாலடி.

(பக்கம்-24). அதிகாரம்—1 பாட்டு—2.

அகடுஉற— நடுநிலைமைபொருந்த. யார்மாட்டும்— எவரிடத்திலும். செல்வம்நில்லாது— ஐசுவரியம்நிற்காது. சகடக்கால்போலவரும்— தேர்உருளைபோல் கீழ்மேலாய் மாறிவரும்.

(ப-ம்-27). அதிகாரம்—1 பாட்டு—3.

குடைநிழற்கீழ்— வெண்பட்டுக்குடைநிழலில். சேனைத்தலைவராய்— சதுரங்கசேனைகளுக்குநாயகராய். சென்றோரும்— சென்ற அரசரும். ஏனைவினைஉலப்ப— இருவினை கெடுக்க. வீழ்வர்— அந்நிலையில்தவறிக்கெடுவார்கள்.

(ப-ம்-94). அதிகாரம்—2 பாட்டு—9.

முற்றியிருந்தகனி— முதிர்ந்திருந்தபழம். ஒழிய— உதிராதிருக்க. தீவளியால்— தீக்காற்றால். நற்காய்— நல்ல (இளமையான) காய்கள். உதிர்தலுமுண்டு— உதிர்ந்துவிழுதலுமுண்டு.

(ப-ம்-93). அதிகாரம்—3 பாட்டு—1.

வார்த்தொடுத்து— வாரினால்கட்டி. ஈர்க்கில் என்— இழுத்தாலென்ன. நன்றாய்ந்து— நன்றாகச்சுத்திசெய்து. அடக்கிலென்— புதைத்தாலென்ன.

(ப-ம்-24). அதிகாரம்—3 பாட்டு—7.

படுமழைமொக்குளின்— பெய்கின்றமழையில் எழுகின்றநீர்க்குமிழிபோல். பலகாலும் தோன்றிக்கெடும்— பலதரமும் உண்டாய்அழியும். இது ஒர்யாக்கை— இது ஒருஉடல்.

(ப-ம்-93). அதிகாரம்—3 பாட்டு—8.

மலையாடுமஞ்சுபோல்தோன்றி— மலையில்சஞ்சரிக்கும்மேகம்போல்காணப்பட்டு.



(ப-ம்-93). அதிகாரம்—3 பாட்டு—9.

புல்நுனிமேல்நீர்போல்— புல்லின்நுனியில் இருக்கும்பனிநீர்த்துளிபோல். நிலையாமை— சரீரம்நிலையில்லாமை.

(ப-ம்-93). அதிகாரம்—5 பாட்டு—6.

குடரும்— குடலும். கொழுவும்— மூளையும். குருதியும்— இரத்தமும். என்பும்— எலும்பும். தொடர்நரம்பொடு— சேர்ந்தநரம்புடன். தோலும்— சருமமும். இடையிடையே— நடுநடுவில். வைத்தடியும்— வைத்த இறைச்சியும். வழும்பும்— நிணமும்.

(ப-ம்-93). அதிகாரம்—5 பாட்டு—7.

ஊறி— உறைந்து. உவர்த்தக்க— வெறுக்கத்தக்க. ஒன்பது வாய்ப்புலனும்— நவத்துவாரங்களினிடத்தும். கோதிக்— கொழித்து. குழம்புஅலைக்கும்— குழைசேற்றை ஒதுக்கும். கும்பம்— குடம்.

(ப-ம்-30). அதிகாரம்—7 பாட்டு—6.

இடுநீற்றால்— மந்திரித்துப்போடும் சாம்பலால். ஒல்லை— விரைவில். பைஅவிந்த— படம்அடங்கிய. நாகம்போல்— நாகப்பாம்புபோல.

## நலவழி.

(பக்கம் - 93)

இடும்பைக்கு இடும்பை— துன்பத்துக்குக்காப்பாற்றிவைக்கும் பை.

## திருவாய்மொழி.

(பக்கம்-43). முதல்பத்து-இரண்டாம்திருவாய்மொழி. பாட்டு—2.

மன்னுயிர்— நிலையானஆத்துமாவின். ஆக்கைகள்— உடல்கள். மின்னின்— மின்னல்தோன்றிமறைவதுபோல். நிலையில— நிலையில்லாமல் அழிவன.

(பக்கம்-58). நாலாம்பத்து க-ஆவது. திருவாய்மொழி. பாட்டு—1.

ஒருகாயகமாய் — ஏகசக்ராதிபதியாய். உலகாண்டவர்—இவ்வுலகமுழுதுமாண்ட சக்ரவர்த்திகள். பெருநாடுகாண—விசாலமுள்ள தேசங்களிலுள்ளவர்யாவரும் பார்க்கும்படி. இம்மையே—இப்பிறப்பிலேயே. பிச்சை தாம்கொள்வர்—தாமே சென்று பிச்சையெடுப்பர்கள்.

(பக்கம்-26). நாலாம்பத்து க-ஆவது. திருவாய்மொழி. பாட்டு—3.

அசர்கள்தாம்— பகைவர்கள், அடிசேர்முடியினராகித்தொழ—தங்கள்கிரீடத்தை இவர்பாதத்திலே வைத்து வணங்கும்படி. இடிசேர்முரசங்கள்— இடிக்குச்சமானமாகியபேரிகைகள். முற்றத்தியம்ப இருந்தவர்—முன்றிலில் ஒலிக்கும்படி வீற்றிருந்த சக்ரவர்த்திகள். பொடிசேர்துகளாய்ப்போவர்கள்— நீறுமாய் தூசாய்ப்பறந்து போவார்கள்.

115960

(பக்கம்-26-27). நாலாம்பத்து க-ஆவது. திருவாய்மொழி. பாட்டு—6.

வாழ்ந்தார்கள்வாழ்ந்தது—இவ்வுலகில்செல்வத்தோடு சிறந்திருந்தவர் வாழ்ந்தவிதம். மாமழைமொக்குளின் மாய்ந்துமாய்ந்து ஆழ்ந்தார்என்று—பெரியமழையில்எழுந்தநீர்க்குமிழிபோல் அப்போதப்போது அழிந்துதன்பத்தில் மூழ்கினார்என்றுசொல்லும்வண்ணம். அல்லால்—அன்றி. அன்றுமுதல்இன்றுறுதியா— அக்காலம்முதல் இக்காலவரையில். வாழ்ந்தார்கள் வாழ்ந்தேநிற்பர்என்பது இல்லை—சிறப்பாயிருந்தவர்கள் சிறப்பாயே இருந்தார்கள்என்றுசொல்லப்படுவது எங்குமில்லை.

—❖—